

கல்கி
KALKI
28-11-1976
75 காசு

பிறந்த 3ம் மாதம் தொடங்கும் முதல் திட உணவு குழந்தையின் வருங்கால வாழ்வையே தீர்மானிக்கத் தக்கது.

பால் மட்டும் கொடுத்தால் போதாது என்கிறார்கள் டாக்டர்கள்



டாக்டர்கள் சிபாரிசு செய்வது

ஃபாரெக்ஸ்®

விரைவான முழு வளர்ச்சிக்கான
சரிவிகிதச் சத்து நிரவிய திட உணவு



பச்சிளம் தேகமும் மூளையும் வேகமாக வளரத் துடிப்பவை. அதற்கு ஈடுகொடுக்கப் பால் மட்டும் போதுமானதாகாது. தாய்ப்பாலிலிருந்து கெட்டி உணவுக்கு மாறவேண்டும்—மூன்றும் மாதமே; மென்றுதின்னப் பழக்குங்கள்... மேன்மையான வளர்ச்சிக்குத் திறவுகோலாக உதவும் திட உணவு ஃபாரெக்ஸ் ஒன்றுதான்—பச்சிளம் சீரண உறுப்புகளுக்கு உகந்தது.


டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்; காரணம்,
தாய்ப் பால் விடுக்கும் தலையாய மாதங்களில் பாப்பாவின் பத்துவித வளர்ச்சிகளுக்கும் நிறைவுதரும் **ஒப்பற்ற சரிவிகிதச் சத்துணவு இதுவே.**

இரத்தச் செழிப்புக்கும் தெம்புக்கும் கச்சிதமான அளவுக்கு (இதுபோன்ற வேறெந்தத் திட உணவிலும் அமையாத அளவுக்கு) இரும்புச் சத்து; எலும்புக்கு உறுதியும், பல்லுக்குப் பலமும் தரும் கால்ஷியம், வைட்டமின் D2; மூளையும் உடலும் விரைந்து வளர உகந்த புரதச் சத்துக்கள்; வளரும் உடம்புக்குத் தேவையான சக்தி—இவ்வளவும் அடங்கியது ஃபாரெக்ஸ்; எனவே... பாலூட்டும் பழக்கத்தை மாற்றுவதற்கான வேறு எந்த திட உணவையும் விட அதிகமாக அதிகத் தாய்மார்கள் ஆதரிப்பது ஃபாரெக்ஸ்.

பழங்கள், காய்கறிகள், பருப்பு, இறைச்சி, முட்டை போன்ற எந்த முக்கிய உணவுடனும் கலந்து கொடுக்க இனிமையானது ஃபாரெக்ஸ்.

மென்றுதின்னப் பழக்க...கூடிய விரைவிலே குடும்ப உணவுகளிடம் குழந்தையை இனிதே வரவேற்க...
அதி உன்னதமான முதல் திட உணவு ஃபாரெக்ஸ்.

இலவசமான எமது ஃபாரெக்ஸ் கைப் புத்தகம், 2-ரூபா தள்ளுபடித் திட்டம்—இரண்டையும் பற்றி அறிய, எழுதுங்கள்.
(புத்தகம், எந்த மொழியில் எனக்குறிப்பிட்டு) உங்கள் பெயர், விலாசத்தை எழுதி, 25 பைசா தபால் வில்லையோடு அனுப்புக இம் முகவரிக்கு: தபால் பை நம்பர் 19119, பம்பாய் 400 025.



க்ளாக்ஸோ

LIL.GF. 53-140 TH

ஒவ்வொரு நாளும் உங்கள் சருமம் சிறிது ஈரப்பசை-யையும், சிறிது இளமையையும் இழக்கின்றது.



புதிய ஜான்ஸன்ஸ்* பேபி லோஷன் ஒவ்வொரு நாளும் ஏற்படுகின்ற அந்த இழப்பை ஈடுசெய்கின்றது.

ஒரு பெண்மணியின் விலையில்லாப் பொக்கிஷம் அவளது சருமம். எனினும், வயதாக ஆக, அதை அழகாகவே வைப்பது கடினமாகும். வருங்காலத்தில் உங்கள் சருமத்தை அழகாக வைக்கவேண்டுமானால், அதை இன்று முதலே நன்று பராமரிக்கவேண்டும். ஆகையால்தான் உங்களுக்குத் தேவை புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன். இந்த விசேஷ அழகு லோஷன் சருமத்திற்கு இன்றியமையாத ஈரப் பசையை நிலை நிறுத்துகிறது.

அதோடு, கடுமையான குளிர் மாதங்களில் உங்கள் சருமத்தை மிருதுவாகவும், இளமையுடனும், அழகொளி வீசும்படியும் வைக்கிறது— ஆண்டு முழுவதும் கூட. எனவே, ஒவ்வொரு காலையிலும் இரவிலும் புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன் உபயோகியுங்கள். உங்கள் முகம், கழுத்து மற்றும் கைகளில் உபயோகித்து, உங்கள் சருமத்திற்குப் பனிபோன்ற புதுமையை அளித்திடுங்கள்.



புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன்

உங்கள் சருமத்தை மிருதுவாக, இளமை தவழ, அழகொளி வீச வைக்கின்றது.

வீட்டிலே தயாரான, சுத்தமான இனிப்பு பண்டங்கள்...



என்றாலும் நூற்றுக்கு 95 பேரைப் பீடிக்கும் நோய் பரவிட இவை வழி செய்கின்றன!

பற்சிதைவு உலகமெல்லாம் பரவிப் பெருகியுள்ள நோயாகும். இதற்கு முக்கிய காரணங்கள் என்னவென்றால், நீங்கள் அன்றாடம் உட்கொள்ளும் இனிப்பு மற்றும் மாவு பண்டங்களாகும். எனவே தான் பற்களுக்கு இடைவிடாத பாதுகாப்பு தேவைப்படுகிறது.

பினாகா ஃப்ளோரைட் பற்சிதைவுக்கு எதிராக நீடித்த பாதுகாப்பளிக்கிறது

பற்சிதைவை 50 சதவிகிதம் வரை ஃப்ளோரைட் குறைக்கிறது என விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஆகவே தவறாமல் பினாகா ஃப்ளோரைடினால், நாள்தோறும் காலையிலும் படுக்கை வேளையிலும் பல் துலக்குங்கள். இதன் தனிப்பட்ட, நீடித்து நிற்கும் ஆற்றல் பல் எனாமலைப் பலப்படுத்துகிறது. பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது.



பல்லுக்கு உறுதி,
பற்சிதைவுக்கு எதிரி —

பினாகா ஃப்ளோரைட்

U-BF/48/75 Tam



Nirlon

அதி அற்புதங்கள் நிறைந்தது!

முற்றிலும் எழில்தவழும் நிர்லான்......கருமத்தைக்
கொஞ்சி உறவாடும், காதல் மொழியின் இரகசியம்
பேசும். பிரெஸ்டலின் சிறப்புக்கு ஒப்பானது.
அதைத்தான் ஒத்திணங்கும் உயர்தரம் என்று
கூறுகிறோம். நீங்கள் மிகச்சிறந்ததைப் பெற்று
மகிழும்போது நிர்லான் நிறுவனம் மேலும் மேலும்
புதியவைகளை அளித்து உங்களை என்றுமிலா
வியப்பில் ஆழ்த்தும்

நிர்லான் ஸிந்தெடிக் ஃபைபர்ஸ்
& கெமிகல்ஸ் லிட்.

Nirlon

நிர்லான் பிரெஸ்டர் மற்றும்
நிர்லாட்டுத் தயாரிப்பாளர்கள்.

Interpub/Nir/6/75/TH



விரைவில் நிவாரணம் பெற
சக்தி வாய்ந்த, நம்பகமான
அனாஸின் சாப்பிடுங்கள்

சக்தி வாய்ந்தது: உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனாஸின். ஆகையால்தான் அனாஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.

நம்பகமானது: டாக்டரின் நம்பகமான மருந்தைப் போல பல மருந்துகளின் கலவையே அனாஸின். ஆகையால்தான் லட்சக்கணக்கானவர்கள் அனாஸின் சாப்பிடுகிறார்கள்; சிபாரிசும் செய்கிறார்கள்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவினால் ஏற்படும் வலிகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகியவற்றுக்கு அனாஸின் சக்திவாய்ந்த நிவாரணி.




சக்தி வாய்ந்த, நம்பகமான
அனாஸின்

இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி

Regd. User of TM: Geoffrey Manners & Co. Ltd.

AZ-6/76



தரத்தில் முன்னேற்றம் பெற்ற புதிய டெட் கட்டியே மார்க்கெட்டில் விற்பனையாகும் சுப்ரீம் டிடர்ஜெண்ட் கட்டி.

தூய்மையாக்கும் ஆற்றலுக்கு, நுரை வளத்திற்கு, நறுமணத்திற்கு, வேறு எந்த சலவைக் கட்டியும் இதற்கு ஈடாகாது!

உபயோகித்துப் பாருங்கள், அதன் வேறுபாட்டைக் கண்கூடாகக் காணுங்கள். ஆம் அதுதான் சுப்ரீம் டெட் கட்டி—'ஒளிரும்' வெண்மைக்கே!

பளிச்சிடும் வெண்மை,
டெட் தரும் வெண்மை


தேர்ந்தெடுங்கள் இதோ, புதுமையாக மலரும்
கோலாகல டிசைன்களின் வரிசை.
கட்டாவ்
டெரிகோஸா சேலைகள்
'டெரீன்'

லக்ஷ்மி விலாஸ் பாங்க்

வளத்திற்கு வழிகாட்டி

தவணை முதலீட்டுத் திட்டம்

சிறுகச் சேர்த்து பெருக வாழ்க மாதத்தவணையாக ரூ 20-ஐ 120 மாதங்களுக்குச் செலுத்தி ரூ 4132 திரும்பப் பெறுங்கள். ரூ 5-ன் மடங்குகளாக பெருந்தொகையாக சேமிக்க எளிய திட்டம் இது.

பொன்விழா ரொக்கப்பத்திரங்கள்

இன்று நீங்கள் முதலீடு செய்யும் ரூ 60.30/ரூ 603. 61 மாதங்களில் ரூ 100/ரூ 1000-ஆக திரும்பக் கிடைக்கிறது.

சுழல் முதலீட்டுத் திட்டம்

இன்று நீங்கள் செலுத்தும் ரூ 3000 241 மாதங்களில் ரூ 22165-ஆக உங்களுக்குத் திரும்பக் கிடைக்கிறது. மேற்படிப்புக்கோ, மகளின் திருமணத்திற்கோ, உங்கள் ஓய்வுகாலத் தேவைகளுக்கோ சேர்த்து வைக்க சீரிய திட்டம். உங்கள் திறனுக்கேற்ப பல தொகைகளும், பல கால வரைகளும்.

லக்ஷ்மி தின சேமிப்பு

ஏழையும் செல்வம் சேர்க்கும் சிறப்புத் திட்டம். உங்களாலான சிறிய தொகையை தினம் சேமியுங்கள். உங்கள் வீடு தேடிவந்து தினச் சேமிப்பு ஏற்றுக் கொள்ளப்படும். LVB சிறப்பான வட்டியும் அளிக்கிறது.

LVB

லக்ஷ்மி விலாஸ் பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்	நிர்வாக அலுவலகம்
693, ஜவஹர் கடைத் தெரு	1, பைகிராஃப்ட்ஸ் கார்டன் தெரு
கரூர் 639 001	சென்னை 600 006

மணி ஆலே
ஜெனரல் மேனேஜர்

D. வர்த்தமானன்
சேர்மன்

Kripama-LVB-513



மங்கலத் தாலி தொங்கும் சரடு
மங்கையர் வதனம் பூசும் மஞ்சள்
மாங்கனிக்கொத்து, வாழைத் தார்கள்
முற்றிச் சரிந்த நெற்கதிர்க் கோலம்
தாளின் நீரைத் தலைதரும் இழனிகள்
மெருகு குலையா பொன்னார் அணிகள்
மெல்லச் சுடர்விடும் அகலின் ஒளித்துளி
சூரிய காந்தி, சுடர்விடும் சிவந்தி
மங்கலம்
வளமை
முதிர்ச்சி



நெரோலாக்

மஞ்சள் வண்ணத்தின் பல்வேறு சாயல்கள்

GNT-81

உங்கள் குழந்தையை நடத்தும் அதே வகையில் அவனது சளியையும் அகற்றுங்கள்.

கனிவுடன். கண்டிப்புடன்.



ரபெக்ஸ்

உங்களைப் போலவே... சளியைப் போக்கும் வலிமையும், திறனும் மிக்கது. இதமும், ஆறுதலும் அளிப்பது.

ரபெக்ஸ்

ரபெக்ஸில் அடங்கியுள்ள நம்பகமான ஆற மருந்துப் பொருள்கள், (மெந்தால், கேம்ஃபர், தைமால், டர்பெண்டைன், யூகலிப்டஸ் ஆயில், நட்மெக ஆயில்) அவனுடைய மூக்கு, தொண்டை, மார்பு மற்றும் முதுகுப் பகுதிகளில் தேய்க்கும்போதே இதமான ஆறுதல் தர வல்லவை. ரபெக்ஸ் அவனது மூக்கடைப்பைத் தளர்த்தி, மார்புச் சளியை அகற்றி, மூச்சு விடுதலை எளிதாக்கும். ரபெக்ஸ் தரும் இதம், உங்களது கனிவு இவற்றினூடே அவனது புன்னகைக்கு அளவே இராது. உடனடியாகவே!

தேய்த்தாற்றும் திறனுள்ள களிம்பு. எரிச்சலூட்டாது. ஒட்டாது.

க்ளோகோடின் போன்ற நவீன மருந்துகள் தயாரிக்கும் Alembic அலெம்பிக் நிறுவனத்திடமிருந்து.

everest/665/ACW-tm.



கல்கி


நவம்பர் 28, 1976

அநல ஆண்டு

கார்த்திகை 13

“கல்கி”யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

போடு புதிர்!






படத்தில் காட்டியபடி ஒருவரிடம் உள்ள நிலத்தில் ஒரு வீடும், பத்து மரங்களும் உள்ளன. அவர் தன் ஐந்து மகன்களையும் கூப்பிட்டு வீட்டைத் தவிர ஆளுக்கு இரண்டு மரங்களும், நிலங்களைச் சமமாகவும் பிரித்துக்கொள்ளுமாறு கூறி விட்டார். அவருடைய மகன்கள் நிலத்தை எப்படிப் பிரித்துக்கொள்வார்கள்?

(விடை 66-ம் பக்கம்)

— எஸ். எஸ். தாவூது





பிரதமரின் பிறந்த நாளன்று அவரது பொருளாதார திட்டங்களுக்கு ஆதரவு தந்து எம்.ஜி.ஆர். வாழ்த்து அனுப்பியுள்ளார்!



கல்கி மலர் 36 இதழ் 18

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

புத்திசாலிகள்!

ஆச்சரியமாயிருக்கிறது ! மூக்கின் மேல் ஒரு விரலை வைத்தால் போதாது. பத்து விரல்களையும் மாறி மாறி வைத்துப் பத்து முறை ஆச்சரியப்பட்டாலும் போதாது !

எதையும் உணர்ச்சிபூர்வமாகவே அணுகுகிற இந்தக் காலத்தில் அறிவு பூர்வமாகச் சிந்தித்து ஒரு காரியம் பண்ணியிருக்கிறது மகாராஷ்டிர அரசு. இந்தப் புத்திசாலித்தனத்தைக் கண்டு வியந்து வியந்து மாளவில்லை.

கணிதத்தையும், விஞ்ஞானத்தையும் எட்டாவது வகுப்பு முதல் ஆங்கிலத்திலேயே சொல்லிக் கொடுப்பது என்று மகாராஷ்டிர அரசு தீர்மானித்துள்ளது. '' பல பேருக்கு இந்த விஷயம் பிடிக்காது என்றாலும் தேச நன்மையையும் மாணவர்களின் எதிர்கால நலனையும் உத்தேசித்து இதனைப் படிப் படியாக அமல்படுத்தப் போகிறோம் '' என்று கூறியுள்ளார் முதல் அமைச்சர் திரு எஸ். பி. சவான்.

பல பேருக்குப் பிடிக்காத விஷயம் என்பதால் நாட்டுக்குப் பயன் தரக் கூடிய ஒன்றைக் கூறாமல் விடமாட்டார் ராஜாஜி. அவர் சொன்னார் :

'' போதனா மொழியாக்காமலேயே ஆங்கிலத்தை நன்றாகக் கற்றுக்கொடுத்து விடலாம் என்று நினைப்பது பயனற்ற முயற்சி. ஆங்கில அறிவைப் புகட்ட வேண்டும் என்று ஒப்புக் கொண்ட பிறகு அதனைப் பகுதி அளவிலேனும் போதனா மொழியாக்கியே தீர வேண்டும். மொழியைப் பயன்படுத்துவதன் மூலம்தான் கற்றறிய முடியும். ஒரு குழந்தை பேச ஆரம்பிப்பதையும் பேசக் கற்றுக் கொள்வதையும் கவனித்தால் இந்த அடிப்படை உண்மை புரியும். சிறுவனானாலும் சரி, பெரியவர்களானாலும் சரி, புதிய மொழியைக் கற்க, பாடமோ அல்லது இலக்கணமோ சிறந்த உபாயம் அல்ல. அம்மொழியைப் பயன்படுத்துவதாலும் அது பயன்படுத்தப்படுவதைக் கேட்பதாலுமே நன்றாகக் கற்க முடியும். மொழியைப் பற்றிய அறிவும் அதை இலகுவாகப் பேசி எழுதும் ஆற்றலும் பெறுவது அதனைப் பயன்படுத்துவதன் மூலமே சாத்தியமாகும்.'' (ராஜாஜி நினைவு மலர்.)

மேலே, '' பகுதி அளவிலேனும் போதனா மொழியாக்கியே தீர வேண்டும் '' என்று ராஜாஜி குறிப்பிட்டதற்குச் சிறு விளக்கம் தேவைப்படுகிறது. சிக்கலான விஞ்ஞான உண்மைகளை விளக்கும் போது மாணவர்களுக்குப் புரிகிற மாதிரி சொல்ல ஆங்கிலத்தோடு பிராந்திய மொழியையும் தாராளமாக வகுப்பறைகளில் ஆசிரியர் உபயோகிக்கலாம் என்பது ராஜாஜியின் எண்ணம். இதனால் விஷயம் எளிதில் மாணவர்களுக்கு விளங்குவதோடு பிராந்திய மொழியும் துரித வளர்ச்சி பெறும். அதே நேரத்தில் மாணவர்கள் உயர் கல்வி கற்கும்போது ஆங்கில ஞானம் குறைவின்றி இருக்குமாதலால் தேசத்தின் முன்னேற்றம் துரிதப்படும்.

யதார்த்த ரீதியில் அமைந்த ராஜாஜியின் பயனுள்ள கருத்தை மகாராஷ்டிர அரசு அமல்படுத்தப் போவதை அறிந்து மகிழ்கிறோம்.

ஏற்றம் தரும் ஏற்றுமதி!

திரும்பிய பக்கமெல்லாம் திருவோடு ஏந்தி நின்ற நிலை எப்படி மாயா ஜாலம் போல் மாறிவிட்டது! அரசு கோஷமாகவே சொல்வதெனில், '' பசுமைப் புரட்சி செய்தது இந்தியாவின் சாதனை !''

உணவு உற்பத்தி அமோகமாகப் பெருகி, அரசு ஏராளமாகக் கொள்முதல் செய்து சேமித்து வைக்கப் போய் இப்போது அதுவே பிரச்னையாகிவிட்டது ! சேமித்து வைத்த தானியத்துக்குக் கொடுத்த விலை பணப் புழக்கத்தை அதிகரித்துள்ளது. சேமித்த தானியத்தை எலிகளும் பூச்சிகளும் ஒரு கை பார்க்கின்றன. பாதுகாப்புச் செலவுடன் தானியச் சேமிப்புக் கிடங்குகளுக்கு அரசு



குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தைகள் தினவிழாவில் 18 எழுத்தாளர்கள் எழுதி, 8 பதிப்பாளர்கள் தயாரித்த 21 நூல்களை கவர்னரின் ஆலோசகர் திரு பி.கே. தவே வெளியிடுகிறார்.



இதே விழாவில் நாடகப் போட்டியில் முதல் பரிசு ஏ.வி.எம். தங்கப்பதக்கம் - திரு ஆலந்தூர் கோ. மோகனரங்கத்துக்கு வழங்குகிறார் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி. சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர் திரு க. ஜெயங் கொண்டான்.

தரும் வாடகைச் செலவும் சேர்ந்து கொண்டிருக்கிறது.

அரசின் ஏராளமான பணம் இப்படித் தானிய உருவில் முடங்கிக் கிடப்பதைத் தவிர்ப்பது நலம் என்று கருதி நிர்வாக ஆற்றலும் அனுபவமும் மிக்க அறிஞர் திரு எல்.கே. ஜா (இன்று காஷ்மீர ஆளுனர்) ஒரு யோசனை கூறியுள்ளார். மராமத்துப் பணிகளுக்குக் கூலிக்குப் பதிலாகத் தானியமாகக் கொடுக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். உணவு தானிய ஏற்றுமதி பற்றியும் அரசு யோசித்து வருகிறது.

திரு ஆர். வேங்கடராமன், கூலிக்குப் பதில் உணவு தானியமாகத் தருவது காரியசாத்தியமாகப் படவில்லை என்று அபிப்ராயப்படுகிறார். சுயராஜ்யாவில் அவர் எழுதுகையில், ஒரு வேளை பருவ மழை பொய்க்குமானாலும் உள்நாட்டில் பற்றுக்குறை ஏற்பட இடமில்லாத அளவில் ஒரு கணிசமான பகுதியை ஏற்றுமதி செய்வதே சிறந்த யோசனை என்கிறார். நல்ல விலை கிடைக்குமாறு கவனித்துக் கொண்டு ஐந்து மிலியன் டன் வரை ஏற்றுமதி செய்வதால் இங்கு உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டு விடாது; தானியக் கிடங்குகளில் நெருக்கடி நிலை குறையும்; அரசாங்கத்தின் பணம் முடங்கிக் கிடக்காமல் இதர ஆக்கப் பணிகளுக்குப் பயனாகும்.

இதெல்லாவற்றையும்விடப் பெரிய நன்மை ஒன்று உண்டு. திருவோடு ஏந்தி நிற்கும் நாடு என்று ஜகத் பிரசித்தி பெற்றுவிட்ட இந்தியா, உணவு ஏற்றுமதி செய்யும் நிலைக்கு இன்று உயர்ந்துவிட்டிருப்பதை உலகம் உணர வேண்டாமா?



நியூஸிலாந்துடன் இந்தியா ஆடிய முதல் டெஸ்ட் பலவிதங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாகியது. டெஸ்ட் மாட்சுகளில் வெங்கட் வீழ்த்திய நூறாவது விக்கெட் இந்த டெஸ்டில்தான். கவாஸ்கர் இதற்கு முன் பல 'டெஸ்ட்' செஞ்சுரிகள் போட்டிருந்தாலும் தாம்நாட்டு மண்ணில் அவரது முதல் டெஸ்ட் செஞ்சுரி இந்த ஆட்டத்தின் போதுதான் கிடைத்தது. படத்தில் இடப்புறம் கவாஸ்கரின் 'ஸ்டைல்' நமக்குத் தெளிவாகிறது. மைதானத்திற்குள் வேலை இல்லாத போது பெவிலியனில் தம் குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தார் கவாஸ்கர்.

கன்ஸுமர் கவுன்ஸில் ஆஃப் இந்தியா
வின் மகத்தான கண்டுபிடிப்பு:

மூலிகைச் செடிகளின் உதவியால்
மட்டுமே உங்கள் பற்களை நோய்
களிலிருந்து காப்பாற்ற முடியும்

ஒரே நீம் டூத்பேஸ்ட்

இதில் மட்டும் தான் நீம் விதையின் குணமும் மணமும் அமைந்துள்ளது

பல் டாக்டர்களின் சர்வேயின் படி பார்த்ததில் புகழ்பெற்ற டூத் பேஸ்ட்டுகள் யாவுமே பற்களை வெண்மையாக மட்டும் வைத்துக் கொள்கிறது. பல் நோய்கள் வராமல் இது காப்பதில்லை. நோய் வராமல் தடுக்கவல்ல மூலிகையின் குணம் இப்பொழுது வரும் டூத் பேஸ்டுகளில் இல்லாதது தான் இதன் காரணம். ஆனால் நீம் டூத் பேஸ்ட் இயற்கையின் குணம் கொண்டிருக்கிறது நீம் டூத் பேஸ்ட் நீம் விதையின் எண்ணை கொண்டு தயாரிக்கப்படுவதால் இது பற்களை வெண்மையாக வைத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் நோய்கள் உங்கள் பற்களை நெருங்க விடாமல் பாதுகாக்கிறது.



வேண்டுகோள் பேரில்
இதர விபரம்

பற்களை வெண்மையாக
வும் ஆரோக்கியத்துடனும்
வைத்துக் கொள்ள தவ
றாமல் உபயோகியுங்கள்—
நீம் டூத் பேஸ்ட்

IDL/NTN 2T

கல்கத்தா கெமிக்கலின் ஒரு தயாரிப்பு

என்னெஸ்ஸென் தியேட்டர்ஸ்

அளிக்கும்

அவன் பார்த்துப்பான்

தொடர் நாடகம்

கல்கி டிசம்பர் 5உ

இதழில் ஆரம்பமாகிறது.



நடிப்புத்திறனில் மட்டுமல்ல, டைரக்ஷன் ஆற்றலிலும் தாம் மேஜர் என்று நிரூபிக்கிறார் சுந்தரராஜன்.

சிவகுமாரின் நாத்திக வாதம் வெல்லாமல் போனால் என்ன? அவர் நடிப்பு நம் உள்ளங்களை வென்று விடுகிறதே!

கோமல் சுவாமிநாதனின் விறுவிறுப்பான வசனம் இரண்டு மணி நேரத்தை இரண்டு நிமிஷங்களாக ஓடச் செய்கின்றன.

நாடகத்தின் வெற்றிக்கு மற்ற அனைவரது ஒத்துழைப்பும் கிடைத்திருக்கிறது.





மகளிர் பக்கம் ஆரம்பம்!

கல்கி பத்திரிகையின் லட்சக்கணக்கான பெண் வாசகர்களுக்கு ஒரு நற்செய்தி.

உங்களுக்கென்றே டிசம்பர் ஐந்தாம் தேதி கல்கி இதழ் முதல், இரண்டு பக்கங்களைப் பிரத்தியேகமாக ஒதுக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

இந்தப் பக்கங்களில் நீங்கள் சிறுகதை எழுதலாம், கட்டுரை வரையலாம், நகைச்சுவைத் துணுக்குகள், தகவல் குறிப்புக்கள் தரலாம்.

மகளிர் பகுதிக்காக எழுதுகிறீர்கள் என்பதையும் மொத்தத்தில் இரண்டு பக்கங்களே ஒதுக்கப்பட்டுள்ளன என்பதையும் நினைவில் கொண்டிருந்தால் போதும். கட்டுரைகள், பெண்ணுரிமை, குழந்தை

வளர்ப்பு, சமையல் குறிப்பு, அழகுக் குறிப்பு, தையல் கலை, பூ வேலை, தாம்பத்திய உறவு, விவாகரத்து, குடும்பக் கட்டுப்பாடு, விதவா விவாகம் போன்ற எந்த அம்சத்தைப் பற்றி வேணுமானாலும் இருக்கலாம். வாழ்க்கை அனுபவங்களாக விளங்கலாம். படிக்கச் சுவாரஸ்யமாக அமைந்து பிரசுரத்துக்கு ஏற்கப்படும் கதை, கட்டுரை, தகவல் குறிப்பு, நகைச்சுவை துணுக்கு முதலியவற்றுக்கு வழக்கமான சன்மானம் உண்டு. அது தவிர, இரு விசேஷப் பரிசுகளும் உண்டு!

முதல் பரிசு:

ரூ. 500/- பெறுமானமுள்ள பட்டுப் புடவை.

இரண்டாம் பரிசு:


ரூ. 200/- பெறுமானமுள்ள பிரஷர் குக்கர்.

இந்தப் பரிசுகளை அடுத்த ஆறு மாத காலத்தில் வெளியாகும் கதை கட்டுரை முதலியவற்றை மகளிராக அமைந்த குழுவினர் பரிசீலித்து வழங்குவார்கள்.

எங்கே, உங்கள் திறமைகளைக் காட்டுங்கள், பார்க்கலாம்.

முக்கிய குறிப்பு :

- உறையின் மேல் மகளிர் பகுதி எனக் குறிப்பிடவும்.
- பிரசுரத்துக்கு ஏற்காத கதை, கட்டுரை, துணுக்குகளைத் திருப்பி அனுப்ப இயலாது.
- கடிதப் போக்குவரத்து கிடையாது.
- கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- விலாசம் : ஆசிரியர் கல்கி, சென்னை-600 031.


அதிகாலையில்
ஸ்டேன்ஸ் காபி!
நாள் முழுவதும்
புத்துணர்ச்சி!!
ஒவ்வொரு கோப்பையிலும்
அதிக புத்துணர்ச்சி!
Stanes
கோயம்புத்தூர்

ஜீவகாருண்யம்



ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி
காமகோடி
சங்கராசாரிய
சுவாமிகள்

வாழ்நாள் பூராவும் ஏதாவது ஒன்றில் நம் மனஸ் அழுத்தமாக, ஆழமாக ஈடுபட்டிருந்தால்தான் அதுவே ப்ராணன் போகிற சமயத்திலும் கிளம்பி வந்து நம் மனஸ் முழுவதையும் ரொப்பி (நிரப்பி) வியாபித்துக் கொள்ளும். நாம் அதை நினைக்கிறோம் என்பதில்லை. அதுவே முட்டிக்கொண்டு வந்து தன்னை நினைக்கும்படியாகப் பண்ணும்.

இப்போது ஸைகாலஜியில் சொல்கிறார்கள் — நமக்கே தெரியாமல் நாம் எப்பொழுதோ ஆழமாக, அழுத்தமாக நினைத்த விஷயங்கள் தான் தாமாக மனஸின் மேல் மட்டத்துக்கு எழும்பி வருகிறது என்கிறார்கள். குறிப்பாக, வெளி வியாபாரமில்லாமல் தூங்குகிறபோது இம்மாதிரி பழைய ஸ்டாக் கிளம்பி வந்து சொப்பனமாகிறது என்கிறார்கள். தூக்கம் தான் என்றில்லை, காரியமில்லாமல் இருக்கிற போதுகளிலெல்லாம் ஒரு தியானம் என்று உட்கார்ந்தால் கூட, ஜலத்துக்கடியே கையினால் அழுத்தி வைக்கிற கார்க் கையை எடுத்தவுடன் மேலே கிர்ரென்று வருகிற மாதிரி, உள் நினைப்புக்கள் மேலே வந்து நம்மைப் பிடித்துக் கொள்கின்றன. சாஸ்திரங்களிலும் பூர்வ வாஸனை என்று இதுகளைச் சொல்லி, இவற்றை அடியோடு இல்லாமல் வாஸனாக்ஷயம் பண்ணிக் கொண்டால்தான், மனஸ் பரம தெளிவாகத் தெளிந்து நின்று அதில் ஆத்ம ஜ்யோதிஸ் பளீரென்று அடிக்கும் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் நாம் ''போ, போ'' என்று பிடித்துத் தள்ளினாலும் அது போகுமா? போகாது. அதைப் போகப் பண்ணுவதற்கு வழி நம்மால் எவ்வளவு முடியுமோ அத்தனை பாடும் பட்டு ஸத் விஷயங்களை, ஸத்துக்களுக்கெல்லாம் பரம ஸத்தான — 'ஏகம் ஸத்'தான — பரமாத்மாவை நினைத்துக் கொண்டே யிருப்பதுதான். இந்த நல்ல வாஸனையை 'வா, வா' என்று சொல்லிக் கொண்டே விருந்து வரவழைத்து மனஸுக்குள் உட்கார்த்தி வைத்துக் கொண்டால்தான் கெட்ட வாஸனைகள் தங்களுக்கு இடமில்லை என்று ஓடிப் போகும். அமேத்யத்தை எவ்வளவு தேய்த்து அலம்பி விட்டாலும் நாற்றம் போக மாட்டேன் என்கிறது. ஒரு ஊதுவர்த்தியை ஏற்றி வைத்து விட்டால் அது இருந்த இடம் தெரியாமல் போகிறது.

கடைசியில் நல்ல வாஸனைகளும் போக வேண்டும்; மனஸே போக வேண்டும். அதெல்லாம் ரொம்பப் பின்னாடி வருகிற நிலை.

இப்போதும், எப்போதும் — இதுவரை செய்யாவிட்டாலும் இப்போதிருந்தாவது — நாம் செய்ய வேண்டியது பகவத் ஸ்மரணையை அழுத்தமாக, ஆழமாக ஏற்படுத்திக் கொள்வதுதான். அப்படி வாழ்நாள் பூரா, வெளியில் எத்தனை காரியம் செய்து கொண்டிருந்தாலும், உள்ளூற ஓர் இழை பரமாத்மாவிடமே சித்தம் ஒட்டிக் கொண்டிருந்தால்தான் அந்திம காலத்தில் கன்னா பின்னா நினைப்புக்கள் வராமல் அவன் நினைவு மட்டும் — **மாம் ஏவ** என்ற மாதிரி அதுமாத்திரமே — இருந்து கொண்டிருக்கும். இழுத்துப் பறித்துக்கொண்டு கிடந்தாலும் அத்தனை இழுபறியிலும் விடாமல் பகவத் ஸ்மரணமே இருக்கும். அல்லது அநாயாஸ மரணமாக இயற்கையாக சம்பவிக்கும்போதும் அவனையே நினைக்கத் தோன்றி அந்த ஒரு சில க்ஷணங்களானாலும் அதிலேயே ஐகாக்கியத்தோடு முழுகிவிட முடியும். அல்லது திடீரென்று ஒரு புலி வந்து அடித்துப் போட்டாலோ, அல்லது கரெண்ட் ஷாக் அடித்தாலோ அப்போதுகூட பயமோ, அதிர்ச்சியோ இல்லாமல், ப்ரக்ஞை போய் விடாமல் 'டாண்' என்று பகவத் ஸ்மரணம் வந்து நிற்கும்.

'ப்ராண ப்ரயாண ஸமயே கபவாத பித்தை:' — 'உயிரின் நெடும் பிரயாண சமயத்தில் கபவாத பித்தங்கள் கட்டியிழுக்கிறபோது உன்னை எப்படி நினைப்பேனோ?' என்று குலசேகரர் மாதிரிப் பெரியவரே பயப்படுகிறார். பகவத்பாதாளும் இந்த 'ப்ராண ப்ரயாண' பதப் பிரயோகம் பண்ணியிருக்கிறார்.

ப்ராண ப்ரயாண பவபீதி ஸமாகுலஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மமதேஹி கராவலம்பம்

உயிர் கிளம்புகிற சமயத்தில் ஏற்படுகிற பயத்தைப் போக்க, ஸகல பயத்தையும் நிவ்ருத்தி பண்ணும் லக்ஷ்மி நரஸிம்ம மூர்த்தி

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]



தேர்தல் வாக்குறுதியும் வேர்க்கடலை விவசாயியும்!

வட்டமேஜை

☐ ''மோதிலால் முதல் சஞ்சய் வரை'' தலையங்கம் நெஞ்சை நெகிழ வைத்தது.

''கார்ட்டரைக் காண்போம்'' கட்டுரை மூலம் ஜனாதிபதி திரு கார்ட்டரின் படிப்படியான வாழ்க்கை முன்னேற்றத்தை நன்கு அறிய முடிந்தது.

உப-ஜனாதிபதி திரு மாண்டேல் அவர்களைப் பற்றியும் கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

அட்டையில் திரு உமாபதி அவர்கள் வரைந்த ஜிம்மி கார்ட்டர் கார்ட்டூன் ஓவியம் ''டாப் கிளாஸ்.''

அறந்தாங்கி
11–11–76 வி. எஸ். அனந்தராமன்

☐ அட்டைப் படம் சுத்த மோசம் பண்ணி விட்டீர்கள். உள்ளே இருக்கும் வேர்க்கடலை விவசாயி படத்தை அட்டைப் படமாகப் போட்டிருக்கலாம்.

மதுரை–9
11–11–76 எஸ். பாலகிருஷ்ணன்

☐ திரு கி. ராஜேந்திரன் அவர்கள் எழுதிய ஈரோடு சேஷசாயி காகித ஆலை பற்றிய கட்டுரை படித்தேன். மேற்படி ஆலையில் இரா. நடராஜன் என்ற அன்பர் டர்னராகப் பணி புரிந்து வருகிறார். 'அறநெறி இயக்கம்' என்ற ஓர் அமைப்பை இவர் அமைத்துள்ளார். இந்தச் சங்கம் வாரம் இருமுறை கூடும். ஆன்மீகக் கருத்துக்களை விவாதிப்பார்கள். திரு நடராஜன் பகவத்கீதைக்கு விளக்கம் தருவார். இவ்விதம் இவர் தந்துள்ள பேருரைகள் முழுவதையும் சேர்த்து 220 பக்க அளவில் 'அறியாமை நீக்கம்' என்ற இலவச வெளியீடாக வெளியிட்டிருக்கிறார். ஆலை நிர்வாகத்தினர் இவர் சேவையைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

பழமார்னேரி
11–11–76 பி. சுந்தரராமன்

☐ நீண்ட கால கல்கி வாசகனாகிய நான் ஒவ்வொரு வாரமும் சேரமான் காதலியை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

''கடல் நீரோடு சேரமான் கண்ணீர் கலந்தது. அன்றுதான் கடல் நீர் உப்பாயிற்று''— எவ்வளவு அருமையான பதப் பிரயோகம்!

மாதர்பாக்கம்
12–11–76 மு. பாலசுப்பிரமணியன்

☐ கருத்துப் படத்தில் ''வாக்குறுதிகளைக் கண்டு ஏமாறுவதில் அமெரிக்கர்கள் நம் நாட்டவர்க்குச் சளைத்தவர்கள் அல்ல'' என்பதை ஒப்புக்கொண்ட உங்களை எப்படிப் பாராட்டுவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்.

விருத்தாசலம்
12–11–76 வெ. சம்பந்தம்

◆◆

தான் கைப்பிடியாக (கர அவலம்பம்) வந்து ரக்ஷிக்க வேண்டும் என்கிறார். இதே மாதிரி ஸுப்ரமண்ய புஜங்கத்திலும் **'ப்ரயாணோன் முகே மயி அநாதே'** – 'அநாதையான நான் நெடும் பயணம் கிளம்பும்போது அப்பா குஹனே! தயாளுவே! நீ முன்னே வந்து நிற்க வேண்டும்' என்கிறார். இதையே அச்சடித்த மாதிரி 'திருப்புகழி'லும் சொல்லியிருக்கிறது. அந்த மகான்கள் எப்போதும் பகவத் ஸ்மரணம் அல்லது ஆத்மாநுஸந்தானத்தில் இருந்தவர்கள். அதனால் நிஜமாக அவர்களுக்கு இந்த பயம் இல்லை. நம்மை உத்தேசித்து, நமக்குப் பிரார்த்திக்கக் கற்றுக்கொடுக்கத்தான் இப்படியெல்லாம் பாடி வைத்திருக்கிறார்கள்.

பெரியாழ்வார் இன்னும் கொஞ்சம் ஸ்வாதீனமாகக்கூட பகவானிடம் சொல்கிறார்: **'அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்'**

''சாகிற சமயத்தில் உன்னை நான் நினைக்காமலும் போகலாம். அதற்காக நீ என்னை விட்டுவிடாதே. இப்போது உன்னை என்னால் நன்றாக நினைக்க முடிகிறது. அதனால் இப்போது செய்கிற 'ஸ்மரணை'யை அப்போதைக்கென்று 'ரிஸர்வ்' பண்ணினதாக வைத்துக்கொள்'' என்கிறார்.

ஆனால் கீதா வாக்கைப் பார்த்தால், இப்படி என்றைக்கோ செய்த ஸ்மரணத்தை பகவான் 'ரிஸர்வேஷ'னாக நினைக்கவில்லை. கடைசிக் காலத்தில் நினைக்கத்தான் சொல்லுகிறார். 'ச' போட்டு 'கடைசிக் காலத்**திலும்**' என்கிறார். அதாவது 'வாழ்நாள் பூராவும் என்னை நினைத்துக் கடைசியிலும் நினை' என்று இந்த ச்லோகத்தில் சொல்லாமல் சொல்கிறார். மேலே இரண்டு ச்லோகம் தள்ளி, ஸ்பஷ்டமாகவே சொல்கிறார்:

தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாம் அநுஸ்மர

''ஆனபடியால் என்னை ஸர்வ காலங்களிலும், எப்போதும், நினைத்துக் கொண்டே இரு'' என்கிறார். இப்படி எப்போதும் நினைத்தால்தான் முடிவில் அந்த நினைவு வரும்.

ஆனாலும் அந்திமத்தில் நினைப்பதற்கு ஏன் இந்த முக்கியத்வம்? இப்படி அந்திமத்தில் பகவானை ஸ்மரிப்பதற்கும் நான் இங்கே எடுத்துக் கொண்ட பரோபகாரம் என்ற விஷயத்துக்கும் என்ன சம்பந்தம்?

(தொடரும்

பெரும் பணம் பெற உங்களுக்கு வாய்ப்பு உண்டா?



இதற்கு ஆரூடம் கேட்க வேண்டாம்.

ஐஓபியைக் கேளுங்கள். மாதாமாதம் நீங்கள் சேமிப்பது ரூபாய் ஐந்தானாலும், ஐநூறானாலும் அதைப் பன்மடங்காகப் பெருக்கி நீங்கள் பெரும் பணம் பெறும் வாய்ப்பைத் தருபவை எங்கள் சேமிப்புத் திட்டங்கள். எந்த சந்தர்ப்பத்திற்கும் வசதியாகப் பணம் கிடைக்கும் வகையில் வகுக்கப்பட்டுள்ளன ஐஓபியின் திட்டங்கள். அவற்றில் சில:

மறுமுதலீடு டெபாஸிட் திட்டம்:

நீங்கள் முதலீடு செய்த தொகை குறிப்பிட்ட காலத்தில் பலமடங்கு பெருகி வளர்கிறது.

படிப்படியாக உயரும் திருமணச் சேமிப்புத் திட்டம்:

உங்கள் மகன்/மகள் திருமணத்திற்கு வசதியாகச் சேமிக்க உதவும் சிறப்புத் திட்டம்.

ரெக்கரிங் டெபாஸிட் திட்டம்:

சிறு தொகையாக மாதா மாதம் சேமித்து, கெடு முடிவுறும் போது கணிசமான தொகை கிடைக்க வழி செய்யும் பயனுள்ள திட்டம்.

க்ஷேம நலத் திட்டம்:

நீங்கள் செலுத்திய பணம் மேலும் அதிகமாக திரும்ப உங்களுக்குக் கிடைக்கிறது. அதே சமயம் உங்கள் சேமிப்பும் அதற்குரிய வட்டியும் குறையாமல் இருக்கிறது.

இத் திட்டங்களையும், மேலும் பல பயனுள்ள திட்டங்களையும் பற்றி விபரமாக அறிந்து கொள்ள அருகிலுள்ள ஐஓபி கிளையில் விசாரிக்கவும், அல்லது எங்களுக்கு எழுதினால் 'உங்கள் பணத்தை வளரச் செய்ய பதினொன்று வழிகள்' என்ற இலவசப் பிரசுரத்தை அனுப்புகிறோம்.

தேவைக்கு மட்டுமே இன்று செலவழியுங்கள். மிகுதியை நாளைக்கென்று சேமியுங்கள்.

PIN CODE FOR FAST MAIL

இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்

IOB-1325



ஆடையில்
பெண்மையின்
இழையோடும் போது
பெண்மைப் பேரழகு
புன்னகை புரியும்!
நிச்சயமாக, மபத்லால் க்ரூப்
அளிப்பவை நேர்த்தியான
துணிமணிகள்தான் !
MAFATLAL GROUP
TM

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

அத்தியாயம் 17

குந்தவியின் சபதம்

காஞ்சி நகர் அரண்மனையின் உப்பரிகை நிலா மாடத்தில் சக்கரவர்த்தியும் குந்தவி தேவியும் அமர்ந்திருந்தார்கள். கிருஷ்ணபட்சத்து முன்னிரவு. வானத்தில் விண்மீன்கள் சுடர்விட்டு ஒளிர்ந்தன. கிழக்கே வெகு தூரத்தில் மாமல்லபுரத்துக் கலங்கரை விளக்கம் நட்சத்திரங்களுடன் போட்டியிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

காஞ்சி நகரின் பற்பல சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்களிலிருந்தும் பேரிகைச் சத்தம், ஆலாட்ச மணி ஓசை, யாழின் இன்னிசையுடன் கலந்து பாடும் பக்தர்களின் குரலொலி — எல்லாம் கலந்து வந்து கொண்டிருந்தன. அரண்மனைப் பூந்தோட்டத்திலிருந்து செண்பகம், பன்னீர், பாரிஜாதம் ஆகிய மலர்களின் சுகந்தம் குளிர் காற்று கலந்து இலேசாக வந்து கொண்டிருந்தது.

"குழந்தாய்! ஏன் இப்படி ஒரு மாதிரியாயிருக்கிறாய்? உடம்பு நன்றாயில்லையா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"எனக்கு உடம்பு ஒன்றுமில்லை, அப்பா! மனந்தான் நன்றாயில்லை."

"மனம் இருக்கிறதே, அம்மா! ரொம்பப் பொல்லாதது. 'மத்தகஜத்தைப் போன்றது மனம்' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் புத்தி என்கிற அங்குசத்தால் அடக்கி ஆள வேண்டும்...."

"அப்பா!...."

"ஏன் குழந்தாய்!"

"நான் சமண முனிவரைப் பார்த்து விட்டு வந்தது தங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"என் மகள் என்ன செய்கிறாள் என்பது எனக்குத் தெரியாமல் போனால் இந்தப் பெரிய பல்லவ சாம்ராஜ்யத்தை நான் எப்படி அம்மா, கட்டி ஆள முடியும்?"

"அப்பா! நான் சமண சமயத்தையோ, பௌத்த சமயத்தையோ சேர்ந்துவிடப் போகிறேன்."

"ஏன் அம்மா, அப்படி? நமது சைவ வைஷ்ணவ சமயங்கள் என்ன அவ்வளவு துர்ப்பாக்கியத்தைச் செய்து விட்டன?"

"வாழ்க்கையில் எனக்கு வெறுப்பு உண்டாகிவிட்டது. இந்த உலகத்தில் ஏன் பிறந்தோம் என்று இருக்கிறது!"

"அடாடா! அவ்வளவுக்கு வந்து விட்டதா? அப்பர் பெருமானைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தாயே? அவர் மனிதப் பிறவியின் மகிமையைப் பற்றி உனக்கு ஒன்றும் சொல்லவில்லையா? தில்லை அம்பலத்தில் ஆனந்த நடனமிடும் பெருமானைத் தரிசிப்பதற்காகவே....."

"நிறுத்துங்கள், அப்பா! வயதாக ஆக அந்தப் பெரியவர் ஒரே பக்திப் பைத்தியமாகிவிட்டார். ஆனந்தமாம்! நடனமாம்! இந்த அழகான உலகத்தைப் படைத்த கடவுளுக்கு ஆனந்தம் வேறு, நடனம் வேறு வேண்டிக் கிடந்ததாக்கும்?"

இதைக் கேட்ட சக்கரவர்த்தி கலகலவென்று சிரித்தார். குந்தவி வெறுப்புடன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

"நான் ஏன் சிரித்தேன் என்று தெரியுமா, குந்தவி?"

"அதுதான் நானும் யோசித்துக் கொண்டிருந்தேன். தங்களுக்கும் ஒரு வேளை பைத்தியம், கியித்தியம்...."

"இல்லை, குழந்தாய்! இல்லை; பைத்தியம் எனக்குப் பிடிக்கவில்லை! நான் சிரித்த காரணம் வேறு. உன் மாதிரியே எனக்கும் ஒரு காலத்தில் இந்த உலகம் பிடிக்காமலிருந்தது. வாழ்க்கை வேப்பங் காயாகிவிட்டது! அதன் காரணம் என்ன தெரியுமா?"

"நான் உங்களுக்குப் பெண்ணாய்ப் பிறந்தது என்பதுதானோ என்னவோ?"

சக்கரவர்த்தி புன்சிரிப்புடன், "இல்லை அம்மா, இல்லை! நீ பிறந்த பிறகு எனக்கு மறுபடியும் உலகம் பிடிக்க ஆரம்பித்துவிட்டது. அதற்கு முன்னாலேதான் சில காலம் எனக்கு உலக வாழ்க்கையின் மேல் ரொம்பவும் வெறுப்பாயிருந்தது. அதற்குக் காரணம்... என் தந்தையின் மீது எனக்கு

ரொம்பக் கோபமாயிருந்ததுதான்!'' என்றார்.

குந்தவியின் முகத்தில் அவளை அறியாமலே புன்னகை தோன்றியது. இதைப் பார்த்த நரசிம்மவர்மர், ''உனக்கு இப்போது வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகியிருப்பதற்கும் அது தானே காரணம்? என் மேல் உனக்கு இப்போது சொல்ல முடியாத கோபம்; இல்லையா?'' என்றார்.

குந்தவி கண்களில் துளித்த நீர்த் துளியைத் துடைத்துக் கொண்டாள். தலை குனிந்தபடி, ''அப்பா! உங்கள் பேரில் எனக்கு என்ன கோபம்? உங்களுடைய தர்ம ராஜ்யத்தில் இப்படிப்பட்ட அநீதி நடந்து விட்டதே என்றுதான் வருத்தமாயிருக்கிறது'' என்றாள்.

''இதுதானா பிரமாதம், குந்தவி? இதற்கு ஏன் இவ்வளவு கவலை? அநியாயத்தைச் செய்வதற்கு எனக்குச் சக்தி உண்டு என்றால் அதை நிவர்த்திப்பதற்கும் சக்தி உண்டல்லவா? உண்மையில்



அநீதி நடந்து விட்டதாக எனக்குத் தெரிந்தால் உடனே அதற்குப் பரிகாரம் செய்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்'' என்றார் சக்கரவர்த்தி.

''நிஜந்தானே, அப்பா!... சோழ ராஜ குமாரனுடைய செயலுக்கு அவன் பொறுப்பாளி இல்லையென்று தெரிந்தால் தண்டனையை மாற்றி விடுவீர்கள் அல்லவா?''

''நிச்சயமாய், அம்மா!''

அப்போது குந்தவி தன் மனத்துக்குள் 'அந்த வேஷதாரிச் சிவனடியாரை எப்படியாவது கண்டுபிடித்து, அவருடைய தாடியைப் பற்றி இழுத்துக் கொண்டு வந்து சக்கரவர்த்தியின் முன்னிலையில் நிறுத்தாவிட்டால் என் பெயர் குந்தவி அல்ல!' என்று சபதம் செய்து கொண்டாள்.

''குந்தவி! என்ன, யோசனையில் ஆழ்ந்துவிட்டாய்? — இன்னும் இரண்டு நாட்களில் நான் உறையூருக்குப் போகப் போகிறேன். நீயும் வருவாயல்லவா?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

''வருகிறேன், அப்பா! அங்கே எனக்கும் ஒரு காரியம் இருக்கிறது; அதற்கு நீங்கள் குறுக்கே ஒன்றும் சொல்லக் கூடாது.''

''என்ன காரியம் என்று எனக்குச் சொல்லலாமோ, அதுவும் இரகசியமோ?''

''இரகசியம் ஒன்றுமில்லை, அப்பா! அருள்மொழி ராணியை நான் பார்க்கப் போகிறேன்.''

''சரிதான்; ஆனால், அருள்மொழி ராணி உன்னைப் பார்க்கச் சம்மதிக்க வேண்டுமே?''

''அவர் என்னைப் பார்ப்பதற்கு என்ன தடை..? எதற்காக மறுக்கிறார்?''

''அவளுடைய பிள்ளையைத் தேசப் பிரஷ்டம் செய்தவன் மகள் ஆயிற்றே, நீ? உன்மேல்கோபம்இல்லாமல்இருக்குமா?''

''என்மேல் எதற்காகக் கோபிக்க வேண்டும்? ரொம்ப அழகுதான்! நானா அவருடைய பிள்ளைக்குத் துர்ப்போதனை செய்து சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்யும்படி தூண்டினேன்? என் மேல் கோபித்துக் கொண்டு என்ன பிரயோஜனம்?'' என்றாள் குந்தவி.

இதைக் கேட்ட சக்கரவர்த்தி தம் மனத்துக்குள் ''பெண்ணாய்ப் பிறந்தவர்களிடம் தர்க்க ரீதியை எதிர்பார்ப்பதிலேயும் பிரயோஜனமில்லைதான்!'' என்று எண்ணிக் கொண்டார்.

அத்தியாயம் 18

பொன்னனின் அவமானம்

சென்ற மூன்று தினங்களாகப் பொன்னன் குடிசைக்குள்ளே இடியும் மழையும் புயலும் பூகம்பமுமாக இருந்தது.

''நான் செய்தது தப்பு என்றுதான் ஆயிரம் தடவை சொல்லி விட்டேனே! மறுபடியும் மறுபடியும் என் மானத்தை வாங்குகிறாயே!'' என்றான் பொன்னன்.

''தப்பு, தப்பு, தப்பு என்று இப்போது அடித்துக் கொள்கிறாயே, என்ன ப்ரயோஜனம்? இந்தப் புத்தி அப்போது எங்கே போச்சு?'' என்று வள்ளி கேட்டாள்.



''இப்போது என்ன குடி முழுகிப் போய்விட்டதென்று ஓட ஓட விரட்டுகிறாய், வள்ளி! அந்தச் சக்கரவர்த்தி எங்கே போய்விட்டார்? என் வேல்தான் எங்கே போச்சு?''

''வேல் வேறேயா, வேல்? கெட்ட கேடுக்குப் பட்டுக் குஞ்சம்தான். ஓடம் தள்ளுவதற்கும் கும்பிடுவதற்கும்தான் கடவுள் உனக்குக் கையைக் கொடுத்திருக்கிறார்! கும்பிடுகிற கையினால் எங்கேயாவது வேலைப் பிடிக்க முடியுமா?''

இரண்டு உடலும் ஓர் உயிருமாக இருந்த தம்பதிகளுக்குள் இப்படிப் பட்ட ஓயாத வாய்ச் சண்டை நடப்பதற்குக் காரணமாயிருந்த சம்பவம் இதுதான்:

இரண்டு நாட்களுக்கு முன் இந்தக் காவேரிக் கரைச் சாலை வழியாக, நரசிம்மச் சக்கரவர்த்தியும் குந்தவி தேவியும் அவர்களுடைய பரிவாரங்களும் உறையூரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது, தோணித் துறைக்கு அருகில் சக்கரவர்த்தி சிறிது நின்றார். தோணித் துறையையும், காவேரியின் மத்தியில் இருந்த தீவையும் அந்தத் தீவில் பச்சை மரங்களுக்கிடையே காணப்பட்ட வசந்த மாளிகையின் பொற் கலசத்தையும் குந்தவிக்குச் சுட்டிக் காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

அச்சமயம் குடிசையின் வாசலில் நின்று கொண்டிருந்த பொன்னன், வள்ளி இவர்களின் மேல் சக்கரவர்த்தியின் பார்வை விழுந்தது. பொன்னனை அருகில் வரும்படி அவர் சமிக்ஞை செய்யவும், பொன்னன் ஓடோடியும் சென்று கைகூப்பித் தண்டம் சமர்ப்பித்துப் பய பக்தியுடன் கையைக் கட்டிக் கொண்டு அவர் முன்னால் நின்றான். சக்கரவர்த்தியைப் பழிக்குப் பழி வாங்கப் போவதாகவும், அவருடைய மார்பில் தன் வேலைச் செலுத்தப் போவதாகவும் அவன் சொல்லிக் கொண்டிருந்ததெல்லாம் அச்சமயம் அடியோடு மறந்து போய் விட்டது. சக்கரவர்த்தியின் கம்பீரத் தோற்றமும், அவருடைய முகத்தில் குடிகொண்டிருந்த தேஜஸும் அவனை அவ்விதம் வசீகரித்துப் பணியச் செய்தன.

''இந்தத் தோணித் துறையில் படகு ஓட்டுகிறவன் நீதானே அப்பா!'' என்று சக்கரவர்த்தி கேட்கவும் பொன்னனுக்குத் தலைகால் தெரியாமல் போய் விட்டது.

''ஆமாம், மகா...சக்ர... பிரபு!'' என்று குழறினான்.

''அதோ தெரிகிறதே, அந்த வசந்த மாளிகையில்தானே அருள்மொழி ராணி இருக்கிறார்?''

''ஆமாம்.''

''இதோ பார், நமது குழந்தை குந்தவி தேவி, ராணியைப் பார்ப்பதற்காகச் சீக்கிரத்தில் இங்கே வரக் கூடும். ஜாக்கிரதையாக ஓடம் செலுத்திக்கொண்டு போய் அந்தக் கரையில் விடவேண்டும். தெரியுமா?''

''புத்தி, சுவாமி!'' என்றான் பொன்னன்.

பிறகு, சக்கரவர்த்தியும் அவருடைய பரிவாரங்களும் உறையூரை நோக்கிச் சென்றார்கள்.


இதையெல்லாம் வள்ளி குடிசை வாசலில் நின்றபடி அரை குறையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். பொன்னன் திரும்பி வந்தபோது, வள்ளியின் முகத்தில் 'எள்ளும் கொள்ளும்' வெடித்தது. முழு விவரமும் அவனிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட பின்னர், வள்ளி பலமாய்ச் சண்டை பிடிக்க ஆரம்பித்தாள். சக்கரவர்த்திக்குப் பணிந்து மறுமொழி சொன்ன காரணத்தினால், விக்கிரம மகாராஜாவுக்குப் பொன்னன் துரோகம் செய்து விட்டதாக வள்ளி குற்றம் சாட்டினாள். ''உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் துரோகி!'' என்று நிந்தித்தாள். அப்போது அவர்களுக்குள் ஏற்பட்ட விவகாரம் மூன்று தினங்களாக இடைவிடாமல் நடந்து கொண்டிருந்தது.

வள்ளியின் சொல்லம்புகளைப் பொறுக்க முடியாதவனாய், அன்று மத்தியானம் உச்சி வேளையில் பொன்னன் நதிக் கரையோரம் சென்றான். அங்கே நீரோட்டத்தின் மீது தழைந்து கவிந்திருந்த ஒரு புங்க மரத்தினடியில், அதன் வேரின் மேல் உட்கார்ந்து, தனக்கு நேர்ந்த அவமானத்தை எப்படித் துடைத்துக் கொள்வது, வள்ளியிடம் மறுபடியும் எப்படி நல்ல பெயர் வாங்குவது? — என்று சிந்தித்துக்கொண்டிருந்தான். அப்போது கார்த்திகை மாதக் கடைசி. ஒரு மாதம் சேர்ந்தாற்போல் அடைமழை பெய்து விட்டிருந்தது. கழனிகளில் நீர் நிறைந்து தளும்பிக் கொண்டிருந்தது. பச்சை மரங்களின் இலைகள் புழுதி தூசியெல்லாம் கழுவப்பட்டு நல்ல மரகத வர்ணத்துடன் பிரகாசித்தன. குளுகுளுவென்று குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது.

இப்படி வெளி உலக மெல்லாம் குளிர்ந்திருந்ததாயினும், பொன்னனுடைய உள்ளம் மட்டும் கொதித்துக்

மாமல்ல நரசிம்ம சக்கரவர்த்தியும் கோமகள் குந்தவியும் நிலா முற்றத்தில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கும் காட்சியை இவ்விதம் மேலட்டையில் வண்ணச் சித்திரமாக வழங்குகிறார் ஓவியர் வினு. குந்தவியின் உள்ளத்தை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்ட வீர இளஞ்சிங்கம் விக்கிரமனையும் பின்னணியில் காண்கிறீர்கள்


ஒரே பரிபூரண ஆரோக்கிய பானம்...
சுவைமிகு
சாக்கலேட் மணத்துடன்!
நீங்கள்
ஆரோக்கியமுடனும்
சக்தியுடனும் விளங்கத்
தேவையான
இந்த 23 அத்தியாவசிய
"ஊட்டச் சத்துக்கள்"
அனைத்தும் நிறைந்த ஒரே பானம்
காம்ப்ளான்®
மட்டுமே.
புரதம்
கார்போஹைட்ரேட்
கால்சியம்
லிப்பிடுகள்
பாஸ்பரஸ்
சோடியம்
குளோரைடு
(சி வடிவில்)
பொட்டாசியம்
இரும்புச் சத்து
அயோடின்
வைட்டமின் 'ஏ'
வைட்டமின் பி1
ரிபோஃப்ளேவின்
நிகோடினமைடு
கோலின்
கால்சியம்
பென்டோதெனேட்
பைரிடாக்ஸின் (பி6)
வைட்டமின் பி12
ஃபாலிக் அமிலம்
வைட்டமின் சி
வைட்டமின் டி
வைட்டமின் ஈ
வைட்டமின் கே
"ரவி சாப்பிட மிகவும் படுத்துவான். நல்ல வேளை, சாக்கலேட் சுவை நிறைந்த காம்ப்ளான் அவனுக்கு மிகவும் பிடிக்கிறது. அவனுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் அனைத்தையும் அது தருகிறது" என்கிறார் ரவியின் அன்னை.
காம்ப்ளானில் உள்ள 23 அத்தியாவசிய ஊட்டச் சத்துக்கள் தரும் 'பரிபூரண' போஷாக்கை வேறு எந்த ஆரோக்கிய பானமும் தருவதில்லை. எனவே அவனுக்கு எத்தகைய போஷாக்குப் பற்றாக்குறை யிருந்தாலும், காம்ப்ளான் அவனை ஆரோக்கியமுடன் வைத்திருக்கும்.
ஏலக்காய்-கேசரி, மற்றும் சாதாரண காம்ப்ளான் கூடக் கிடைக்கிறது.
Glaxo
Complan®
THE COMPLETE PLANNED FOOD
CARDAMOM-SAFFRON FLAVOUR
காம்ப்ளான்®
வேறு எந்த ஆரோக்கிய பானமும் பரிபூரணமானதல்ல.
உலகெங்கும் உபயோகிக்கப்படுவது. க்ளாக்ஸோ ஆராய்ச்சியால் உருவானது.
CMGC 20-203 TM



← செல்வி சரண்யா

நாட்டரசன் கோட்டை எம்.ஏ கிருஷ்ணனின் மாணவியான குமாரி சரண்யாவின் பரதநாட்டிய நிகழ்ச்சியில் மேடை அநுபவமும், மேம்பட்ட நல்ல பயிற்சியும் நன்கு வெளிப்பட்டன. வழுவூர் பாணியில் அடவுகளும், துரிதமான பாதவேலைகளும் ரசிகர்களைக் கவர்ந்தன.

ஆரபி வர்ணம் விச்ராந்தியாகத் தொடங்கி நிதானமாக வளர்ந்து சதஸ் முழுவதும் நிறைந்து ரசிகர்களுக்கு மன நிறைவைத் தந்தது. வர்ணம் முடிந்த பின்பும் அதில் ஈடுபட்டிருந்த லயத்திலிருந்து யாரும் நீண்ட நேரத்துக்கு விடுபடவில்லை. சரண்யா பம்பரமாகச் சுழன்று பரவசமாக ஆடினார். மெய்ப்பாடுகள் நிறைந்த லயம் பிறழாத ஹஸ்த அபிநயங்களின் மூலம் அரங்கில் தனியாட்சி செலுத்தினார்.

பள்ளியில் பத்தாவது படிக்கும் மாணவியான செல்வி சரண்யா ஆனந்த தாண்டவமூர்த்தியின் அருளைப் பரிபூரணமாகப் பெறட்டும். - காந்தன்



குமாரி ப்ரியா →

ஜதிஸ்வரம், கல்யாணியில் கம்பீரமாக எழுந்து, ரசிகர்களின் கரகோஷம் பெற்றது; குமாரி ப்ரியா அடவுகளையும், முத்திரைகளையும் அநாயாசமாகப் பிடித்து, அபரிமிதமான லய சுத்தத்துடன் ஆடினார்.

இடைவேளைக்குப் பிறகு, ''இடது பதம் தூக்கி'' ஒரு தூக்கு தூக்கி விட்டது. மாஞ்சி ராகத்தில் ''வருகலாமோ ஐயா'' (நந்தன் சரித்திரக் கீர்த்தனை) உருக்கமாயெழுந்தது. ப்ரியா தாமும் உருகிச் சபையோரையும் உருக வைத்து, தொடர்ந்த கையொலியைப் பெற்றார்.

நடன நிகழ்ச்சிக்கு மெருகு ஏற்றியது திரிபுர சுந்தரியின் இனிமையான பதங்கள். மனம் ஒன்றிப் பாடினார். 'பரதக் கலைச் செல்வன்' பாலக்காடு சந்திர சேகரன் குமாரி ப்ரியாவுக்கு அளித்திருக்கும் பரதக்கலைப் பயிற்சி பாராட்டுக்குரியது.

கொண்டிருந்தது. பத்து வருஷங்களுக்கு முன்னால் இந்தக் கார்த்திகை மாதம் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! பார்த்திப மகாராஜாவும் ராணியும் இளவரசரும் இங்கே அடிக்கடி வருவதும் போவதுமாயிருப்பார்கள். அரண்மனைப் படகுக்கு அடிக்கடி வேலை ஏற்படும். தோணித் துறை அப்போது எவ்வளவு கலகலப்பாக இருந்தது! குதிரைகளும், யானைகளும், தந்தப் பல்லக்குகளும் இந்த மாந்தோப்பில் வந்து காத்துக் கொண்டு கிடக்குமே! அந்தக் காலம் போய்விட்டது. இப்போது ஈ, காக்கை இங்கு வருவது கிடையாது. இந்தத் தோணித் துறைக்கு வந்த கேடுதான் என்ன? பார்த்திப மகாராஜா போர்க்களத்தில் இறந்து போனார். இளவரசர் எங்கேயோ கண் காணாத தீவில் தவித்துக் கொண்டிருக்கிறார். அருள்மொழி ராணியோ ஓயாமல் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறார். வசந்த மாளிகைக்குப் போவார் இல்லை; ஓடத்துக்கும் அதிக வேலை இல்லை.

அந்தச் சண்டாளன் மாரப்ப பூபதி மட்டும் துரோகம் செய்யாமல் இருந்திருந்தால்... இப்போது விக்கிரம மகாராஜா சோழ நாட்டின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பார் அல்லவா? பல்லவ சக்கரவர்த்தி இங்கே ஏன் வரப்போகிறார்? வள்ளியிடம் தான் ஏச்சுக் கேட்கும்படியாக ஏன் நேரிட்டிருக்கப் போகிறது?

இப்படிப் பொன்னன் யோசித்துக் கொண்டிருக்கும்போது, குதிரை வரும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். சாலை ஓரத்தில் பொன்னனுடைய குடிசைக்கருகில் மாரப்ப பூபதி குதிரை மேலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான்.

(தொடரும்)

எங்கள் திட்டங்கள் எல்லாம்



உங்கள் நன்மைக்காகவே!

உங்கள் குடும்பப் பொருளாதாரமும், உங்கள் வருங்காலமும் வளம் மிகுந்தவையாகத் திகழ வேண்டும் என்பதே எமது குறிக்கோள்.

EP-TMB-110



முத்துக் குவியல் டிபாசிட் திட்டம்

உங்கள் செல்வ மகளின் திருமணம் சிறப்பாக நடைபெறவும், அருமை மைந்தனின் உயர்கல்விக்குத் தேவையான பணம் சேமிக்கவும் உதவுவது எங்களது ''முத்துக் குவியல் டிபாசிட்'' திட்டம். ரூ. 1000/- மற்றும் ரூ. 1000/-த்தின் பெருக்குத் தொகைகளில் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. 5 ஆண்டுகளுக்கு மேல் 21 ஆண்டுகள் வரை டிபாசிட் செய்து இத்திட்டத்தில் பயனடையலாம். இன்றே இத்திட்டத்தில் ரூ. 1000/- முதலீடு செய்வீர்! வரும் ஆண்டுகளில் அத்தொகை வளர்ச்சி அடையும் விதம் பாரீர்!

ஆண்டு	திரும்பப் பெறும் தொகை ரூ.	அதிகரிக்கும் அளவு
7	2,008/-	2 மடங்கிற்கு மேல்
14	4,034/-	4 மடங்கிற்கு மேல்
18	6,010/-	6 மடங்கிற்கு மேல்
21	8,105/-	8 மடங்கிற்கு மேல்



தினசரி சேமிப்புத் திட்டம்:

தினசரி ரூ. 1/- முதல் ரூ. 100/- வரை குறிப்பிட்ட தொகையை 61 மாதங்கள் செலுத்தி இறுதியில் ரூ. 2,290/- முதல் ரூ. 2,29,000/- வரை பெறலாம். தொகை செலுத்த வசதியாக எங்களால் நியமிக்கப்பட்ட ஆள் தங்கள் இடத்திற்கு தினசரி வந்து சேமிப்புப் பணத்தைப் பெற்றுக் கொள்வார்.



பிக்சட் டிபாசிட் திட்டம்:

மிக உயர்ந்த வட்டி விகிதம்! 8½% முதல் 10% வரை வட்டி தரப்படுகிறது.




கேஷ் சர்டிபிகேட் டிபாசிட்:

ரூ. 100/-, ரூ. 500/-, ரூ. 1000/- திரும்பக் கிடைக்கும் வகையில் பல்வேறு வகை சர்டிபிகேட்டுகள் பெற்றுக்கொள்ளலாம். ரூ. 100/-க்கு நீங்கள் செலுத்த வேண்டிய மிகக் குறைந்த தொகை ரூ. 13.63 தான்.



ஓய்வுகால திட்ட சேமிப்பு:

மாதம் ரூ. 100/- வீதம் 5 ஆண்டுகள் செலுத்தி முடித்த பிறகு மாதம் ரூ. 165/- வீதம் 5 ஆண்டுகளுக்குத் திரும்பப் பெறலாம்.



தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்

(ஷெட்யூல்ட் பேங்க் — ஸ்தாபிதம் 1921)

56, பீச் ரோடு, தூத்துக்குடி-628 001

தமிழகமெங்கும் மற்றும் பெங்களூரிலும் கிளைகள்

அத்தியாயம் 64

கடைசி பாணம்!

பவானிக்கும் கமலாவுக்கும் தான் இழைத்துவிட்ட நம்பிக்கைத் துரோகத்துக்குப் பரிகாரமாக ஏதாவது செய்ய நினைத்தான் கல்யாணம். கோவர்த்தனன் உமாகாந்திடம் காட்டும் வெறுப்புக்குப் பின்னணியில் கடமை உணர்ச்சிக்கும் மேலாக ஏதோ அந்தரங்கம் இருக்க வேண்டும் என்று தோன்றிற்று அவனுக்கு. ஏற்கனவே வி. ஐ. டிக்கன் உமாகாந்தின் படத்தை அவனிடம் காட்டியபோது கோவர்த்தனின் மூக ஜாடையை அதில் கண்டு அவன் அதிசயித்திருந்தான். உமாகாந்தனைப் பவானி வீட்டில் நேரில் சந்தித்த பிறகு அவன் குழப்பம் அதிகரித்திருந்தது. எனவேதான் ஒரு பாட்டில் விஸ்கியுடன் கோவர்த்தனனைத் தேடி வந்தான் கல்யாணம். அவர் நாவைத் தளர்த்தி ஏதாவது பேசவைக்கலாம் என்ற அபிப்பிராயம் அவனுக்கு இருந்தது.

ஆனால் கோவர்த்தனன் நிறையப் பேசிய போதிலும் கல்யாணம் எதிர்பார்த்ததுபோல் புதிய திருப்பம் ஏதும் ஏற்படக் கூடிய தகவலாக ஒன்றும் தெரிய வரவில்லை. உமாகாந்தனை, தன் தம்பி என்றே ஒப்புக்கொண்ட கோவர்த்தனன், அதற்காக அவனிடம் கருணை காட்ட முடியாது என்று அழுத்தமாகக் கூறினார்.

இதையெல்லாம் ஒளிந்து கேட்டுக்கொண்டிருந்த சமையல்காரர் மணி நடந்துகொண்ட விதம் மட்டும் கல்யாணத்துக்கு ஆச்சரியம் அளித்தது. 'இந்த மனுஷன் எதற்காக மறைந்திருந்து நான் கோவர்த்தனனிடம் பேசுவதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்? உமாகாந்தன் பெயரைக் குறிப்பிடும் போதெல்லாம் கையைப்பிசைகிறாரே எதற்கு?' என்று எண்ணினான். மணியின் கோபத்தை அல்லது தாபத்தை வேண்டுமென்றே மேலும் தூண்டிவிடத் தீர்மானித்துப் பேசினான்:

''நன்றாகச் சொன்னீர்கள் சார்! மனுநீதிச் சோழன் அல்லது சிபிச் சக்கரவர்த்தி பரம்பரையில் உதித்தவரா யிருக்க வேண்டும் நீங்கள்! சொந்தத் தம்பி என்பதற்காகச் சட்டத்தை மறந்து நீங்கள் காரியம் செய்ய முடியுமா? 'ஐயோ பாவம்! பிழைத்துப் போகட்டும்' என்று பாங்குக் கொள்ளைக் காரர்களையும், ராஜத் துரோகிகளையும் வெளியே நடமாட விட்டால் என்னவாகிறது? அராஜகம் தாண்டவமாடும்! இந்த மாதிரி ஆசாமிகளைச் சிறையில் தள்ளினால் கூடப் போதாது ஸார், நாற்சந்தியில் நிற்கவைத்துத் தண்டிக்க வேண்டும்!''

இத்தருணத்தில் கல்யாணம் எதிர்பார்த்த நற்பலன் கிடைத்தது. இதற்குமேல் பொறுத்திருக்க முடியாதவனாக மணி முன்னால் பாய்ந்து வந்தார்: ''வாயை மூடுய்யா! ஏதோ போகட்டும் என்று பார்த்தால்.மேலே மேலே பேசிக் கொண்டே போகிறாயே!''

கோவர்த்தனன் திடுக்கிட்டார். மணி அருகே மறைவிலிருந்து உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்திருக்கிறார் என்பது அவருக்கு அப்போதுதான் தெரிந்தது. ''மணி உள்ளே போ!'' என்று அதட்டினார்.


''முடியாது!'' என்றார் மணி! ''முடியவே முடியாது. இத்தனை நாட்களாக எனக்கு மூக்கணாங் கயிறு போட்டு வைத்திருந்தாய். இப்போது நான் அதை அறுத்துக் கொண்டு விடுதலை பெற்று விட்டேன். இனி என்னால் சும்மா இருக்க முடியாது! உமாகாந்துக்கு மறுபடியும் நீ கடுமையான தண்டனை விதிக்கப்போவதைப் பார்த்துக் கொண்டு நான் பேசாமல் இருக்க மாட்டேன்.''

''மணி! நீ எனக்குக் கொடுத்த வாக்குறுதி என்னவாயிற்று? சத்தியத்தை மீறலாமா நீ!''

''இத்தனை நாட்களாக அதற்குக் கட்டுப்பட்டுத்தான் இருந்தேன். ஆனால் இப்போது உன் நடத்தை எல்லை மீறிப் போகிறது. நான் பொறுமை இழந்து நிற்கிறேன்.''

''அப்படியானால் சரி, நடந்ததை யெல்லாம் விவரமாகச் சொல்லு'' என்று அமைதியாகக் கூறினார் கோவர்த்தனன். பிறகு கல்யாணம் பக்கம் திரும்பி, ''அப்பனே! நீயும் பவானி போலவே உமாகாந்தனை விடுவிக்க மிகவும் ஆவலுள்ளவனா யிருப்பது எனக்குத் தெரியும். சற்று நேரமாகச் சும்மா என்னிடம் நடித்துக் கொண்டிருந்தாய் இல்லையா? உமாகாந்தனை விடுவிக்க ஏதாவது சாட்சியம் அகப்படுமா என்று பார்க்கத்தானே என் வாயைக் கிளறிக் கொண்டிருந்தாய்? இதோ கிடைத்து விட்டது. மணியைச் சாட்சிக் கூண்டில் ஏற்று; உமாகாந்தனை விடுவித்து விடலாம் நீ!''


அளவற்ற வியப்பும் திகைப்பும் அடைந்தவனாகக் கல்யாணம் மணியையும் கோவர்த்



தன்னையும் மாறி மாறிப் பார்த்தான். கோவர்த்தனன் மணியை நோக்கி, ''சொல் லேனப்பா ஏன் தயங்குகிறாய்? சொல்லு!'' என்றார்.

''கூறுகிறேன்! கல்யாணம் ஸார், கேளுங்கள்!'' என்ற மணி ஆவேசம் வந்தது போல் படபடவென்று பல சம்பவங்களுக்கு முன் ஒரு நாள் இரவு நடந்தவற்றைச் சொல்ல லானார்.

மணி ரொம்பக் காலமாகக் கருணாகரன் வீட்டில் சமையல்காரராக வேலை பார்ப்பவர். கோவர்த்தனனையும் உமாகாந்தனையும் தோளில் தூக்கி வளர்த்தவர். உமாகாந்தன் தன் தகப்பனுருடன் சண்டை போட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிய அன் றிரவு மணிக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை. புரண்டு புரண்டு படுத்தார். நள்ளிரவு சுமா



ருக்கு ஏதோ அரவம் கேட்க, எழுந்து போய்ப் பார்த்தார். கருணாகரன் பாங்குச் சாவியை வழக்கமாக வைக்கும் இடத்தில் தேடிவிட்டு அது காணுமல் பரக்கப் பரக்க ஓடுவதைக் கவனித்தார். உடனேயே அவர் மனமும் கருணாகரன் உள்ளத்தைப் போலவே முதலில் பாங்குச் சாவிக்கும் உமாகாந்தனுக்கும்தான் முடிச்சுப் போட்டது. என்றாலும் ஏதோ சந்தேகம் உதித்தது. கருணாகரன் வாசல் கதவைப் பரபரப்புடன் திறந்து கொண்டு ஓடினாரே தவிர தாழ்ப்பாளை நீக்கவில்லை. ஆக அவருக்கு முன்பாகவே யாரோ வாசல் கதவைத் திறந்து கொண்டு வெளியேறியிருக் கிறார்கள்! யார் அது? மணி கோவர்த்தனன் அறையில் எட்டிப் பார்த்தார். அவனைக் காணும். வீடு முழுக்கத் தேடினார். எங்கும் அவன் இல்லை. கருணாகரனின் மனைவி, தன் பிள்ளை உமாகாந்தனுக்குக் கடைசியாக ஒரு முறை தன் கையால் சாப்பாடு போடவேண் டும் என்று ஆசைப்பட்டு அவனைத் தன் கண வருக்குத் தெரியாமல் வரச் சொல்லி யிருந் தாள். அவனுக்காகக் கொல்லைக் கதவைத் தாழ்ப்பாள் போடாமல் சாத்தி வைத்து விட்டுச் சமையலறையிலேயே புடவைத் தலைப்பை விரித்துப் படுத்திருந்தாள். மணி யிடம் மட்டும் விஷயத்தைச் சொல்லி அவ ரைத் தூங்கப் போகுமாறு கூறி விட்டாள். சமையலறையில் படுத்தவள் இலேசாகக் கண் அயர்ந்து விட்டாளோ என்னமோ மணிக்குத் தெரியாது. எட்டிப் பார்ப்பதுகூட மரியாதைக் குறைவாக அவருக்குத் தோன்றியது.

கொஞ்ச நேரம் கழித்து வாசல் பக்கமாக வியர்க்க விறுவிறுக்கச் சந்தடியின்றி ஓடிவந்து தன் அறைக்குள் கோவர்த்தனன் நுழைந்து இழுத்துப் போர்த்துக் கொண்டு படுப்பதை மணி பார்த்தார். அவனை உலுக்கி எழுப்பி உட்கார வைத்து, ''எங்கே போயிருந்தாய்?'' என்று அதட்ட லாகக் கேட்டார். கோவர்த்தனன் அரண்டு போய்விட்டான். ''உனக்குப் புண்ணிய மாகப் போகட்டும். இன்றிரவு நான் வீட்டை விட்டு வெளியேறியதாக யாரிடமும் சொல் லாதே'' என்று கெஞ்சினான். மேலும் துருவி விசாரித்தபோது கோவர்த்தனனுக்கு உண் மையை ஒப்புக் கொள்வது தவிர வேறு வழி இருக்கவில்லை. உமாகாந்தன் தக்க சமயத்தில்



வந்து குற்றத்தைத் தான் ஏற்றுக் கொண்டு இவனைத் தப்புவித்ததைக் கூறினான். தொடர்ந்து சொன்னான்: ''உமாகாந்தன் எப்படியானாலும் இந்த வீட்டில் இனி அடி எடுத்து வைக்க மாட்டான். அதிலேயே அப்பா மனமுடைந்து போயிருக்கிறார். இப்போது நானும் திருட்டுப் பட்டம் சுமந்து சிறை சென்றால் அப்பாவின் இதயம் வெடித்து விடும். அவரை உயிரோடு கொன்ற பாபத்தைக் கட்டிக் கொள்ளாதே. நான் வீட்டை விட்டு வெளியேறியதை வெளிவிடாதே! எனக்குச் சத்தியம் பண்ணிக் கொடு!''


மணி மானஸ்தரான கருணாகரனுக்கு மாரடைப்பு ஏற்பட்டு விடும் என்ற பயத்திலேயே சத்தியம் பண்ணிக் கொடுத்தார். ஆனால் எமன் வேறு உருவத்தில் வந்து கருணாகரனை அழைத்துப் போய்விட்டான். சில நாட்களுக்குப் பிறகு கோவர்த்தனன் கடன்பட்டிருந்த மார்வாடி வந்து அட்டகாசம் செய்த போது கருணாகரன் படுக்கையில் விழுந்தார். பிறகு அவர் எழுந்திருக்கவேயில்லை.

இந்த நிகழ்ச்சிகளை விவரித்த மணி, கடைசியில் சொன்னார்: "நாலு வருஷங்களாகப் பல்லைக் கடித்துக் கொண்டு இவனுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி வருகிறேன். இன்னும் இரண்டு வருஷங்கள்தான்; உமாகாந்தன் விடுதலை பெற்று வந்துவிடுவான் என்று நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறேன். அவனைச் சந்தித்து மன்னிப்புக் கேட்கும் தினத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் சற்று முன் நீங்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டதிலிருந்து இவன் மேலும் ஏழெட்டு வருஷம் உமாவுக்குச் சிறைத் தண்டனை கொடுத்துவிட உத்தேசித்திருப்பது தெரிகிறது. இந்தச் சூழ்ச்சியை நான் முறியடித்தே ஆகவேண்டும்."

"கேட்டுக் கொண்டாயா கல்யாணம்?" என்றார் கோவர்த்தனன். இதுவரை உமாகாந்தனை விடுவிக்க உனக்கோ பவானிக்கோ சாட்சியமே இல்லாதிருந்தது. இப்போது அது அகப்பட்டு விட்டது" என்று கூறிச் சிரித்தபடியே தமது சட்டைப் பையிலிருந்து இரண்டு உறைகளை எடுத்து மேஜையின் மீது போட்டார். "இவற்றை இன்றே தபாலில் சேர்க்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால் தபாலுக்கு நேரமாகி விட்டது. உன்னிடம் ஒப்படைக்கிறேன் கல்யாணம், நீயே உரிய அதிகாரிகளிடம் சேர்ப்பித்துவிடு!"

"என்ன இவை?" என்றான் கல்யாணம் திகைப்புடன்.

"ஒன்று என் ராஜிநாமாக் கடிதம். மற்றொன்று என் குற்றத்தை நானே ஒப்புக் கொண்டு எழுதிய வாக்குமூலம்."



"அந்த நல்ல பாம்பு ஏன் மெலிஞ்சு போச்சு?"

"ஒரு படம் எடுத்தது. பாவம்"

— சாமி

"மாஜிஸ்திரேட் ஸார்! இது என்ன தாக்கு தலுக்கு மேல் தாக்குதலாயிருக்கிறதே!" என்றான் கல்யாணம் நாத் தழுதழுக்க.

மணி நின்றபடியே விசும்பி அழுதார்.

"கல்யாணம், நான் சொல்வதைக் கவனி. மணி, நீயும் கேட்டுக் கொள்!" என்றார் கோவர்த்தனன். "இந்த வாக்குமூலத்தையும் ராஜிநாமாக் கடிதத்தையும் கல்யாணம் இங்கு வந்த பிறகு நான் எழுதவில்லை. அதற்கு முன்பே எழுதி என் பாக்கெட்டில் வைத்திருந்தேன். அந்த மட்டில் ஒப்புக்கொள்வீர்களல்லவா?"

"உண்மைதான் ஸார். நான் இங்கே வந்த பிறகு நீங்கள் விஸ்கி டம்ளரைத் தவிர பேனாவையோ தாளையோ கையால் தொடவில்லையே?" என்றான் கல்யாணம்.

"கரெக்ட்! ஆக, மணியின் சாட்சியம் உனக்கு அகப்பட்டு விட்டபடியால் இனி நான் தப்ப முடியாது என்ற நிலையில் இவற்றை நான் எழுதவில்லை. அதற்கு முன்பே எழுதி விட்டேன். எழுதத் தூண்டியது என்ன தெரியுமா?"

"தெரியவில்லையே ஸார்!"

"என் தம்பி உமாகாந்தனின் தியாகம் தான்! இப்போது அவன் பிடிபட்டதும் பவானி அவனை வழக்காடுமாறு வேண்டினாள். அவன் மறுத்து விட்டான். இரண்டாவது தடவையாகத் திருட்டுக் குற்றத்தைத் தன் மீதே சுமத்திக் கொண்டான். அதுமட்டுமில்லை, பவானியை விடுவிக்க வேண்டும் என்பதற்காக மறுபடியும் புதிய குற்றச்சாட்டுக்களை தன்மீதே சுமத்திக் கொண்டான். அவனுக்குத் தன்னை யார் என்று தெரியாது என்றும் தப்பிச் செல்லத் தனக்கு உதவுமாறு அவளைத் தான்தான் நிர்ப்பந்தப்படுத்தியதாகவும் வாக்குமூலம் எழுதிக் கொடுத்தான். இந்த வாக்குமூலம் அவனுக்குக் கிடைக்கக்கூடிய தண்டனையை மேலும் அதிகரிக்கும் என்பதை



பாரதப் பெருமை பேசும்
சுகபோக சோப்புகள்
GOVT. SOAP FACTORY
BANGALORE
மைசூர்
ஸாண்டல்
கவர்மெண்ட் சோப் ஃபாக்டரி, பெங்களூர் அளிக்கும் தரமிக்க தயாரிப்பு
விற்பனை செய்பவர்கள்: மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்

MCA-SS-60 Tam

பல் வைத்தியர்கள் கூறுகிறார்கள்—

தவறாமல் பற்களைத் துலக்குவதோடு, ஈறுகளையும் தேய்த்துக் கொடுத்தால், ஈறு உபாதைகளையும் பற் சிதைவையும் தடுக்கலாம்.

கவர்ச்சியான ஆரஞ்சு வண்ண பேக்கில் வருகிறது

போர்ஹென்ஸ் உபயோகிப்பவர்கள் தாங்களாகவே என்ன கூறுகிறார்கள், பாருங்கள்.

"என் ஈறுகள் வலுப்பெற்று ஆரோக்கியமடைந்து விட்டன"

"கடந்த மூன்று ஆண்டுகளாக, தங்கள் போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் உபயோகித்து வருவதன் மூலம் என் ஈறுகள் வலுப்பெற்று, ஆரோக்கியமடைந்துவிட்டன. முன்பு என் ஈறுகள் மிகவும் தொல்லை கொடுத்து வந்தன...இப்போது தங்கள் டூத்பேஸ்ட் மூலம் இந்த உபாதையிலிருந்து விடுதலை பெற்று விட்டேன்".

(கையொப்பம்) டி.என். தாஸ், ஷிகர்பூர்.

"என் மூச்சுக் காற்றும் ஈறுகளும் மீண்டும் நல்லபடியாயின"

"...ராஜ மகேந்திரத்திலுள்ள ஒரு பல் வைத்தியர்...பற்களும் ஈறுகளும் வலுப்பெற... போர்ஹென்ஸ் உபயோகிக்கச் சொன்னார், உடனே அப்படியே செய்தேன். சில நாட்களிலேயே என் மூச்சுக் காற்றும் ஈறுகளும் நல்லபடியாயின. அது முதல் போர்ஹென்ஸ் என் உயிர். இப்போது என் குடும்பத்தில் அனைவரும் (9 பேர்கள்) போர்ஹென்ஸ் உபயோகிக்கிறோம். இந்தப் பழக்கமும் நம்பிக்கையும் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருமென நம்புகிறேன்".

(கையொப்பம்) பி.ஜே. லாஸர், சிராலா, ஆந்திரப் பிரதேசம்.

(இக் கடிதங்களின் புகைப்பட நகல்களை ஜெப்ரி மேனர்ஸ் & கம்பெனி லிமிடெடின் எந்த அலுவலகத்திலும் காணலாம்).

பற்களை தக்க முறையில் பராமரிக்க, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் கொண்டு உங்கள் பற்களை சுத்தம் செய்யவும், ஈறுகளைத் தேய்த்துக் கொடுக்கவும். கூடவே போர்ஹென்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத் ப்ரஷ் உபயோகியுங்கள். ஏனெனில் இது பற்களை சுத்தம் செய்யும் போதே, ஈறுகளையும் தேய்த்துக் கொடுக்கும் வகையில் விசேஷமாக உருவாக்கப்பட்டுள்ளது.



போர்ஹென்ஸ்

பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

இலவசம்! பற்களையும் ஈறுகளையும் பராமரிப்பது பற்றிய வண்ணப் புத்தகம். தபால் செலவுக்காக, 25 பைசா தபால் தலையுடன் போர்ஹென்ஸ் டென்டல் அட்வைஸரி ப்யூரோ, டிபார்ட்மெண்ட் நெ.T-1334681, த.பை. எண் 11463, பம்பாய் 400 020 என்ற முகவரிக்கு எழுதுக.

எந்த மொழியில் வேண்டுமெனத் தெரிவிக்கவும்.

PIN CODE FOR FAST MAIL

168 F-203 Tam

உணர்ந்திருந்தும் இப்படிச் செய்தாள். பவானியோ அவனுக்காகத் தன் இளமையையெல்லாம் தியாகம் புரியத் தயாரானாள். சிறைத் தண்டனைகளை முழுமையாக அனுபவித்துவிட்டு அவன் திரும்பும்வரை தான் காத்திருக்கத் தீர்மானித்தாள். இந்தத் தியாகப் போட்டியை அறிய வந்தபோது எனக்கு என்னுடைய நீசத்தனத்தின் பயங்கரம் புரிந்தது. அந்தக் காதலர்களைப் பிரித்து வைப்பது மாபாதகம் என்று பட்டது. அதனால் தான் இந்தக் கடிதங்களை எழுதினேன். கல்யாணம்! இதை நன்றாக நினைவில் வைத்துக் கொள். பவானியிடமும் உமாகாந்தனிடமும் மறக்காமல் சொல்லு! என் மனம் மாறியது உமாகாந்தன் — பவானியின் பரஸ்பரத் தியாகங்களால்தான்; மணி சாட்சியம் கூற முன் வந்ததால் அல்ல.''

கல்யாணம் கண் கலங்கக் கனத்த இதயத்துடன் கடிதங்களை எடுத்துப் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளப் போனான்.

''என் எதிரிலேயே ஒரு முறை படித்துப் பார்த்துவிடு கல்யாணம்; அப்புறம் வேறு உறைகளில் வைத்துக் கொள்ளலாம்'' என்றார் கோவர்த்தனன்.

கல்யாணம் உறைகளைக் கிழித்துப் படித்தான். சுருக்கமாகவும் தெளிவாகவும் இருந்தன இரு கடிதங்களும்.

பாக்கெட்டில் அவற்றை வைத்துக்கொண்டு கோவர்த்தனன் கரங்களைப் பற்றினான் அவன். அவரோ அவனைத் தம் மார்புற இறுகித் தழுவிக்கொண்டார். ''கல்யாணம்! நான் உன்னிடம் பல தடவைகளில் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறேன். அதையெல்லாம் மறந்துவிடு'' என்றார்.

''ஆகட்டும் ஸார், வருகிறேன்'' என்று கூறி விடைபெற்றான் கல்யாணம்.


கோவர்த்தனன், தாரை தாரையாகக் கண்ணீர் உகுத்தபடி நின்ற மணி பக்கம் திரும்பிச் சொன்னார்: ''மணி! நான் குடிக்கக் கூடாது என்று அடிக்கடி வற்புறுத்தி வந்தாயல்லவா? நாளை நான் ஜெயிலுக்குப் போனால் எப்படிக் குடிக்க முடியும்? அதனால் திஸ் வில் பீ மை லாஸ்ட் டிரிங். இந்தக் கடைசி பானத்தை நீயே உன் கையால் ஊற்றிக் கொடு, ப்ளீஸ்!'' என்றார்.

கேட்டை நோக்கி நடந்த கல்யாணத்தின் காதில், ''திஸ் வில் பீ மை லாஸ்ட் டிரிங்'' என்று கோவர்த்தனன் கூறியது விழுந்தது. ஆனால் அதை அவன் அப்போது சரியாக அர்த்தம் பண்ணிக் கொள்ளவில்லை. அந்தக் கடைசி மதுபானத்தை மணி ஊற்றிக் கொடுத்துவிட்டு அப்பால் போன பிறகு, கோவர்த்தனன் அதில் விஷத்தைக் கலந்த விஷயம் அவர் மூச்சுப் பிரிந்த பிறகுதான் பரவியது.

அது சம்பந்தமாகவும் யாதொரு சந்தேகமும் யாருக்கும் ஏற்படாதிருக்க மூன்றாவதாக ஒரு கடிதத்தையும் முன்னேற்பாடாக எழுதித் தமது சட்டைப் பையில் வைத்திருந்தார் கோவர்த்தனன்.

அத்தியாயம் 65

மலர் அம்புகள்!*



* கடைசி அத்தியாயத்தை அமரர் கல்கியின் கையெழுத்திலேயே சுருக்கமாகக் காண்கிறோம்.

ஒரு கேசச் சாயத்தில் நீங்கள் எதிர்பார்ப்பவை எவை?

குறித்துக் கொள்க:

☐ இயற்கைப் பொலிவு தருதல் ☐ எளிதில் பரவுதல்
☐ நீடித்திருத்தல் ☐ ஷாம்பூவாகவும் பயன்படுதல்
☐ உள்ளடங்கிய கேச கண்டிஷனர் ☐ விரைவில் பூசமுடிதல்
☐ நறுமணம் ☐ அதிகப்படி சாயத்தைக் கழுவுதலில் எளிமை.

புதிய நேச்சுரீன்

உண்மையான ஷாம்ப்பூ-இன் கேசச்சாயம்.

இவையனைத்தும் தரும்—
இன்னும் தரும்.

நிகரற்ற நறுமணம்
மிகவும் மிகவும் இனிய மணம்—செடியுள்ள. செயற்கை மணமல்ல

சிந்தல் இல்லை சிதறல் இல்லை
பூசுதற்கோ மிக எளிது

தனித்த கேச கண்டிஷனர்
நேச்சுரீனில் மட்டுமே இருக்கிறது 'அமைட்'—ஒரு கண்டிஷனர். தனிப்பட்ட முறையில் ஹெலீன் கர்ட்டிஸ் உருவாக்கியது; கேசத்தை மென்மையாகவும் படிந்தும் இருக்கச் செய்கிறது.

உறையிலே அதிக அளவு பொருள்—
உங்கள் பணத்திற்கு 25% அதி மதிப்பு. ஒருமுறை முயல்வீர்—வேறே ஷாம்பூ-இன் கேசச்சாயம் எதும் விரும்பமாட்டீர்!



இயல்பான கருப்பு மற்றும் கரும்பழுப்பு நிறங்களில் கிடைக்கும்—ஆண், பெண் இரு பாலார்க்கும்.

கேச பராமரிப்பில் உலகில் தலையாய ஹெலீன் கர்ட்டிஸ் உறுதியளிக்கிறது.

நேச்சுரீன்—ஜப்பான் மற்றும் அமெரிக்காவில் உடனடி வெற்றிகண்ட கேசச் சாயம்.

இவ்விடம் விசாரிக்கவும்: **பாரி அண்டு கோ. லிட்.**, சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சிக்கந்திராபாத், விஜயவாடா, விசாகப்பட்டினம், கோழிக்கோடு, கொச்சி, பங்களூர், மங்களூர்.

சேதுவில் ஒலிக்கும்! காசியில் கேட்கும்!

பரம் பொருளையும் தானாகவே பாவித்துத் திருப்பள்ளி எழுச்சி பாடிப் பகவானின் நினைவைப் போற்ற மனிதன் கண்ட வழியே 'சுப்ர பாதம்'.

ஸ்ரீ காஞ்சி காமாட்சி அம்மைக்குச் சுப்ர பாதம் பாட வேண்டும் என்று திருவுளம் கொண்ட ஸ்ரீ காஞ்சி முனிவர் இசைச் செல்வம் மிகுந்த ஸ்ரீமதி எம். எஸ். சுப்பு லக்ஷ்மிக்கு அருளாசி வழங்கி அப்பணியை ஒப்படைத்தார்.

ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம் பாடிப் பரவிய ஸ்ரீமதி எம். எஸ்., காஞ்சிமுனிவரின் திருவுளக் கருத்தை ஏற்று நிறைவேற்றி வைத்தார்.

பாரதம் முழுவதும் மக்கள் கேட்டுப் பக்தி பரவசத்தில் ஆழ்ந்து போகக் காரணமான ஸ்ரீ காஞ்சி காமாட்சி சுப்ரபாதம், காசி காமகோடீசுவரர் ஆலயத்திலும் ஒலித்தது.

ஸ்ரீ ராஜ்கிஷோர் குப்த என்ற இளைஞர் இதனைக் கேட்டார். தென்னாட்டுக்கு அவர் வந்திருந்தபோது முக்கிய ஆலயங்களில் சுப்ர பாதம் பாடப்படுவதைச் செவிமடுத்துப் புளகித்தார். அவரையும் மீறி ஓர் ஆசை எழுந்தது. ஸ்ரீ காசி விசுவநாத சுப்ரபாதத்தை ஸ்ரீமதி எம். எஸ். ஈலமாகப் பாடச் செய்து, அதை ஸ்ரீ விசுவநாதர் ஆலயத்தில் ஒலி பரப்ப வேண்டும் என்று முடிவு செய்தார்.

ஸ்ரீ காசி மன்னரைப் போஷகராகக் கொண்டும் காசிவாழ் புலவர்களை உறுப்பினராகக் கொண்டும் சுப்ரபாதம் சமிதி ஒன்று அமைத்தார். ஸ்ரீ சதாசிவம் தம்பதியின் ஒப்புதல் கிடைத்ததும் சுப்ரபாதம் ஒன்று உருவாக்கவும் செய்தார்கள்.

இதற்குச் சில ஆண்டுகள் முன்பாகவே டாக்டர் வே. ராகவன் ராமேசுவரம் சென்றிருந்த போது அந்த ஆலயத்தில் ஒலிக்க ஒரு சுப்ரபாதம் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உதித்து சுலோகங்கள் யாத்திருந்தார். இந்த விவரம் தெரிய வந்தவுடன் இசைத் தட்டின் ஒரு புறம் காசி சுப்ரபாதமும் மறுபுறம் ராமேசுவர சுப்ரபாதமும் பதிவு செய்வதென தீர்மானமாயிற்று.

இப்படி எல்லாமே சொல்லி வைத்தாற் போல் இறையருளால் நற்பொருத்தத்துடன் அமைந்து வருவது கண்டு பரமானந்தம் அடைந்தார் ஸ்ரீ ராஜகிஷோர் குப்த.

பத்ம பூஷண் டாகுர் ஜயதேவ் சிங் போன்ற முதியவர்களை உடன் அழைத்துக் கொண்டும், ஸ்ரீ காசி விசுவநாதர் விசாலாட்சி அன்னபூர்ணியின் அருட் பிரசாதங்களோடும், புலவர்களின் வாழ்த்துரைகளுடனும் 15--11--76 அன்று சென்னை வந்தவர், முதற் காரியமாக ஸ்ரீ காஞ்சி முனிவரை சிவாஸ்தானம் சென்று தரிசித்து அவர் தம் அருளாசியைப் பெற்றார்.

அன்று மாலை 'கல்கி' கட்டடத்தில் பொறுக்கி எடுத்த அறிஞர்கள் — பிரமுகர்கள் கூடியிருக்க, 'கங்கா பூஜை' செய்து ஸ்ரீ சதாசிவம், ஸ்ரீமதி எம். எஸ். ஆகியவர்களுக்கு நன்றி கூறிப் பிரசாதங்கள் வழங்கிக் கௌரவித்து வாழ்த்தினார்.

இவ்விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்த தமிழக ஆளுநர் ஸ்ரீ மோகன்லால் சுகாடியா, காசிப் புலவர்கள் தகுந்த பாத்திரமான ஸ்ரீமதி எம்.எஸ்.ஸிடம் இப்பணியை ஒப்படைத்திருப்பதைப் பாராட்டினார். ஏற்கனவே ஆன்மீக ரீதியில் பலப்பட்டிருக்கும் தேசிய ஒருமைப்பாட்டினை மேலும் வளர்க்கும் விதமாக இந்த இசைத் தட்டு பல நூற்றாண்டுகளுக்கு ஒலிக்கும் என்றார்.

ஸ்ரீ சதாசிவம், சுப்ரபாதம் பாடும் பணியை ஸ்ரீமதி எம். எஸ். தமது பாக்கியமாகக் கருதுவதாக உணர்ச்சி பூர்வமாகக் கூறி மகிழ்ந்தார்.


பக்தி உணர்வைப் பெருக்கும் விதமாக வருகிற சிவராத்திரிக்குள் ஸ்ரீ காசி ராமேசுவர சுப்ரபாதங்கள் பாரதம் எங்கும் ஒலிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

செவிக்கினிய செய்தி அல்லவா ?



ஸ்ரீகாசி ராமேசுவரம் சுப்ரபாதம் தொடக்கவிழாவில் ஸ்ரீ சதாசிவம், ஸ்ரீமதி எம்.எஸ். ஸுடன் ஸ்ரீராஜ கிஷோர் குப்த. X ஸ்ரீ ராமேசுவரம் சுப்ரபாதம் பற்றி டாக்டர் வே. ராகவன் கூறுகிறார். அமர்ந்திருப்பவர்கள்: பத்மபூஷண் டாகுர் ஜயதேவ் சிங், தமிழக ஆளுநர் ஸ்ரீ மோகன்லால் சுகாடியா, ஸ்ரீ டி. எம். பி. மகாதேவன்.







போட்டிக் கதை.13

வேள்வித் தீ

பிரதிபா ராஜகோபாலன்

இண்டர்காமில் அவன் வந்திருப்பதைச் சொன்னார்கள். பதினொரு மணிக்கு எம். டி.யைப் பார்க்கலாமாம்.

அதுவரை என்ன செய்யலாம் என்று யோசித்தான். இன்னும் நாற்பது நிமிடங்கள் இருக்கின்றன. வெளியே போய், மறுபடியும் திரும்புவது சாத்தியமாகத் தோன்றவில்லை. உள்ளே எல்லோருக்கும் தான் அன்னியமாகப் படுவதை, உள்ளே நுழைகையிலேயே உணர்ந்திருந்தான்.

அறை விசாலமாக இருந்தது. தரையில் மெத்தென்ற விரிப்பை விரித்திருந்தார்கள். சுவர்கள் மொஸைக் போல் வழவழத்திருந்தன. சுவர் ஓரங்களில் உயரமான குஷன் வைத்த சோபாக்கள். நடுவில் டைனிங் டேபிள்போல் நீண்ட டேபிள். அதன் லாமினேட் நல்ல டிசைனில் அழகாயும் இருந்தது. அதன்மேல் நிறைய பத்திரிகைகள் இருந்தன.

இந்த நிறுவனத்தைப் பற்றி அவனுக்குத் தெரியும்.

டெக்ஸ்டைல் மெஷின்களுக்கு ஒரு ஸேல்ஸ் ஏஜண்டாக இருக்கிறார்கள். இந்தியா முழுதும் அதன் கிளைகள் இருக்கின்றன. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் இதன் மூலம் நடக்கிறது. இதன் மானேஜிங் டைரக்டரைப் பார்த்து ஒரு வேலை கேட்க வேண்டும். அவரால் முடியும் என்பது அவனுக்குத் தெரியும். அதனாலேயே இன்று வந்திருக்கிறான். போன வாரம் வந்தபோது, 'நேரமில்லை' என்றும், ஒரு தேதி, நேரம் குறிப்பிட்டு அன்றைக்கு வரச் சொன்னதாக அவர் பி. ஏ. சொன்னான்.

''நீங்கள் மிஸ்டர் சத்தியமூர்த்திதானே?''

''ஆமாம்.''

''உள்ளே அக்கவுண்ட்ஸில் கூப்பிடுகிறார்கள்.''

''வருகிறேன்'' என்று எழுந்து கொண்டான். ஸ்பானை எடுத்த இடத்தில் வைத்தான். தன் ஷர்ட்டை ஒரு முறை பார்த்துக் கொண்டு கதவைத் திறந்து வெளியே வந்தான்.

''சார், அக்கவுண்ட்ஸ் செக்ஷன் எது?'' என்று அவரைக் கேட்டான். அவன் வெறும் அட்டண்டர் என்று அவன் மார்பில் இருந்த பிளாஸ்டிக் பெயர் அட்டை சொல்லியது. இருந்தும், அவனை 'சார்' என்று அழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் அவன் இருந்தான்.

''மேல் மாடியில், வலது பக்கம்.''

அவன் அந்தப் பெரிய ஹாலில் நுழைந்து இரு பக்கமும் வரும் பார்வை அலைகளைத் தயங்கிப் பிளந்து கொண்டு, மாடியின் படிகளில் ஏறினான்.

படிகள்கூட விரிப்பால் மூடப்பட்டிருந்தன. மாடிப் படிகளை யொட்டி மேலே சுவரில் முக்கிய தேசியத் தலைவர்களின் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. மாடிக்கு வந்ததும் வலது பக்கம் பார்த்தான். கண்ணாடிக் கதவுகளுக்குள் நிறையப் பேர் தெரிந்தனர். யார் வரச் சொன்னார்கள் என்பதைக் கேட்காமல் வந்தது பிசகு என்பதை உணர்ந்தான்.

தன்னை வரச் சொன்னது யார் என்று யாரைக் கேட்பது? அந்தக் கேள்வியினால் தயக்கம் கொள்ள நேர்கையில், எதிர்ப்புறம் இருந்த கண்ணாடிக் கதவு வழியாக ஒருவர் சைகை செய்து உள்ளே வரச் சொன்னார்.

இவராகத்தான் இருக்கும் என்று யூகித்துக் கொண்டு கதவைத் திறந்து உள்ளே போனான். அந்தப் பகுதி ஏர்கண்டிஷன் செய்திருந்தது. காற்றினூடே மெல்லிய லாவண்டர் மணம் கலந்திருப்பதை இரண்டொரு விநாடிகளில் உணர்ந்தான்.

சைகை செய்தவர் அவனைப் பார்த்துப் புன்னகை செய்து கொண்டிருந்தார். சிவப்பாய் அகலமான நெற்றியில் நாமம் இட்டுக் கொண்டு, கிராப்பை ஒட்ட வெட்டிக் கொண்டு தளதளவென்று இருந்தார்.

அவரின் அகலமான டேபிளின் கண்ணாடிப் பரப்பின் மேல் இருந்த பிளாஸ்டிக் பலகை 'டிப்டி ஃபினான்ஷியல் கண்ட்ரோலர்' என்று காட்டியது.

அவன் மரியாதையுடன் 'குட் மார்னிங்' சொன்னான். அந்த மரியாதையை ஏற்றுக் கொண்டே 'உட்கார்' என்றார். அந்த 'உட்கார்' என்ற ஒற்றை வார்த்தையில் கலந்



குளிர் காய்வதற்கு அல்ல!

இருந்த பரிச்சயம். இணக்கம் அவனுள் ஒரு விழிப்பைத் தந்தது.

''உட்கார் முதலில்.''

அவன் உட்கார்ந்து கொண்டான்.

''எம். டி. அறைக்குப் போயிருந்தேன். நீ எழுதிக் கொடுத்திருந்த அட்ரஸ் பேப்பர் உள்ளே இருந்தது. எனக்குச் சில்லுன்னு ஆயிடுத்து. அதனால்தான் மேலே வந்ததும் வரச் சொன்னேன்'' என்றார் உற்சாகத்துடன்.

''என்னை உனக்குத் தெரியலேன்னு நெனைக்கிறேன்?''

''ஆமாம் சார்'' என்றான் தன் இயலாமை தொனிக்க.

''நெனச்சேன். மணியக்காரர் வைத்தியநாதனைத் தெரியுமில்லையா? அவரோட தம்பி ராமநாதன்...''

புரிந்து கொண்டான். அவனுடைய கிராமத்தின் மணியக்காரர் தம்பி இங்கே இருக்கிறார் என்று அவனுக்குத் தெரியாது. அவர் சின்ன வயசிலேயே டவுனில் படித்து வேலை பார்த்துக் கொண்டவர் என்பது மட்டும் தெரிந்திருந்தது. எப்பவோ, சின்ன வயசில் பார்த்தது. அப்பொழுதெல்லாம் அடிக்கடி வந்து கொண்டிருந்தார். அப்போதைக்கு இருந்த தோற்றத்தில் இப்போது பெரிதும் மாறுபட்டிருந்தார்.

அது சரி, தன்னைப் பற்றி ஞாபகம் வைத்திருப்பதற்குக் காரணம்?

அவன் அப்பாதான். அவர் போன மாதம் தான் காலமானார்.

வயது அறுபத்தைந்து இருக்கும். தம் வாழ்வின் ஆரம்பத்திலிருந்து தேச நலனில் ஈடுபட்டிருந்தவர். நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த பின்தான் திருமணம் செய்து கொள்வது என்ற உறுதியில் இருந்தவர். விடுதலை வேள்வியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். தனக்கு வந்த பரம்பரைச்



தடை!

பி. ஜி. வோட் ஹவுஸ் எழுதிய நூல்களுக்கு பிரிட்டிஷ் நூலகங்களில் சில காலம் தடை இருந்தது! ஏன் தெரியுமா?

இரண்டாம் உலக யுத்தத்தின்போது இவர் ஜெர்மானியரிடம் பிடிபட்டுச் சிறையிலிருந்தார். கோயபெல்ஸ் இவரை ஜெர்மன் ரேடியோ மூலம் பிரிட்டிஷ் மக்களிடம் பேசுமாறு கேட்டுக் கொண்டார். வோட் ஹவுஸ் இதற்குச் சம்மதித்தார். அவர் ஜெர்மனிக்கு ஆதரவாக ஒரு வார்த்தை கூடப் பேசிவிடவில்லை. தமது வழக்கமான நகைச்சுவை பாணியில் சில பேசினார் அவ்வளவே. ஆயினும் கோயபல்ஸ் சொற்படி கேட்டு இவர் நடப்பதா என்ற அளவிலேயே பிரிட்டிஷ் மக்களுக்கு அவர்மீது வெறுப்பு ஏற்பட்டு விட்டது.

விளைவு பிரிட்டிஷ் நூல்களிலிருந்து பி. ஜி. வோட் ஹவுஸின் நூல்கள் நீக்கப்பட்டன!

சொத்துக்களைத் துறந்தவர். மகாத்மா காந்தி என்ற அந்த தேவ புருஷனின் கால்படு தூசியாகத் தன்னை மாற்றிக் கொண்டு, அவர் நடத்திய மகத்தான போராட்டங்களுக்காகப் பல சிறைச்சாலைகளை அலங்கரித்தவர். பொன்பேடு என்ற அவர்கள் கிராமத்தின் பெயரையே மாற்றி அவன் அப்பாவின் பெயரையே வைத்த நிலையை அவன் புரிந்து கொண்டு, தன் அப்பாவையும் தன் அளவில் ஒரு தேவ புருஷனாக அவன் ஏற்றி வைத்திருக்கிறான்.

''சின்ன வயசில் உங்களைப் பார்த்திருக்கிறேன். பத்துப் பதினைந்து வருஷங்களாக நீங்க கிராமத்துக்கு வருவதில்லை. அதனால் தான் உங்கள் முகம் சட்டென்று ஞாபகத்துக்கு வரவில்லை.''

''ஆமாமா...எம்.டி. மேஜையில் இருந்த உன் அட்ரஸைப் பார்த்ததும் உன்னைப் பார்க்கணும்னு தோணித்து. கண்ணாடிக்கு அந்தப் பக்கம் நின்னு ஒரு செகண்ட் தயங்கிப் பார்த்தியே. அப்ப எனக்கே ஆச்சரியமாப் போயிடுத்து. உன் வயசிலே, உன் அப்பா இதே அச்சாத்தான் இருந்தார். இதே பார்வை, மென்மையான சுபாவம், யாரோடும் அதிர்ந்து பேசாத குணம். என்னைவிடப் பத்து வயது மூத்தவர். நம்ம கிராமத்திலே மட்டுமில்லே. ஜில்லாவிலேயே அவரோட இருபதாம் வயசுலேயே நல்ல பேரு. மன்னன், எப்படித்தான் ஜனங்களை வசியம் பண்ணி வெச்சிருந்தாரோ. மனுஷனுக்குக் கோபம் வந்துட்டாப் போதும். அக்னியேதான். ஒருதரம் நம்ம கிராமத்திலே மூலைத் தோட்டத்துக்காரர்னு சொல்றோமே, அவர் அப்பாவோட சேர்ந்துட்டு சத்தியாக்கிரகத்துக்குப் போயிருந்தார். அதை விசாரிக்கப் போலீஸ் தோட்டத்துக்குப் போயிருக்கு. அவர் சம்சாரம் சின்ன வயசு. கல்யாணமாகி மூணு மாசமாகியிருந்தது. அது, போலீஸைக் கண்டு பெரண்டு ஒண்ணுமே பதில் சொல்லாம இருந்திருக்கு. என்ன நான் கேட்கிறது, நீ பேசாம இருக்கிறதுன்னு, கூட வந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பட்னு அறைஞ்சிட்டு, அவ தாலியை எட்டிப் புடிச்சு இழுத்திருக்கான். ஆனா தங்கக் கொடியானதாலே வரல்லே. சத்தம் கேட்டுப் பக்கத்துக் குடிசைலே இருந்த பண்ணையாளுங்க வந்துட்டாங்க. ரகளை வரும்னு போலீஸ் போயிடுத்து. ஒரு மாசத்திலே, உங்கப்பாவும், தோட்டக்காரரும் விடுதலையாகி வந்தவுடனே இதைச் சொல்லியிருக்கா'' என்று சொல்லி அவனைப் பார்த்தார்.

''என்ன செஞ்சார் தெரியுமா? அந்த சர்க்கிள் யார்னு விசாரிச்சு, அவன் வீட்டிலே தான் இருக்கான்னு தெரிஞ்சு, நாலஞ்சு பேரோட போய் அவனைக் கேட்டார், 'இதென்ன நியாயம்னு?' அவன் 'அப்படித்தான், சரிதான் போடா'ன்னு சொல்லி விட்டான். அப்பறந்தான் அப்பாவுக்குத் தாள முடியல்லே. வாசல் பக்கம் இருந்த உலக்கையைத் தூக்கி இன்ன இடத்திலே அடிக்கிறதுன்னு இல்லாம அடிச்சு நொறுக்கிட்டார். யாரும் இதை எதிர்பார்க்கலே. கூட வந்த ஆளுங்க சர்க்கிளைத் தூக்கிட்டு வந்து, அந்தப் பொண்ணு கால்லே விழுக வச்சு மன்னிப்புக் கேட்க வைச்சுட்டாங்க. இது பெரிய இடத்து வரைக்கும் போய், அப்பா மேலே எந்த ஆக்ஷனும் வேண்டியதில்லேன்னு ஆச்சு. அப்பா கூட பின்னாலே ரொம்ப வருத்தப்பட்டு, அந்தச் சர்க்கிள்கிட்டே மன்னிப்புக் கேட்டாரு... அவர் நெனச்சிருந்தா மந்திரி ஆகியிருக்கலாம். சுதந்திரம் வாங்கித் தந்திட்டுத்தான் கல்யாணம் பண்ணிக்கிடறதுன்னு இருந்தார். அப்படிச் செய்தும் காட்டினார்...''

''உனக்கு வயசு என்னாச்சு?''

''இருபத்தைஞ்சு சார்.''

''எம். காம் படிச்சுட்டு மூணு வருஷமா என்ன செஞ்சே?''

ஒரு பிரபலமான ஆடிட்டரின் பெயரைச் சொல்லி, அவரிடம் உதவியாளனாக இருந்ததைச் சொன்னான்.

''காலேஜிலே லெக்சரராப் போறதுக்கு 'ட்ரை' பண்ணினியா?''

''கிடைக்கல்லே சார்.''

''அந்த ஆடிட்டர் நைஜிரியா போய்ட்டார்னு கேள்விப்பட்டேனே?''

''ஆமாம் சார். அதனாலேதான் நான் வேலை தேட வேண்டிய நிலைமை.''

''புரியறது. இங்கே வரணும்னு எப்படித் தோணித்து?''

''அந்த ஆடிட்டர்தான் இங்கே வரச் சொன்னார்.''

''நம்ம எம். டி. உங்க அப்பாவோட நெருங்கிய சிநேகிதர், தெரியுமா?''

''தெரியும் சார், ஆடிட்டர் சொன்னார்..''

''அப்படியா? அம்மா சௌக்கியமா?''

'' சௌக்கியம்னு பூரண சௌக்யம்னு சொல்ல முடியாது.''

''என்ன ட்ரபிள்?''


''ஹார்ட் வீக்னஸ், வைத்தியமே வேண்டாம்னு பிடிவாதமா இருக்காங்க.''

''உங்க அப்பா போனதும் இன்னும் அதிகமாய் ஆகியிருக்கும்...''

''ஆமாம் சார்.''

''ம்... ஒண்ணு பண்ணு. எம். டி. கிட்டச் சொல்லி இருக்கேன். நீ போய் விஸிட்டர்ஸ் ஹால்லே இரு. உள்ளே அவர் கிட்ட டி.எம்.ஏ. மெம்பர்ஸ் ஒரு குருப்பா வந்திருக்கா. அதனாலேதான் உன்னை உள்ளே கூப்பிடறதுக்குத் தாமதம் ஆயிண்டிருக்கு. அவர்கள் வெளியே போனதும் நீ உள்ளே போ. எல்லாம் சொல்லிடறேன், என்ன?''

கேர்ஃப்ரீ* பாதுகாப்பு



அதாவது இது முழுமையான பாதுகாப்பு அளிக்கிறது. இதற்காக நீங்கள் கொடுக்கும் பணத்தைவிட மிக அதிக மதிப்பு வாய்ந்தது.

மாதத்தில் அந்த ஐந்து நாட்கள், பெண்களின் உடலுக்கு முழுவதும் சம்பகமான, தனிப்பட்ட பாதுகாப்பு தேவைப்படுகிறது: அதாவது கேர்ஃப்ரீ பாதுகாப்பு. சானிடரி பாதுகாப்பு சாதனங்களை உருவாக்கும் உலகின் தலையாய நிறுவனமான ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் இதைத் தயாரிக்கிறார்கள். ஒரு பெண்மணி பாதுகாப்பையும் காப்புறுதியையும் உணருவதற்குத் தேவையான சிறந்த அம்சங்களைக் கொண்டுள்ளது கேர்ஃப்ரீ.

விசேஷ ஒண்டர்ராப் மேலுறை
கேர்ஃப்ரீ தன் வடிவத்தை சீராகவைக்க உதவுகிறது...சாதாரண நேப்கின்களைப் போல் இது வளையவோ, கிழியவோ செய்யாது. இது உட்புற அடுக்குகளில் சாரத்தை உறிஞ்சிக் கொள்கிறது. எனவே உங்கள் சருமம் உலர்ந்து இருக்கும், உங்களுக்கு சௌகரியமாக இருக்கும்.

நீலநிற பிளாஸ்டி-ஷீல்ட் தடுப்பு
கேர்ஃப்ரீயின் அடிப்பாகம் மற்றும் பக்கங்களைப் பராமரிக்கிறது பாதுகாப்பான பாலித்தீன். ஆகையால், அது இடம் விட்டு நகரும் வாய்ப்பில்லை; கறை படியும் பயம் இல்லை.

அதிக உறிஞ்சும் தன்மையுள்ள விசேஷ பொருள்
மிக நன்றாக உறிஞ்சுகிறது: உறுதியுடன் பாதுகாப்பளிக்கிறது.

கச்சிதமாகப் பொருந்த முனைப்பாகம்
கேர்ஃப்ரீ மட்டுமே விரும்பியபடி சரிசெய்து கொள்ளும் நீளத்தில் வருவதால், அது உங்களுடைய உடலில் கச்சிதமாகப் பொருந்துகிறது. ஒவ்வொரு பேக்கிலும், இலவச கேர்ஃப்ரீ பெல்ட் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

எளிதில் ஒதுக்கிவிடலாம்
கேர்ஃப்ரீ ஒரு ஆபத்தற்ற, எளிதில் ஒதுக்கித் தள்ளக்கூடிய நேப்கின்; இதை பிளஷ்ஷில் தள்ளிவிடலாம்...வெளியில் செல்லும் போதோ, பயணத்தின்போதோ இது ஒரு வரப்பிரசாதம்—
கேர்ஃப்ரீ பாதுகாப்பு;முழுமையான பாதுகாப்பினை விரும்பும் பெண்மணிக்கு இது மிகவும் முக்கியமானது.
கேர்ஃப்ரீ: உங்களுக்கு முழுமையான உறுதி தரும் பாதுகாப்பு.





கேர்ஃப்ரீ:
உங்களுக்கு முழுமையான உறுதி தரும் பாதுகாப்பு.


*சானிடரி நேப்கின்களின் வர்த்தகப் பெயர், கேர்ஃப்ரீ மற்றும் ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன், யு. எஸ்.ஏ-யின் டிரேட்மார்க்குகள்.

Johnson & Johnson*



Interpub/GSC/2/76 Tml
சிந்தால்
இந்தியாவில் துர்நாற்றம் நீக்கும் ஒரே சோப்பு!
வியர்வையால் உண்டாகும்
உடல் துர்நாற்றத்தைத்
திறனுடன் தடுக்கிறது.
எவ்வொரு சோப்பும் செய்யாத
அளவில் உங்களை முழுமையான
புத்துணர்வுடன் திகழச்
செய்கிறது.
சிறப் பராமரிப்பிற்காக சரும
வல்லுநர்களால் சிபாரிசு செய்யப்பட்டது.
INTHOL
விசேஷ
சலுகை!
சிந்தால் சோப்பின் விலையில் 30 பைசா தள்ளுபடி
முந்துங்கள்! சரக்கு உள்ளவரையே இச் சலுகை!!

திருநின்றவூரில் புதிய கோவில்



சென்னையை அடுத்த திருநின்றவூர் லட்சுமி புரத்தில் ஸ்ரீ பால விநாயகர், ஸ்ரீ பால முருகன், ஸ்ரீ பால சாஸ்தா (ஐயப்பன்), ஸ்ரீபாலாம்பிகை ஆகியவர்களுக்கு ஆலயம் கட்டி அதில் விக்கிர கங்களைப் பிரதிஷ்டை செய்ய ஏற்பாடு நடந்து வருகிறது.

இப்பணியில் பங்குகொள்ள விரும்பும் அன்பர்கள் அணுகவேண்டிய முகவரி: எச். மாணிக்க லால் ஜைன், எம். டி. எச். ரோடு, திரு நின்றவூர்.

''சரி சார். உங்களை நான் இங்கே எதிர் பார்க்கலே. இருந்தும் நீங்க பண்ற உதவிக்கு என்ன சொல்றதுன்னே புரியலே...''

''என்ன நீ, புரியலே கிரியல்லேன்னு... என்னோட கடமை. போ. பின்னாலே நான் வர்றேன்.''

''சரி வர்றேன் சார்.''

மறுபடியும் அந்தஹாலில் திரும்பநுழைந்து விஸிட்டர்ஸ் ஹாலுக்கு வந்தான். திரும்பு கையில் அவனையும் அறியாமல் ஒரு பெரு மிதம் இழைந்திருந்தது.

''ஸார்!'' என்று பக்கத்தில் அழைத்தது போலிருந்தது. திரும்பினான். ஒரு பணியாள், டிரேயில் ரோஸ் மில்க் நிறைந்த கண்ணாடி டம்ளர்.

''எடுத்துக்குங்க சார்.''

அவனுக்குத் திகைப்பா யிருந்தது. அவன் யாரென்று — அதுவும் ரோஸ் மில்க் வாங்கித் தருமளவுக்கு இங்கே யாருக்குத் தெரியும்? ஆள் மாற்றித் தருகிறார்களா? ஒருவேளை டி. எஃப். சி. அனுப்பி வைத்தாரா?

''யார் அனுப்பினார்கள்?'' என்றான்.

''எம். டி. சார். மானேஜிங் டைரக்டர்.''

அவன் உண்மையிலேயே தன்னுள் வியந்து கொண்டான்.

அவன் வாங்கிக் கொண்டான். அந்தப் பணியாள் போய் விட்டான். பாதி குடித்துக் கொண்டிருக்கையிலேயே அதே பணியாள் மீண்டும் வந்து, ''எம். டி. கூப்பிடறாங்க'' என்றான்.

வேகமாக உறிஞ்சிக் குடித்து விட்டு அவ னைப் பின்தொடர்ந்தான்.

எம். டி.யின் அறை, அந்த ஹாலின் இறுதியில், சற்று மறைந்திருப்பது போன்ற அமைப்பில் இருந்தது பெரிய அறை.

அவன் அந்த மேஜையை நெருங்குகையில் அவர் எதையோ மும்முரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அதன் தீவிரத்தைக் கலைக்கலாமா வேண்டாமா என்று ஒரு விநாடி தயங்கி நிற்கையில் அவரே, அந்தப் பேப்பர் களிலிருந்து மீண்டு தலை நிமிர்ந்தார்.

''குட் மார்னிங் சார்.''

''எஸ். ப்ளீஸ் டீ ஸிட்டட்.''

அவன் உட்கார்ந்து கொண்டு, மேஜை மேல் இருந்த சில காகிதங்களைப் பார்த்தான். ஓர் இயந்திரத்தின் படத்துக்குக் கீழ் ஹை ஸ்பீட் ட்ராயிங் ஃப்ரேம் என்று போட்டிருந் தது. அதன் கீழே மெயின் டாட்டா, ஸ்பீட், டெலிவரி, ட்ராஃப்டிங் என்றெல்லாம் படிக்க முடிந்தது.

''மிஸ்டர் சத்தியமூர்த்தி! உங்களைப் பார்க் கறப்போ, உங்கப்பாவையே பார்க்கிறாப்லே இருக்கு. உண்மையைச் சொன்னா, உங்கப்பா முன்னாலே நான் உட்கார்ந்திருக்கறேங்கிறபிர மையிலேதான் உட்கார்ந்திருக்கேன். அவர் முன்னாலே கூட அதிகமாப் பேசற வழக்கம் எனக்கில்லே. அவர்கிட்ட ரொம்ப மரியாதை. அதனாலேதான் இப்பக்கூட அந்த நினைவிலே தான் மௌனமா இருந்திட்டேன்... என்னை உங்களுக்குத் தெரிஞ்சிருக்காது. இந்தப் பதவி, இதோட வசதி யெல்லாம் அவர் போட்ட பிச்சை. அவர் ரெகமண்டேஷனிலே தான் இந்த ஆபீஸுக்கு வந்து சேர்ந்தேன். இன்னைக்கு எம். டி.....'' அவர் சற்றுக் கண் களை மூடிக்கொண்டு ஏதோ பிரமையில் ஆழ்ந்தவர்போல் சில விநாடிகள் இருந்து விட்டு மறுபடியும் சொன்னார்:

''போன தரம் வந்திருந்தப்போ அப்பா பேரைச் சொல்லியிருந்தீங்கன்னா, அன்னிக்கே மாட்டர் முடிஞ்சிருக்கும். இப்பக்கூட டி. எஃப். சி. சொல்லலேன்னா, உங்களைப் பார்த் திருக்க மாட்டேன். சரி, இப்பவும் ஒண்ணும் தப்பாகலே... எல்லாம் நல்லதுக்குத்தான். என்னோட வாழ்வையே உயர்த்தின என் நண் பரோட மகனுக்கு உதவறதுலே எனக்குப் பரம திருப்தி. என் ஜென்மமே சாபல்யம் அடைஞ்ச மாதிரி இருக்கு. இப்ப வேகன் ஸின்னு ஒண்ணும் இல்லே. இருந்தும், உனக்காக ஒரு வேலை உண்டாக்க இயலும்! 'அக்கவுண்ட்ஸ் ஆபீஸர் கிரேடு'ன்னு ஒண்ணு தர்றேன். டி. எஃப். சி.க்கு உதவியா இருங்க. சிறிது காலத்தில் நீங்க கணக்கு அதிகாரி யாக உயர்ந்து விடலாம்! இதை நான் செய்தே தீரணும். என்னோட கடமை இது. உங்களுக்காக இல்லா விட்டாலும் உங்க அப்பாவுக்காக, அவர் செய்த தியாகத்துக் காக. சுதந்திரம் வாங்கறதுக்கு அவர் பட்ட கஷ்டத்துக்காக; என்னைப்போல எத்தனையோ பேர் வாழ்க்கையிலே விளக்கேத்தி வச்ச துக்காக. அவர் நெனச்சிருந்தார்னா, ஒரு கவர்னராகவோ, காபினெட் மந்திரியாகவோ இருந்திருக்கலாம். 'ஆனா அதுக்காக நான் சுதந்திரம் வாங்கப் போராடலே'ம்பார். ஆகவே மிஸ்டர் சத்தியமூர்த்தி இன்னையிலே ருந்து நீங்க என்னோட ஸ்டாஃப்...ஓகே?''

''சார், மன்னித்துக் கொள்ளுங்கள். இந்த வேலையை நான் ஏற்றுக் கொள்ள மாட் டேன். என் படிப்பைச் சொல்லி வேலை கேட் கத்தான் இங்கே வந்தேன். என் அப்பாவின் தியாகத்தைச் சொல்லி அல்ல. தன் மகன் எதிர்காலத்துக்காக அவர் இந்த நாட்டுக்கு உழைக்கவில்லை. அவர் வளர்த்த வேள்வித் தீயில் நான் குளிர் காய விரும்பவில்லை. அவ ருக்கு இதைப் போல எண்ணங்கள் இருந்த தில்லை. இருந்திருந்தால் அவர் வாழ்நாளி லேயே இதைவிட ஒரு நல்ல பதவியில் என்னை அமர்த்தி யிருக்க முடியும். என் திறமையில் தான் நான் பிழைக்க வேண்டும் என்பது அவருடைய கட்டளை. ஆகவே...''

''புரிகிறது, மிஸ்டர் சத்தியமூர்த்தி.''

''என் அப்பாவிடம் நீங்கள் வைத்திருக்கும் மரியாதைக்கு நன்றி சார். நான் வருகிறேன்.''

அவன் எழுந்து, நிதானமாக நடந்து கத வைத் திறந்து வெளியே வந்தான்.

சற்று முன் குடித்த ரோஸ் மில்க் இப் பொழுது கசப்பாகத் தோன்றியது. ●

படித்தோம் சொல்கிறோம்





சௌந்தர்ய லஹரீ

சகல ஜீவராசிகளுக்கும் தாயான அன்னை பராசக்தியை வழிபட்டு உய்ய முடியும் என்பதை ஆதி சங்கரர் தமது ஸௌந்தர்ய லஹரி மூலம் உலகுக்கு எடுத்துக் காட்டுகிறார். இந்த நூலின் நூறு சுலோகங்களையும் பாராயணம் செய்தால் பெறற்கரிய பேறுகளைப் பெறலாம். அப்படி முடியாதவர்களுக்கு அவரே வழிபாட்டை எவ்வளவு சுளுவாக்கிக் காட்டுகிறார், பாருங்கள்!

'தாயே, நான் பேசுவதெல்லாம் ஜபமாயும், கைகால் அசைவுகள் முத்திரைகளாகவும், நடப்பதெல்லாம் பிரதட்சிணமாயும், சாப்பிடுவது ஹோமமாயும், படுத்துக்கொள்வது நமஸ்காரமாகவும், என்னுடைய எல்லா சுகங்களும் உனக்கு உபசாரமாகவும் விளங்கட்டும். ஆத்மார்ப்பணமாய்ச் செய்யப்பட்ட, இவையெல்லாம் உனக்குப் பூஜையாகட்டும்.'

மானஸ பூஜையாலேயே அன்னை பராசக்தியை மகிழ்விக்கலாம்.

ஞானபாஸ்கர ஸ்ரீ பி. என். நாராயண சாஸ்திரிகள் ரத்தினச் சுருக்கமாக எல்லோருக்கும் புரியும் வண்ணம் நூறு சுலோகங்களுக்கும் தமிழில் உரையெழுதியிருப்பதோடு ஒவ்வொரு சுலோகத்தையும் பாராயணம் செய்யும் முறையையும் அதனால் ஏற்படும் பயனையும் குறிப்பாகக் கொடுத்துள்ளார். தேவி உபாசகராக விளங்கும் அவரது உரையை அழகாக வெளியிட்டிருக்கிறது ரா. ஸ்ரீ. ஸ்ரீ. பதிப்பகம்.

கிடைக்குமிடம்: சி. 552, அசோக்நகர், சென்னை-83. விலை ரூ. 3.00.

ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள்

மந்திராலயம் என்ற சொல்லுக்கே ஒரு மந்திர சக்தி உண்டு என்று கூறுமளவுக்கு மாபெரும் மஹானீயராக வாழ்ந்தவர் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள். துவைத, அத்வைதத்துக்கு அப்பாற்பட்டவராக, 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே' என்று வாழ்ந்த அவர், திருஞானசம்பந்தரைப் போல எத்தனையோ அற்புதங்களை நடத்தியவர். சாதி – மத பாகுபாடின்றி மக்கட் சேவைக்கே தம்மை அர்ப்பணித்து வந்த மகான். உலகத்தின் நலனுக்காக அற்புதங்கள் செய்து பணியாற்றிய அவர், தம் சொந்த வாழ்க்கையை எப்படி நடத்தினார் என்பதை அறியும் போது கண்கள் நீர்த்திரையிடுகின்றன. மனிதன் தெய்வமாகத் திகழ முடியும் என்பதை அவர் வரலாற்றின் மூலம் அறியும் பொழுது இன்றும் அவர் சாகாவரம் பெற்றவராக, மக்களுக்கு 'மூவா மருந்து' அருளுகிறார் என்பதையும் காண்கிறோம். வழக்கறிஞர் ஸ்ரீ சி. ஆர். ரவி அவர்கள் பக்தி உணர்வோடு சரளமான தமிழ் நடையில் அப்பெரியவரின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

—ரா.வி.

பிரசுரம்: காமாக்ஷிராம் பப்ளிகேஷன், 103—ஏ/2, சாலை ரோடு, உறையூர், திருச்சிராப்பள்ளி-3. விலை ரூ. 3-00.

சிந்தனைகள்

ஆளும் காங்கிரஸின் முக்கிய தலைவர்களில் ஒருவராகிய திரு எம். பக்தவத்சலம் அவர்கள் 21, ஜூலை 75 லிருந்து 22 செப்டம்பர் 76க்கு இடைப்பட்ட நாட்களில் தமிழ் நாட்டிலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி அவ்வப்போது எழுதிவந்த கருத்துக்களின் தொகுப்பே இந்த நூல். பொதுவாக மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகளை ஆதரித்தும், தி. மு. க. அரசினையும், அதன் செயல்களையும் கண்டித்தும் அவர் வெளியிட்ட கருத்துக்கள் இன்றைய ஆளும் காங்கிரஸ் கட்சியினருக்கு நல்ல பிரசார நூலாகப் பயன்படலாம்.

''வியாழனன்று நான் காரைக்குடியிலிருந்தபோது தி. மு. க. அரசின் மற்றொரு முறைகேட்டினைப் பற்றிக் கேள்விப்பட்டேன். தமிழ்நாட்டில் உள்ள அறுநூறு கோவில்களிலிருந்து ஆலயம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் ஆறு லட்சம் ரூபாய் ''முரசொலி''க்கு அளிக்கப்பட்டதாம். இதற்குக் கலைஞர் என்ன சமாதானம் கூற முடியும்?'' என்று 27 மார்ச் 76ல் கேட்டிருக்கிறார்.

' ''குழலோசை'' என்ற பத்திரிகை ஒரு மலர் போடுவதாகச் சொல்லி ஒன்றரை லட்ச ரூபாய்க்கு மேல் கோவில் பணம் பெறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மலர் வெளிவரவேயில்லை. கட்சிக்கு வேண்டிய அந்தப் பத்திரிகைக்காரர், வாங்கிய பணத்தை ஜீரணித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.''

இப்படி தி. மு. க. ஆட்சியின் பலப் பல ஊழல்களை திரு பக்தவத்சலம் எடுத்துக் கூறும்போது மத்திய அரசு


எடுத்த நடவடிக்கை மிகச் சரியான நடவடிக்கை என்ற எண்ணம் உண்டாகிறது. அது மட்டுமல்ல! ஏன் இவ்வளவு காலந்தாழ்ந்து நடவடிக்கை எடுத்தது என்றுகூடக் கேட்கத் தோன்றும்.

இணைந்த காங்கிரஸைப் பற்றி, ''உடலினுள்ள ஓர் எலும்பு முறிந்து பின்னால் இணைக்கப்பட்டால் அந்த எலும்புக்கு முன்னிருந்த பலத்தை விட அதிக பலம் ஏற்படுகிறதென்று மருத்துவர்களே கூறுவார்கள். அவ்வாறே இன்று இணைகின்ற தமிழ் நாடு காங்கிரஸ் பலம் பொருந்திய ஸ்தாபனமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை'' என்று 15, பிப்ரவரி 76ல் ஜோசியம் கூறினார். இன்னும் இது பகற்கனவாகவே இருந்து வருகிறது.

மொத்தத்தில் பெரியவர் திரு பக்தவத்சலம் அவர்களின் எண்பதாவது பிறந்த தின விழாவினை யொட்டி வெளியிடப்பட்டுள்ள இப்புத்தகம் அரசியல் — நிர்வாகம் ஆகிய துறைகளில் ஈடுபாடு உடையவர்களுக்கு ஒரு நல்ல ''கைடு'' போன்றதாகும்.

—எஸ்.வி.எஸ்.

கிடைக்குமிடம்: 10, கந்தப்ப ஆசாரி தெரு, சென்னை-7. விலை ரூ. 3-00.



விண்வெளி அற்புதங்கள்

'விஞ்ஞானக் கருத்துக்களைத் தமிழில் தரமுடியுமா?' என்ற ஐயப்பாட்டை நீக்கித் 'தமிழால் தரமுடியும்' என்று நிரூபிப்பதே போல் சமீப காலத்தில் பல விஞ்ஞான நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன. விண்வெளிப் பயணத்தின் சரிதத்தை விளக்கமாக, விறுவிறுப்பான தமிழில் மோகன் சுந்தரராஜன் தருகிறார்.

விண்வெளிச் சாதனைகளால் மனித குலத்துக்கு என்ன பயன்? நாட்டுக்குள்ளும் இதர நாடுகளுடனும் விரைவான, தெளிவான தகவல் தொடர்பு கொள்ள, புயலை முன்கூட்டி அறிய, வானிலையை ஆராய, பயிர் வளம், நிலவளம், நீர்வளம் பற்றி உணர, நாட்டின் பாதுகாப்புக்கும், கப்பல், விமானப் போக்குவரத்துக்கும் உதவ — இவற்றுக்கெல்லாம் 'விண்வெளிப் பயண ஆராய்ச்சிகள் பயனு கின்றன. வருங்காலத்தில் பல புதிய பொருள்கள் 'விண்வெளியில் தயாரானவை!' என்று அறிமுகமாகலாம்.

இப்படி விண்வெளி ஆராய்ச்சி சரிதத்தையும், அற்புதங்களையும், சாதனைகளையும் பயன்களையும் கவைபட, ஒரு நல்ல நவீனத்தைப் படிப்பது போன்று சொல்லிக் கொண்டு போகிறார் ஆசிரியர்.

—கௌசிகன்

ஆசிரியர்: மோகன் சுந்தரராஜன். வெளியிட்டோர்: நேஷனல் புக் டிரஸ்ட், புது தில்லி. விநியோகிப்போர்: பாரிநிலையம், 1/59, பிராட்வே, சென்னை-1. விலை ரூ. 9-00.

சுந்தரகாண்டச் சுருக்கம்


சுந்தர காண்டம் பாராயணம் செய்வது மிகவும் நல்லது. க்ஷேமத்தைக் கொடுக்கும் என்பது பலருக்கும் தெரிந்ததுதான். முழுக்கப் பாராயணம் செய்ய அவகாசம் இல்லாதவர்களுக்குச் சுருக்கம் ஒன்றைத் தயாரித்திருக்கிறார் டி.ராம்பி ராகவாச்சாரி. சாரமான 108 ஸ்லோகங்களைத் தொகுத்துத் தந்திருக்கிறார். சில ஸ்லோகங்களுக்குக் கருத்தும் விசேஷ அர்த்தங்களும் தரப்பட்டுள்ளன. இத்துடன் அனுமத் அஷ்டோத்ர சத நாம ஸ்தோத்திரம் இணைந்துள்ளது.

விலை 75 காசு. தபால் மூலம் பெற ரூ. 1. விலாசம்: திரு ராகவாச்சாரி, 27, சுந்தர மூர்த்தி விநாயகர் கோயில் தெரு, சென்னை 600 005.

படங்கள் :

- ஸ்ரீ ராஜராஜேஸ்வரி.
- திரு பக்தவத்சலம்.
- ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள்.
- நிலாத் தரையில் இறங்கிய அமெரிக்க விண்கலமும் முதல் மனிதனும், பின்னணியில் பூமி.





ஹாஸ்டல் புராணம்!





கல்லூரிக் கதை 7

விஜயா பாலகிருஷ்ணன்

எத்தனையோ கல்லூரிகளில் 'வார்டன்'ஆகப் பணியாற்றும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. இதற்கு ஒரு காரணம் நீண்ட காலம் நான் பிரம்மசாரியாகக் கழித்தது. இன்னொரு காரணம் என்னுடைய ஜீரண சக்தி. எந்த விதமான உணவையும் என்னால் ஜீரணிக்க முடியும்!

ஆந்திராக் கல்லூரி ஒன்றில் வேலை பார்க்கையில்தான் அஞ்சி ரெட்டியை எனக்குப் பழக்கம் ஏற்பட்டது. ஆஜானுபாகுவான தோற்றம் படைத்தவன். வயது என்னைக் காட்டிலும் கூடுதலாகவே இருந்திருக்கும். அந்தக் கல்லூரியில் படித்து வந்த மாணவர்கள் எல்லோருமே வயதில் கொஞ்சம் பெரியவர்கள்தாம். அநேகம் பேர்களுக்குக் கல்யாணமாகி யிருந்தது. ஓரிருவர் அரசியல்வாதிகள். சில மாதங்கள் கல்லூரியில் படிப்பார்கள். பிறகு ஏதாவது இயக்கத்தில் சேர்ந்து ஜெயிலுக்குப் போவார்கள். விடுதலையானவுடன் மீண்டும் வகுப்புக்கு வருவார்கள். இதேபோல் சினிமா நடிகர் ஒருவரும் படித்து வந்தார். 'ஷூட்டிங்' இல்லாத போதெல்லாம் கல்லூரியில் தலை காட்டுவார். தொடர்ந்து படிக்காததினால் பல மாணவர்களின் வயது இருபத்தைந்தைக்கூடக் கடந்திருந்தது.

'ஷூட்டிங்'குக்குப் போவதாக இருந்தாலும், ஜெயிலுக்குப் போவதாக இருந்தாலும் 'வார்டனி'ன என்னிடம் விடைபெற்றுக் கொண்டுதான் போவார்கள் மாணவ மணிகள். ஏன், சினிமாவுக்குப் போவதாக இருந்தால்கூடச் சொல்லி விட்டுத்தான் போவார்கள். வெள்ளிக்கிழமை தோறும் என் கதவருகில் வந்து நிற்பான் அஞ்சி ரெட்டி. அவனுக்கு ஊருக்குப் போக வேண்டும். ''என்ன, எண்ணெய்க் குளியா? போ, போ...'' என்று விடை தருவேன். அஞ்சி ரெட்டிக்கு ஊருக்குப் போய்த் தைல ஸ்நானம் செய்தால்தான் தலை குளிருமாம். இத்தனைக்கும் அவன் ஊருக்குப் பக்கத்தில் எந்தக் குற்றாலமும் இல்லை என்று அவனே குறிப்பிட்டிருந்தான். தீர்க்கமான எண்ணெய்க் குளிக்கு முன் உள்ளூர் நாவிதன் அப்பள நரசய்யா, உடம்பில் தைலத்தைத் தேய்த்து அடி அடி என்று அடிப்பானும். அதை அஞ்சி ரெட்டி வர்ணிக்கையில் நமக்கே அந்தத் தலை அலங்கார நிபுணரிடம் அடிவாங்கிக் கொள்ள வேண்டும்போல் தோன்றும்.

கடைசியில் அஞ்சி ரெட்டி ஹாஸ்டலை விட்டுப் போகும் நாள் வந்தது. மாணவர் பிரிவுபசாரக் கூட்டத்துக்கு என்னையும் அழைத்திருந்தார்கள். நான் பேசுகையில் அஞ்சி ரெட்டியின் எண்ணெய் ஸ்நானத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். ''சனிக்கிழமையன்று சூரியன் உதிக்காமல்கூட இருக்கலாம். ஆனால் அஞ்சி ரெட்டி எண்ணெய்க்குளி குளிக்காமல் இருக்க மாட்டார்'' என்று குறிப்பிட்டேன். மாணவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஏனென்று தெரியாமல் விழித்தேன். விசாரித்ததில் விஷயம் விளங்கியது. எண்ணெய் ஸ்நானமும் இல்லை, மண்ணாங்கட்டியுமில்லை! அஞ்சி ரெட்டி தன் புது மனைவியைத் திருட்டுத்தனமாகச் சந்திப்பதற்காகத்தான் வாரம் தவறாமல் கிராமத்துக்குப் போய்க் கொண்டிருந்தான். படிப்பு முடியும் வரையில் மனைவியைச் சந்திக்கக் கூடாது என்று கற்பனையற்ற பெற்றோர்கள் தடையுத்தரவு போட்டால் திருட்டுத்தனமாக எண்ணெய் குளி குளிக்கத் தானே வேண்டும்? ஆனால் அதற்காக அஞ்சி ரெட்டி அப்பள நரசய்யா என்ற நாவிதனை உருவாக்கியிருக்க வேண்டாம்!... அதற்குப் பின் அந்தக் கல்லூரி அகராதியில் எண்ணெய்க் குளி என்ற வார்த்தைக்கு ஒரு புது அர்த்தம் தரப்பட்டது என்று குறிப்பிடவா வேண்டும்?


மற்றொரு கல்லூரியில் நான் 'வார்டனா'கப் பணியாற்றுகையில் மாணவர்கள் 'ஸ்டிரைக்' செய்தார்கள். ஹாஸ்டல் சாப்பாட்டின் அளவும் தரமும் மோசமாகிக் கொண்டு வந்தது தான் காரணம். என்னிடம் தனிப்பட்ட

முறையில் மாணவர்களுக்குக் கோபம் ஏது மில்லை. ஆனால் கல்லூரி நிர்வாகத்திடம் நான் ஆணித்தரமான முறையில் மாணவர் களின் சாப்பாட்டுக் குறையை எடுத்துச் சொல்லவில்லை என்று அவர்கள் எண்ணி ஞர்கள். வழக்கம்போல் ஹாஸ்டல் சாப் பாட்டைப் பழித்து எங்கு பார்த்தாலும் 'போஸ்டர்'கள் ஒட்டினார்கள். 'அம்மா பசிக்குதே...' என்ற சினிமாப் பாட்டிலிருந்து வங்காளப் பஞ்சத்தின் பட்டினியில் அடி பட்ட துர்ப்பாக்கியசாலிகளின் புகைப் படங்கள் வரையில் எத்தனையோ விஷயங் களைப் பிரசாரத்துக்காகப் பயன்படுத்தினர். கல்லூரி நோட்டீஸ் போர்டில் பின்வரும் தோரணையில் ஒரு 'போஸ்டர்' ஒட்டியிருந் தார்கள்: இட்டிலி இளைத்துக் கொண்டே வருகிறது. ஹாஸ்டல் வார்டன் பருத்துக் கொண்டே போகிறார்! இதன் மர்மம் என்ன ?

இரவோடு இரவாக மாணவர் களுக்குத் தெரியாமல் என்னுடைய புகைப்படமொன்றைப் போஸ் டருக்குக் கீழே ஒட்டி வைத் தேன். 'பருத்துக் கொண்டு வரும் வார் டன் இவர்தான்!' என்ற குறிப்பும் பக்கத்தில் இருந்தது. மறுநாள் இதைப் பார்த்த மாண வர்கள் ஸ்டிரைக்கின் தீவிரத்தை மறந்து விழுந்து விழுந்து சிரித்தார்கள். காற்றடித் தால் பறந்து போகக் கூடிய என் பூஞ்சை உடம்பைப் பார்த்தால் யாருக்குத்தான் சிரிப்பு வராது? ஆனால் கதை அத்துடன் முடிந்து விடவில்லை. எமகாதகர்களான மாண வர்கள் என்படத்தையே தங்கள் பிரசாரத் துக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்கள்! 'பாவம், வார்டன்! அவரும் எங்களுடன் பட்டினி கிடக்கிறார்! படத்தைப் பார்த்தா லேயே தெரியவில்லையா?' என்ற தோரணை யில் புதுப் போஸ்டர் போட்டு விட்டார்கள்!

மாணவிகளுக்குப் 'பாதுகாப்பாளரு'ப் பணியாற்றும் பாக்கியமும் எனக்குக் கிடைத் தது. பிரம்மசாரியாக இருந்தும் கல்லூரி நிர்வாகத்தினர் என் தலையில் இந்தப் பொறுப்பைச் சுமத்தினது ஆசிரியர்கள் வட்டாரத்தில் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. 'குட் பாய்' (Good boy) 'பிரைஸ் பாய்' (Prize boy) என்றெல்லாம் என்னைக் கேலி செய்தார்கள். ரிஷ்யசிருங்கர் என்ற பட்டப் பெயரும் கிடைத்தது.

மாணவிகளை ஏதாவது சாக்குச் சொல்லிப் பார்க்க வருவார்கள் மாணவர்கள். நாடகத் துக்கு டிக்கெட் விற்பதி லிருந்து 'நோட்ஸ்' இரவல் வாங்கிப் போவது வரையில் எத் தனையோ தந்திரங்கள். சுஜாதா என்ற பெண்மிக அழகாக இருப்பாள். அந்தக் காலத்துப் பிரபல சினிமா ஸ்டார் ஒருத்தியின் பெயரைச் சொல்லித்தான் மாண வர்கள் அவளைஅழைப்பார்கள். மலையாளத் தைச் சேர்ந்தவள். படிப்பிலும் கெட்டிக்காரி. திடீரென்று அவளுக்குக் 'கஸின்'கள் (Cousins) முளைக்கத் தொடங்கினார்கள்! பொழுது விடிந்தால் பொழுது அஸ்த மிக்கும் வரையில் யாராவது ஒரு மாணவன் அவளது 'கஸின்' என்று உறவு கொண்டாடிக் கொண்டு பேட்டி காண





வெள்ளிப் பிசாசு!

'அவ'ளுக்கு 55 வயதாகிறது. லண்டனிலிருந்து டில்லி வந்தாள் சாலை மார்க்கமாக. 7200 மைல் ஓடி வந்தாள்! இடையில் கொஞ்சமாவது சிரமப்பட்டாளா? கிடையவே கிடையாது!

'அவள்' என்றது 1921ம் மாடல் ரோல்ஸ் ராய்ஸ கார். பெயர் வெள்ளிப் பிசாசு! சொந்தக்காரர் அட்ரியன் லிட்டெல் ஒரு விவசாயி. பழைய கார்களைச் சேகரிப்பவர். இவரிடம் 12 கார்களும், 28 மோட்டார் சைக்கிள்களும் உள்ளன!

- ஹிந்துஸ்தான் டைம்ஸ்

வரத் தொடங்கினான். நான் பொறுமை இழந்து ஒருநாள் அவனிடம் பின்வரும் தோரணையில் கூறினேன்: 'அப்பப்பா! உனக்கு எத்தனை 'கஸின்'கள்! தேச ஒருமைப்பாட்டுக்கு உன் குடும்பம் ஓர் இலக்கணம் போதும். கேரளத்திலிருந்து மட்டுமா 'கஸின்'கள் படையெடுக்கிறார்கள்? சுந்தரத் தெலுங்கு பேசும் விஜயவாடாவிலிருந்து, மகாராஷ்டிராவிலிருந்து... ஏன், காஷ்மீரிலிருந்துகூடவல்லவா 'கஸின்'கள் வருகின்றனர்!' மாணவர்களுக்கு நான் சொன்னது தெரிந்ததோ இல்லையோ, சுஜாதாவின் அறையை முற்றுகையிடும் வழக்கத்தை விட்டு விட்டார்கள்.

ஹாஸ்டலில் புலி வேட்டை ஆடும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. எல்லாம் கனடாவில் தற்போது வேலை பார்க்கும் குட்டிக் கிருஷ்ண மாராரால் வந்த வினை!

மாராரின் அம்மா அயர்லாந்து தேசத்தைச் சேர்ந்தவள். அப்பா பச்சை மலையாளி. வீட்டில் பேசும் பாஷை ஆங்கிலம்.

மாணவர் மாரார் ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசி வந்ததால் கல்லூரிப் பதவிகளுக்கெல்லாம் அவனைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். ஹாஸ்டல் சங்கத்துக்கும் இவன்தான் தலைவன். எல்லோருக்கும் அவனைக் கண்டால் அச்சம். கல்லூரி முதல்வர் உட்பட!

மாராரிடம் புலிக்குட்டி இருந்தது. தவிர, அரை டஜன் பாம்புகள். இந்தச் செல்வங்களைத் தழுவிக்கொண்டுதான் அவன் தூங்குவான். ஹாஸ்டலுக்குள் இவற்றைக் கொண்டு வரக் கூடாது என்று ஓரிரு முறை கண்டித்துப் பார்த்தோம். கேட்டால்தானே? அவனைத் தண்டித்துக் கல்லூரியை விட்டு வெளியேற்றக் கல்லூரி முதல்வருக்குத் தைரியம் கிடையாது. அவன் முரடன் என்பது ஒருபுறமிருக்க, கல்லூரி 'செக்ரடரி'யின் பிள்ளைக்கு அவன் நெருங்கிய 'தோஸ்து'. பொதுவாகத் தனியார் நடத்தும் கல்லூரிகளில் 'செக்ரடரி'யைப்பழித்துவிட்டுப் பிரின்ஸிபால் உத்தியோகம் பார்க்க முடியுமா என்ன? எனவே மாராரின் புலிக்குட்டியையோ, பாம்பையோ ஹாஸ்டலை விட்டு அப்புறப்படுத்த அவர் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை.

புலியையும் பாம்பையும் காட்டி அப்பாவிப் பிள்ளைகளை அழ வைப்பதுதான் மாராரின் பொழுதுபோக்கு. ஆசிரியர்களையும் பயமுறுத்தி மார்க் போடச் சொன்னதாகக் கிசுகிசு வட்டாரத்தில் பேசிக் கொள்வார்கள். தோத்தாத்திரி என்ற மாணவனுக்கு மாராரைக் கண்டால் சிம்ம சொப்பனம். கட்டுக்குடுமி, நெற்றித் திருமண் முதலிய அலங்காரங்களுடன் விளங்கின தோத்தாத்திரியிடம் 'புலி வருகிறது! புலி வருகிறது!' என்று பயம் காட்டியே சிகரெட்டுக்குப் பணம் பிடுங்குவான் மாரார். ஒரோரு சமயம் பாம்பைத் தோத்தாத்திரியின் கழுத்தைச் சுற்றிப் போடுவான். அப்பொழுது தோத்தாத்திரி எழுப்பும் அபயக் குரல் நாலு ஊர்களுக்குக் கேட்கும்!

ஒரு நாள் நள்ளிரவில் ஹாஸ்டல் அல்லோல கல்லோலப்பட்டது. தன் அறையில் குறட்டை விட்டுக் கொண்டிருந்த தோத்தாத்திரியின் மீது ஜன்னல் வழியாகத் திமர்ப் பாய்ச்சல் பாய்ந்தது மாராரின் புலிக்குட்டி. 'ஐய்யோ முறையோ' என்று குடுமி அவிழ்ந்து விடக் கத்தின தோத்தாத்திரி விளக்கைப் போட முயன்றான். ஆனால் அது எரிய மறுத்தது. மின்சாரக் கோளாறு. இல்லை, மெயின் ஸ்விட்சை மாரார் திரிசமன் செய்திருந்தானு? இங்குமங்கும் இன்னது செய்வது என்று தெரியாமல் அறைக்குள்ளேயே ஓடின தோத்தாத்ரி புலியை மிதித்து விட்டான். அது அவனைக் கன்னு பின்னுவென்று பிறாண்டி விட்டது!

தோத்தாத்திரி போட்ட கூக்குரலில் ஹாஸ்டலே விழித்துக் கொண்டு விட்டது. 'மாரார் மாரார், உன் புலியைப் பிடி' என்று யாரோ கத்தினார்கள். கம்பும் கழியுமாக ஓடி வந்தார்கள் ஹாஸ்டல் வேலையாட்கள். கடப்பாறையுடன் வந்தான் தோட்டக்கார ?ம் சிங். இதற்குள் சில மாணவர்கள் தீயணைக்கும் படைக்கு 'போன்' செய்துவிட்டார்கள். அவர்கள் துப்பாக்கி, புலிக்கூண்டு முதலிய பொருள்களுடன் விழுந்தடித்துக் கொண்டு வந்தார்கள். அவர்களுடன் காமிரா சகிதம் வந்தார் ஒரு தமிழ் மாலை தினசரியின் நிருபர்.

மின்சார விளக்குகள் திடீரென்று எரிந்தன! அறையில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்த மாரார் தூங்கியும் பனியனுமாக அங்கு வந்து சேர்ந்து 'என்ன ரகளை?' என்று வினவினான். வழக்கம்போல் புலிக்குட்டி அவன் கையில் தவழ்ந்து கொண்டிருந்தது.

தோத்தாத்திரியின் அறையிலிருந்து இருந்திருந்தாற்போல் 'மி...யா...வ்' என்ற இனிய குரல் கேட்கவும் அனைவரும் சிரித்தே விட்டோம்!

புதுமை மாறாத அமெரிக்கா

அமெரிக்காவை நேரில் பார்ப்பதற்கு முன்னரே பல அமெரிக்கரைச் சந்தித்திருக்கிறேன். முதல் அனுபவம் பாரிஸ் மாநகரில் ஏற்பட்டது. எனக்கு வயது 18, அவளுக்கு 21. எனது நிறம் பால் சேர்ந்த காஃபி நிறம் என்றால் அவள் 'டிக்காக்ஷன்' நிறம். ஸார்போனில் ஃப்ரெஞ்சு இலக்கியம் படிப்பதற்காகச் சேர்ந்த முப்பது பேர் கொண்ட வகுப்பில் நாங்கள் இரண்டு பேர்களே கறுப்பர்கள். அதாவது வெள்ளையரல்லாதவர்கள். ஃப்ரெஞ்சு இலக்கிய மேதைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதை விட, நாங்கள் ஒருவரை யொருவர் அறிந்து கொள்வதிலே அதிக நேரம் கழித்தோம்; என்னைவிட அவள் உயரம்; ஆறு அங்குலம் கூடுதல். அழகி, வாளிப்பான உடற்கட்டுடையவள். கூந்தல் சிலிர்த்துக் கொண்டிருக்கும், அடிக்கடி அதனைத் தடவி விட்டுக் கொண்டிருப்பாள். தடித்த உதடுகள் திரண்ட மார்பகம், தனது உடம்பின் 'டிக்காக்ஷன்' நிறம் சற்று மங்கி வெளுப்பாகத் தெரிவதற்குக் 'கிரீம்'களைச் சற்றுத் தாராளமாகவே பூசி வந்தாள். அவள் உடைகளும் படு கவர்ச்சியாக இருக்கும். பெரிய தொப்பிகளை அணிவாள். வானவில் வண்ணத்திலே ஆடை புனைவாள். கொடி போன்ற இடையைச் சுற்றிக் கண்ணைப் பறிக்கும் சிவப்பு நிறத்திலே கச்சை கட்டிக் கொள்வாள். தலைப்பாகையும் தாடியும் உள்ள என்னுடைய தோற்றம் எங்கே, அவள் தோற்றம் எங்கே? இரண்டு பேரும் சேர்ந்து போனால் எல்லோருடைய கவனத்தையும் ஈர்ப்போம். எங்களை மக்கள் வெறித்துப் பார்ப்பர். நமுட்டுச் சிரிப்புச் சிரிப்பர். நாங்கள் சட்டை செய்வதில்லை.

அவள் என்னை "ஹனி" (தேனே) என்று அழைப்பாள். அவளுக்கு நான் இந்தியப் பெயர் ஒன்றைச் சூட்டினேன். 'சமேலி' என்பதுதான் அந்தப் பெயர். அதற்கும் காரணம் உண்டு; மல்லிகை போன்று நறுமணம் உடையவள் அந்த நங்கை நல்லாள்.

சமேலியின் நோக்கிலே நான் அமெரிக்காவைக் கண்டேன். அவள் ஒரு நீக்ரோப் பெண்மணி. கொலம்பியா பல்கலைக் கழகத்துப் பட்டதாரி. உயர்நிலைப் பள்ளி ஒன்றிலே ஆசிரியை வேலை இப்பொழுதுதான் அவளுக்குக் கிடைத்திருக்கிறது. ரிச்சர்டு ரைட் நாவல்களைப் படிக்கும்படி என்னைத் தூண்டினாள். 'எபனி' பத்திரிகைப் பிரதிகளை இரவல் கொடுத்தாள். அவள் அடிக்கடி வெள்ளையர்களைப் பற்றி ஏளனமாகப் பேசுவாள். ஆனால் பழித்தது இல்லை; வெறுப்பைக் கொட்டியதுமில்லை.

ஆண்டுகள் உருண்டோடின. ஒரு நாள் கண்ணீர் மல்கப் பிரியா விடைபெற்றுப் பிரிந்தோம். அடிக்கடி கடிதப் போக்குவரத்து இருந்தது. புத்தகங்கள் பத்திரிகைகளும் கூடப் பரிமாறிக் கொண்டோம். படிப்படியாகக் கடிதப் போக்குவரத்துக் குறைந்தது. ஆண்டுதோறும் "கிறிஸ்துமஸ் கார்டு" ஒருவருக்கொருவர் அனுப்பிக் கொள்வதுடன் நின்று விட்டது. ஆயினும் என்னென்ன செய்து கொண்டிருந்தோம் என்பது குறித்துச் சுருக்கமாக எழுதிக் கிறிஸ்துமஸ் கார்டுடன் இணைத்து அனுப்பி வந்தோம்.

ஆசிரியையான அவள் ஒரு வழக்கறிஞரை மணந்து கொண்டாள். வழக்கறிஞரான நான் ஓர் ஆசிரியையை மணந்து கொண்டேன். நாங்கள் கடிதம் எழுதுவதும் நின்றது.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர், டெட்ராய்ட் நகரில் ஒரு நாள் அவளைச் சந்தித்தேன். என்னுடன் என் மனைவியும் இரண்டு குழந்தைகளும் இருந்தனர். சமேலி அடுத்தடுத்து இரண்டு கணவன்மார்களை மணந்து விவாகரத்து செய்திருந்தாள். மூன்றாவது கணவர் ஒருவர் வருவாரா? எனக்குத் தெரியாது. தன்னுடைய அன்னையின் இல்லத்தில் அவள் எங்களுக்கு விருந்து வைத்தாள்.

முன்னர் நான் பார்த்த சமேலிக்கும் இப்பொழுது நான் பார்க்கும் சமேலிக்கும் துளிக்கூட ஒற்றுமை இல்லை. அவள்தானா இவள் என்ற ஐயப்பாடு எழுந்தது. சமேலி வெறும் சதைப் பிண்டமாகக் காட்சியளித்தாள். "துளிக்கூட நீ மாறவில்லையே" என்று நான் சொன்னது



குஷ்வந்த் சிங்

தான் தாமதம். ஓர் அவுட்டுச் சிரிப்பை அவள் உதிர்த்தாள்! மனம் விட்டு வாய்விட்டுச் சிரித்தாள். அதில் பாசாங்கு ஏதுமில்லை. ''கீழை நாட்டுக் கிழவரே, நீங்களும்தான் அதிகம் மாறவில்லை. தொந்தி போட்டிருக்கிறது. தாடியும் வெளுத்திருக்கிறது அவ்வளவு தான்'' என்றாள்.

அவள் வைத்த விருந்து அமெரிக்கச் சமுதாயத்தின் ஒரு பிரிவைப் புதிய கோணத்திலே பார்க்கும் வாய்ப்பை அளித்தது. நீக்ரோக்கள் அனைவருமே ஏழைகள் என்றுதான் நான் நினைத்து வந்தேன். அவர்களுக்குச் சொத்து உரிமை இல்லை, பாரபட்சமாகக் கொடுமையாக நடத்தப்படுகின்றனர் என்று கருதி வந்தேன். சமேலியின் அன்னை வாழ்ந்து வந்தது இரண்டு அடுக்கு மாளிகையில். இரண்டு கார் ஷெட்டு உள்ள இந்த மாளிகை புறநகர்த் தோப்பு ஒன்றிலே உடல் நலனுக்கு உகந்த ரம்மியமான தட்ப வெட்ப சூழ்நிலையுள்ள இடத்திலே அமைந்திருந்தது. வெளியே கப்பல் போன்ற கார்கள் பல நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஒரு சில 'காடிலாக்' கார்களும் அவற்றிலேகாணப்பெற்றன. அனைத்து நீக்ரோக்களுமே சமேலியைப் போன்று சாக்லேட் நிறத்தவர்கள் என்று நினைத்திருந்தேன். விருந்தினர்களுடன் நான் கைகுலுக்கிய பின்னர் ஒரே ஒரு தம்பதியர்தான் வெள்ளையர் எனத் தெரிந்துகொண்டேன். இன்னும் ஆறு பேர் இந்த வெள்ளையர்களைப் போல வெளுப்பாகவே இருந்தனர். உண்மையில் அவர்கள் கறுப்பர்களாம். — அதாவது நீக்ரோக்கள். சமேலியின் அன்னையும் அவ்வளவு கறுப்பல்ல. ''உங்களை நான் பார்க்கட்டும்'' என்று கூறிக் கொண்டே அன்னை என்னைத் தழுவினாள். ''உங்களைப் பற்றி என் மகள் கூற நிறையக் கேட்டிருக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே தம் விரல்களால் என் தாடியை உருவினாள். மூக்கு, கண், தலைப்பாகை எல்லாவற்றையும் தொட்டுப் பார்த்தாள். பல ஆண்டுகளுக்கு முன்னர் கண் பார்வை இழந்தவர் அந்த அன்னை.

விலையுயர்ந்த கண்ணாடிகள் என்ன, வெள்ளிச் சாமான்கள் என்ன, நிறையக் காணப்





பட்டன. ஒவ்வொரு அறையிலும் வண்ண டெலிவிஷன். விருந்திலே ஷாம்பேன் மதுவுக்கும், மீன், இறைச்சி வகைகளுக்கும் குறைவில்லை. இளம் தலைமுறை நீக்ரோக்களிடையே முன்னணிக்கு வரும் எழுத்தாளர்கள், கவிஞர்கள் பற்றிப் பேசினர். தங்களை நீக்ரோ என்று அவர்கள் அழைத்துக் கொள்வதில்லை. மாறாக ''பிளாக்'' (கறுப்பர்) என்றுதான் கூறிக்கொள்கின்றனர். கறுப்பரைப் பற்றி ''ஜோக்'' அடித்தனர். தன்னைக் கண்டே சிரிக்கும், மற்றவர்களையும் பார்த்துச் சிரிக்கும் அபரிமிதமான மன உறுதி, தன்னம்பிக்கை படைத்த ஒரு சமுதாயம் அது.

என் உள்ளத்தில் ஊறிப்போயிருந்த பழைய கருத்துக்களைக் கல்லி எறிய அமெரிக்காவுக்குப் பல தடவை சென்று வரவேண்டியிருந்தது. இறுக்குப் பிடித்தவர்கள் போலவும்



துக்கம் விசாரித்து எழுதும் கடிதங்களை கையால்தான் எழுதிப்போட வேண்டும். டைப் அடித்து அனுப்பக் கூடாது. —பாலி (லேடீஸ் ஹோம் ஜர்னல்)

எல்லாவற்றையும் மேம்போக்காகப் பார்ப்பவர்கள் போலவும் தோன்றும் இந்த அமெரிக்க மக்களை என்னென்று கூறுவது? வேலை செய்யும் நேரத்தை விட உல்லாசமாகப் பொழுது போக்குவதிலேயே அதிக நேரம் செலவிடுவது போலத் தோற்றமளிக்கும் இவர்கள்தாம் உலகின் செல்வத்தில் பாதியை உண்டு பண்ணுகின்றனர். அது எப்படிச் சாத்தியமாகிறது? நாகுக்குத் தெரியாத எளிமையான தோற்றம் கொண்ட இம்மக்கள்தாம் உலகிலேயே தலைசிறந்த விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், மருத்துவர்கள் ஆகியோரை, ஏன், அரசியல்வாதிகளையும் கூடத் தோற்றுவித்திருக்கின்றனர். இது எப்படிச் சாத்தியமாயிற்று? இக் கேள்விக்கு விடை எங்கு கண்டேன், தெரியுமா? பல்கலைக் கழகங்களின் தோட்டங்களிலே—ராச்செஸ்ட்டர், ஹாவாய் பிரின்ஸ்ட்டன், ஸ்வார்த்மோர் போன்ற பல்கலைக் கழகங்களில் கண்டேன். ராச்செஸ்ட்டர், ஹாவாய் பல்கலைக் கழக மாணவர்கள் படகு விடுகின்றனர், உணவு விடுதிகளில் வேலை செய்கின்றனர். தங்கள் படிப்புக்குச் சம்பந்தமில்லாத ஆனால் தங்களுக்குப் பிடித்தமான விஷயங்களில் உரைகளைக் கேட்கின்றனர். அறிஞர்கள்பால் அளவு கடந்த மரியாதையோ அச்சமோ இல்லை. தேர்வு குறித்து அச்சமும் குறைவு. இப்படியெல்லாம் இருந்த போதிலும் அமெரிக்கக் கல்லூரி மாணவர் தமது கல்லூரி ஆண்டுகளிலே பிற நாட்டுக் கல்லூரி மாணவர்களை விட அதிகமாகவே கற்றுக் கொண்டு விடுகிறார். விரிவுரைகளுக்கு அவ்வளவு 'மவுசு' இல்லை. 'குரு'வுடன் உரையாடல்களுக்கே மதிப்பு. மாணவர்கள் எழுதிய கட்டுரைகளின்மீது நிகழும் விவாதங்களுக்கு மதிப்பு அதிகம். இந்திய, ஆங்கிலேய, ஃபிரெஞ்சு மாணவர்களை விட அமெரிக்க மாணவ மாணவிகள் அதிக நேரம் நூலகங்களில் கழிக்கின்றனர். ஆண்களும் பெண்களும் மிக அதிகமாகவே கலந்து பழகினாலும் ஏன் உடல் உறவு கொண்டாலும்கூட — இளம் அமெரிக்கர்கள் மதுவும், புகையிலையும் மிகக் குறைவாகவே பயன்படுத்துகின்றனர். பல மணி நேரம் வேலை செய்கின்றனர்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் ஸ்வார்த்மோர் கல்லூரியில் நான் கடைசியாக இருந்த போது கறுப்பர் — வெள்ளையர் உறவில் ஏற்பட்டிருந்த மாறுதலைக் கண்டேன். எல்லா வெள்ளை மாணவர்களுமே, இன இணைப்பை ஆதரித்தனர். நான் சந்தித்த பெரும்பாலான கறுப்பு மாணவர்களோ பழைய பாரபட்ச நடவடிக்கைகளுக்குப் பழிவாங்கியாகவேண்டும் என்று கோரினர். எனது உணர்ச்சி பூர்வமான அனுதாபங்கள் கறுப்பர்களுக்கே யானாலும் அவர்களுடைய கருத்து எனக்குப் புரிய மிகக் கடினமாக இருந்தது.

அமெரிக்காவைக் கண்டு பிடிக்கும் எனது பயணங்கள் இன்னும் முடிவு பெறவில்லை. கடைசியாக நான் அமெரிக்கா சென்றிருந்த போது பழைய நண்பரான டாக்டர் ஜான் ஹாவர்டு அவர்களின் விருந்தாளியாக இருந்தேன். கொலம்பியா பல்கலைக் கழகத்திலே அவர் சோவியத் சட்டப் பேராசிரியராக இருக்கிறார். விமான நிலையத்திலிருந்து டாக்சி எடுத்துக்கொண்டு வரும்படி எனக்கு எழுதியிருந்தார். ''எட்டு டாலருக்கு மேல் ஒன்பது டாலருக்குள்தான் கட்டணம் இருக்கும். டாக்ஸி டிரைவர் உங்களை ஊர் சுற்ற வைக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத்தான் டாக்ஸி டிரைவர்களின் விஷயம் தெரியுமே'' என்று எழுதியிருந்தார். எனக்கு டாக்ஸி டிரைவராக வந்தவர் இத்தாலிய பெயருடையவராக இருந்தார். நான் ஊருக்கு அவ்வளவு பழக்கமானவன் அல்லன் என்பதைத் தெரிந்து கொள்ள அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. நகரின் முக்கிய இடங்களையும் பொருள்களையும் அவன் எனக்குக் காட்டிக் கொண்டே வந்தான். நான் அதிலே அவ்வளவு கவனம் செலுத்தவில்லை. என் கண்கள் மீட்டரைவிட்டு அகலவே இல்லை. ''நீங்கள் ஊருக்குப் புதிதா?'' என்று அவன் கேட்டான். ''ஆமாம்'' என்றேன் நான் மிகச் சிறந்த அமெரிக்க உச்சரிப்பிலே. ''போகும் வழியில்தான் நான் வசிக்கிறேன். வீட்டுக்கு வாருங்கள், என் மனைவியைச் சந்தியுங்கள். அவள் தலைப்பாகை அணிந்த ஒரு இந்துவை இதுவரை பார்த்ததே இல்லை'' என்றான். ''ஸாரி, இப்பொழுது முடியாது. நேரமாகிவிட்டது'' என்றேன். மீட்டர் எட்டரை டாலர் என்று காட்டியது. வண்டியை நிறுத்திக் கொடியைத் தாழ்த்தினான். டாக்டர் ஹாவர்டு வாயிலில் எனக்காகக் காத்திருந்தார். ''எவ்வளவு கொடுக்க வேண்டும்?'' என்று கேட்டேன். எனது குரலில் அவ்வளவு நட்புத் தொனிக்கவில்லை. ''ஒன்றுமில்லை'' என்றானே பார்க்கலாம்! ''இன்று என் நாட்டிலே உங்களுடைய முதல் நாள். ஆகவே உங்களிடம் கட்டணம் வசூலிக்கப் போவதில்லை!'' நான் அப்படியே அசந்து போய் விட்டேன். 'ஒருவேளை ஏதாவது தந்திரமாக இருக்குமோ?' வாடகை கொடுத்தே தீருவேன் என்று நான் அடம் பிடித்தபோது அவன் சம்மதித்தான். ''சரி, நான்கு டாலர் கொடுங்கள்'' என்றான்.

நான் பாடம் கற்றுக் கொண்டேன்: ஒரு நாட்டு மக்களைப் பற்றிப் பொதுப்படையாகச் சொல்லவே கூடாது. ஒரே அச்சில் வார்த்தவர்கள் என்று கிடையாது. அதை நம்பவே கூடாது. நேருஜி, அமெரிக்காவுக்குப் புறப்படுமுன்னர் புதிரான கருத்து ஒன்று கூறியது என் நினைவுக்கு வந்தது. பாஸ்ட்டன் நகரில் இருந்த தமது நண்பர் ஒருவருக்கு நேரு எழுதினார்: ''எனது நண்பர்கள் எனக்குக் கூறிய யோசனை என்னவென்றால், யாரையுமே முதல் தடவையாக அமெரிக்காவைப் பார்க்கும்படி சொல்லக் கூடாது!''

நன்றி — ஸ்பான்

திசுக்களின் எதிர்ப்பு; தேகத்தின் தவிப்பு!

லட்சுமி அம்மாள் — 55 வயது — கைகளைச் சொறிந்தவண்ணம் உள்ளே வந்தார். ''சருமத்தில் ஓயாமல் நமைச்சல் ஏற்படுகிறது. சொறிந்து கொண்டால் சிவப்பாக மாறிவிடுகிறது. உடல் முழுவதும் திட்டுத் திட்டாகத் தடித்து விடுகிறது. கீழ் உதட்டில் நமைச்சல் அதிகமாக இருக்கிறது. ஆறு மாதங்களாக என்ன என்னவோ சிகிச்சைகள் செய்து கொண்டேன். பலன் இல்லை'' என்றார்.

மலப் பரிசோதனை செய்ததில் அமீபா, குடல் புழு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்யும்போதும் படுக்கையை உதறிப் போடும் போதும் தும்மல் வருவதாகத் தெரிவித்தார் லட்சுமி அம்மாள்.

முன் கையில் ஊசி மூலம் உடல் உவந்து ஏற்காத பொருட்களை உட்செலுத்தி (Prick Test, Intradermal Test) பரிசோதனை செய்ததில் அப்பெண்மணிக்கு 'அலர்ஜிக் அட்ரிகேரியா' (Allergic Utricaria) இருப்பது தெளிவாகியது. ஊசி குத்திய இடத்தில் சுமார் பதினைந்து நிமிடங்களுள் சிறு கொப்புளம் மாதிரி வட்டமாகச் சருமத்தில் தடித்திருந்தது. அந்த இடத்தில் சருமம் நல்ல சிவப்பாகவும் மாறியிருந்தது. உடல் ஏற்றுக் கொள்ளாத பொருளையே ஊசி மூலம் சிறு அளவில் பன்முறை உட்செலுத்திய பிறகு (Hyposensitation) அப்பெண்மணி சில வாரங்களில் நன்கு குணம் அடைந்தார்.

''அலர்ஜி என்றால் என்ன, டாக்டர்? அது ஏற்படக் காரணம் என்ன?''

''திசுவில் ஏற்படும் ஒருவித இயக்கம் (Tissue Altered Reactivity) அலர்ஜி எனப்படும். சற்று விளக்கமாகக் கூறுகிறேன். உடலின் வளர்ச்சிக்குப் புரதம் இன்றியமையாதது. நம் உடலின் எல்லா உறுப்புக்களிலும் புரதம் உளது. ஒரே மனிதரின் வெவ்வேறு உறுப்புக்களிலுள்ள புரதம் மாறுபட்டது. நுரையீரலில் உள்ள புரதம் அதே நபரின் கையிலோ காலிலோ உள்ள திசுவின் புரதத்தினின்றும் மாறுபட்டது. ஒன்று மற்றொன்றை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்துவிடும். (Specificay of Cell Protein) இப்படித் திசு புரதத்தின் தனிப்பட்ட தன்மைகள் காரணமாய்ப் பெரும்பாலானவர்களைக் குறிப்பிட்ட அளவில் சற்றும் பாதிக்காத சில பொருள்கள் வேறு சிலருக்குப் பெரும் தொந்தரவாக முடிகின்றன. உதாரணமாகச் சிறிதளவு தூசி பறந்தால் பெரும்பாலோரால் தாங்கிக்கொள்ள முடியும். ஆனால் தூசிக்கு 'அலர்ஜி' உள்ளவர்களால் சற்றும் பொறுத்துக்கொள்ள முடியாது. திசுக்களில் எதிர் இயக்கம் உண்டாகிறது.''

''அலர்ஜியின் விளைவாக உடலில் ஏற்படக் கூடிய பாதிப்புகள் என்ன?''

''தலைவலி, தும்மல், மூக்கிலிருந்து நீர் வடிதல், தொண்டையில் கரகரப்பு இருமல், மூச்சு இரைப்பு, ஆஸ்துமா, சரும உபாதைகள் (எக்ஸிமா உட்பட), நீர்த்த வயிற்றுப் போக்கு (வலியுடன்) — இப்படிப் பல தொந்தரவுகள் தோன்றக்கூடும். அலர்ஜி ஏற்படுவதற்குத் தேனீ, கொசு, மூட்டைப் பூச்சிக் கடி வீட்டுப் புழுதி, தெருப் புழுதி போன்ற எத்தனையோ பல காரணங்கள் உள்ளன.''

''மனத்தின் பாதிப்புகூட அலர்ஜிக்கு வழி வகுக்கக் கூடுமா?''

''ஏன்? சரும உபாதைகள் சில மந்திரங்களால் நீங்குவதுண்டு அல்லவா? மந்திரங்களின் உச்சரிப்பைக் கேட்டு மனம் அமைதியடைந்து அதன் பயனாக உடலும் குணம் பெறுவதுண்டு. அதே போல், மனத்தின் பாதிப்பால் உடலில் 'அலர்ஜி' ஏற்படுவதும் சாத்தியமே.''

''இதனை எவ்விதம் குணப்படுத்துவது?''

''1. எந்த 'அலெர்ஜென்' காரணமாக நோயாளி பாதிக்கப்படுகிறார் என்பதைக் கண்டறிந்து உரிய சிகிச்சை அளிக்கலாம். சருமத்தில் ஊசி மூலம் அலர்ஜி ஏற்படுத்தக் கூடிய பொருட்களைச் செலுத்திச் சருமத்தில் அதன் பாதிப்பைப் பரிசோதனை செய்ய வேண்டும். 2. சில மருந்துகளின் (Sympatho Memetic Drugs) மூலமும் உதவலாம். Anti Histamin Steroids தாற்காலிகக் குணம் அளிக்கும். 3. பெப்டோன் இஞ்செக்ஷன். 4. பால். 5. நோயாளியின் இரத்தத்தையே எடுத்து அதனையே உடலுக்குள் செலுத்துவது. 6. கர்ப்பிணிகளின் உடைந்த பனிக்குட (Placenta) த்தின் சாரம் (Extract). இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சீனாவில் இச்சிகிச்சை கையாளப்பட்டு வந்திருக்கிறது. இப்போது இது ஊசி மருந்தாக எளிதில் கிடைக்கிறது.''

''அலர்ஜி ஏற்படாமல் தடுக்க என்ன வழி?''

''எந்தப் பொருளால் (Allergen) அலர்ஜி ஏற்படுகிறதோ அதனை உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும்.''

டாக்டர் என். கிருஷ்ணசுவாமி கூறக் கேட்டு எழுதியவர்: ஆர். பி.



ஒரு வார லீவுக்குப் பிறகு அன்றுதான் கங்கா அலுவலகத்துக்கு வந்தாள்.

முதல் தேதியன்று லீவில் இருந்ததால் சம்பளத்தை வாங்கிப் பையில் வைத்துக் கொண்டாள்.

மூன்று மணிக்கு டெலிபோனில் அவளை யாரோ கூப்பிட்டார்கள். ''அவர்தான் போலிருக்கிறது. ஐந்தாறு மணி நேரப் பிரிவைக்கூடத் தாங்க முடியாதா அவரால்?'' என்று சொல்லிப் போனை அவள் கையில் கொடுத்தார் மானேஜர்.

கங்காவுக்குக் கூச்சமாக இருந்தது. காலையில்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். ''மத்தியானம் போன் பண்ணட்டுமா?'' என்று அவர் கேட்டபோது 'வேண்டாம்' என்றுதான் சொல்லியிருந்தாள். இப்போது எதற்காகக் கூப்பிடுகிறார்?

போனை வாங்கிக் கொண்டு ''ஹலோ'' என்று சொன்னவுடன் எதிர்ப் பக்கத்திலிருந்து ''அக்கா, நான்தான் சேகர் பேசுகிறேன்'' என்று பதில் வந்ததும் அவளுக்குத் தலையிலிருந்து கால்வரையில் திடீரென்று என்னவோ செய்தது.

''சேகரா...? எங்கிருந்தடா கண்ணு பேசறே?'' என்று பரபரப்புடன் கேட்டாள்.

''மளிகைக் கடையிலிருந்து பேசறேன் அக்கா. எப்படிக்கா இருக்கே? சௌக்கியமாக இருக்கியா? எங்களை யெல்லாம் மறக்கல்லியே?''

பன்னிரண்டு வயசான ஒரே தம்பி அவன். கல்யாணம் ஆன இந்த ஒரு வாரத்தில் அவர்கள் வீட்டில் நல்லபடியாக நடந்து கொள்ள வேண்டுமே என்ற கவலையிலும் மற்ற வேலைகளிலும் ஈடுபட்டிருந்தபோது தம்பியை அதிகமாக நினைக்க முடியவில்லை தான். அதைத் தெரிந்து கொண்டு அவன் எப்படிக் கேட்கிறான்!

அது அலுவலகம் என்பதும் மறந்து அவள் கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர் சுரந்தது. ''அங்கே எல்லோரும் சௌக்கியம் தானே? அம்மா என்ன பண்றா? இன்னைக்கு என்ன டிபன்?'' என்று விசாரித்தாள்.

''நாளைக்கு வீட்டுக்கு வரியாக்கா? உன்னைப் பார்க்க வேண்டும் போலிருக்கு...''

''வரேண்டா... வரேண்டா கண்ணு. அம்மா அப்பாவிடம் சொல்லு. நாளைக்கு வரேன். என்ன? வைச்சுடட்டுமா?...''

பிற்பகல் மூன்றரை மணிக்கு மானேஜர் கூப்பிட்டார். ''புது வீட்டிலே சமையல் வேலை யெல்லாம் இருக்கும். இங்கே உன் வேலை முடிந்து விட்டதில்லையா? வீட்டுக்குக் கிளம்புகிறதாக இருந்தால் கிளம்பு'' என்று சொல்லி அனுப்பினார்.

வெளியே வந்தாள். போனில் பேசும் போது மறுநாள் வருவதாகத்தான் சொல்லியிருந்தாள். படி இறங்கிப் பஸ் ஸ்டாண்டை நோக்கிப் போனபோது இதோ இப்போதே போய் அம்மாவையும் தம்பியையும் பார்த்து விட்டு வந்தால் என்ன என்று தோன்றியது.

ஆனால் இரண்டு நாட்களுக்கு முன் தலை பின்னி விட்டுக் கொண்டிருந்தபோது மாமியார் சொன்னது நினைவுக்கு வந்தது. ''எதுவும் அளவோடு இருந்தால்தான் நன்றாக இருக்கும். அப்பாவின் வீடு உள்ளூர்தானே என்று நினைத்தபோதெல்லாம் போய்க் கொண்டிருக்கக் கூடாது. போகவே கூடாது என்று ஒன்றும் நான் வழிமறிக்க மாட்டேன். எதுவும் ஓர் அளவோடு இருக்கணும்...''

என்றாலும் மனம் அலைபாயவே, திருவல்லிக்கேணி பஸ்ஸில் ஏறி விட்டாள். நிறுத்தத்தில் இறங்கித் தெரு முனை திரும்பி நடந்தபோது அவளுக்குக் கால்கள் பரபரத்தன.

சத்தம் எழுப்பாமல் செருப்பைத் திண்ணையருகிலேயே விட்டுவிட்டு ரேழியில் காலடி எடுத்து வைத்தபோது உள்ளே பேச்சுக் குரல் கேட்டுத் தயங்கினாள். அப்பாதான் என்னவோ பேசிக் கொண்டிருந்தது கேட்டது.



சம்பளம்

''கல்யாணம் ஆகி ஒரு வாரம் முழுசாக ஆகவில்லை. சாமான்கள் மொத்தம் எவ்வளவு ஆச்சு என்று இன்னும் கூட்டிப் போட்டுப் பார்க்கக்கூட இல்லே. அதற்குள்ளே மீதிப் பணம் வேணுமாமா? முழுப் பணமும் கொடுத்து வாங்குவதா யிருந்தால் மொத்த விலையில் கொத்தவால் சாவடியிலேயே வாங்கியிருப்போம். இரண்டு மூன்று மாசத்தில் பெற்றுக் கொள்வதாகச் சொன்னதால் தான் விலையைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் இவன் கடையில் வாங்கினேம்.''

கங்காவின் கால்கள் பின்னடைந்தன.

அதற்குள் அம்மா பூக்காரியின் குரல் கேட்டுப் பூ வாங்கத் திண்ணைக்கு வரவே, ''அம்மா...!'' என்று ஓடிப் போய்க் கட்டிக் கொண்டாள் கங்கா. தெரிந்த வாடிக்கைப் பூக்காரி கங்காவைப் பார்த்து, ''சௌக்கியமா இருக்கியா அம்மா?'' என்று கேட்டுக் கொண்டு ஒரு முழம் பூவைத் தனியாக எடுத்து அவளிடம் கொடுத்தாள்.

''உள்ளே வா...'' என்று பரபரப்புடன் அம்மா உள்ளே நகர்ந்தாள். ''இங்கே யார் வந்திருக்கிறது என்று பாருங்கோ...''

கூடத்து மேஜையில் அப்பா அமர்ந்து கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவற்றை டிராயரில் தள்ளிவிட்டு ''கங்காவா வா...வா...''

''ஆபீஸிலிருந்து நேரே வரியா? இந்த மாதிரி இங்கே போயிட்டு வரப்போகிறேன்னு மாமியாரிடம் சொல்லிக் கொண்டு வந்தாயோ?'' என்று கேட்டார்.

''இல்லேப்பா... உங்களையெல்லாம் பார்க்கணும் போலிருந்தது வந்தேன். இதோ புறப்படப் போகிறேன்.

ஆமாம், சேகர் எங்கே?'' என்று கேட்டாள் கங்கா.

''இன்னும் அவன் பள்ளிக் கூடத்திலிருந்து வரவில்லே.''

''வரல்லியா...? பெரிய மனுஷன் மாதிரி மூணு மணிக்கு எனக்கு போன் பண்ணினுனே! எங்கேயிருந்துடா பண்ணறே என்று கேட்டபோது மளிகைக் கடையிலேருந்துன்னு பொய் சொன்னுனே!...''

''சேகர் போன் பண்ணினுனு? தேவலையே!''

கங்கா பையிலிருந்து சம்பளக் கவரை எடுத்து அப்பாவிடம் கொடுத்தாள்.

''இதை ஏம்மா என்கிட்டே கொடுக்கிறே? இதெல்லாம் இனிமே அவர்களுக்குச் சேர வேண்டியது'' என்ருர் அப்பா.

''போன மாசம் முப்பது நாள் இந்த வீட்டிலேதானே சாப்பிட்டிருக்கிறேன். இந்த மாதம் பிறந்ததிலிருந்துதானே அங்கே சாப்பாடு?'' என்று சொல்லிச் சிரித்தாள் அவள்.

''வேண்டாம்மா... எடுத்துக் கொண்டு போய் மாமியாரிடம் கொடு. கல்யாணம் ஆன முதல் மாதச் சம்பளத்தை இங்கே கொடுத்துட்டேன்னு ஏதாவது பேச்சு வரும். கடைசிவரையிலே இதையே சொல்லிக் கொண்டிருப்பார்கள்...''

''ஒன்றும் சொல்ல மாட்டார்கள். மாமியார் இன்று காலையிலே கேட்டார். 'இன்னிக்குச் சம்பளமாடீ'ன்னு. 'இல்லே, கல்யாணத்துக்கு லீவு போட்டதனுலே முன்னுடியே வாங்கிட்டேன்' என்று சொல்லி விட்டேன்.''

பொய் சொல்லிவிட்டேன் என்று ஒரு பொய் எப்படிச் சட்டென்று வந்தது!

''சொல்லிட்டியா? அப்படி என்றல் சரி'' என்று அப்பா கவரை வாங்கி மேஜையின் மேல் வைத்தார்.

மயிலாப்பூர் வீட்டை அடைந்து உள்ளே படி ஏறியபோது ஐந்தரை மணி அடித்தது. மாமியார் ''வா'' என்ருள். ''எப்படி இருந்தது இன்னிக்கு வேலை எல்லாம்?'' என்று விசாரித்தாள். பதில் சொல்லிவிட்டு அவள்



உள்ளே போய்ப் புடவை மாற்றிக்கொண்டு கை கால் கழுவிக் கொண்டு வந்தாள்.

''உள்ளே அலமாரியிலே பால் வைத்திருக்கிறேன். காப்பி கலந்து எடுத்துக்கொள். தோசை வார்க்கப் போறேன். எடுத்துக் கொண்டவுடனே இரண்டு பேரும் கோயிலுக்குப் போயிட்டு வரலாம்? அவன் ஆறு, ஆறரை மணிக்கு மேலேதான் வருவான்.''

கோயிலுக்குப் போகும் வழியில் ஒரு பாங்க் அலுவலகம் இருந்தது. அது மாலை நாலு மணியிலிருந்து ஏழு மணி வரை திறந்திருக்கும் கிளை. ''இது ரொம்ப சௌகரியம். ராஜாகூடச் சம்பளம் வந்தவுடன் என்னிடம் கொடுத்து விடுவான். நான்தான் சாயங்காலமே கோயிலுக்கு வந்துவிட்டுப் பணத்தைக் கட்டிவிடுவேன். மாசம் ஆக, ஆக அப்பப்போ எடுத்துக் கொள்வோம்.''

எதற்காக இப்போது அதைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்? ஒருவேளை 'முதல் தேதிக்குப் பிறகு இன்றுதானே அலுவலகத்துக்குப் போனே? உன் சம்பளம் எங்கே?' என்று நேராகக் கேட்க வேண்டாம் என்று இப்படி மறைமுகமாகக் கேட்கிறாரோ?

கங்காவுக்குப் பயமாக இருந்தது. அப்பா அம்மாவின் முன்னிலையில் பொய் சொல்வது கலபமாக இருந்தது. இப்போது இவர் நேராக உன் சம்பளம் எங்கே என்று கேட்டால் எப்படி அதைச் சொல்வது?

''என் இந்த மாதச் சம்பளத்தைக் கல்யாணத்துக்காக லீவில் போவதற்கு முன்னாலேயே கொடுத்து விட்டார்கள். முதலில் பதினைந்து நாள் லீவு சாங்ஷன் ஆகியிருந்ததால்...'' என்று மென்று விழுங்கினாள்.

அதைக் கேட்டதும் மாமியாரின் முகம் திடீரென்று மாறியது. ''அப்படியா...?'' என்று ஒரு மாதிரியாகப் பார்த்தார். அதற்குப் பிறகு வீடு வந்து சேரும்வரையில் அவர் மேலே பேசவில்லை.

அன்று இரவில் ராஜாவும் அதைப் பற்றிச் சாதாரணமாகக் கேட்பது போலக் கேட்டான். ''உங்கள் ஆபீஸில் அடுத்த மாதச் சம்பளத்தை முதல் மாதம் பத்தாம் தேதியே வாங்கிக் கொண்டு விடலாமா, என்ன?''

''பத்தாம் தேதிக்கெல்லாம் வாங்கிக் கொள்ள முடியாது. கல்யாணம், மாதிரி முக்கிய காரியத்துக்கு என்று இருபது தேதிக்குப் பிறகு லீவிலே போனால் மாத்திரம் வாங்கிக் கொள்ளலாம். இன்று என் சம்பளத்தைக் கொண்டு வந்து கொடுக்கவில்லை என்று அம்மா உங்களிடம் கோபமாகச் சொன்னாரா?''

''கோபம் என்று இல்லை. இருந்தாலும் ரூபாய் வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்துவிட்டு இல்லை என்று தெரிந்ததும் வருத்தமாக இருந்திருக்கும். நாட்டுப்பெண்ணுக்கு அறுநூறு ரூபாய் சம்பளம் என்று நாலு பேரிடம் சொல்லி அதை அப்படியே பாங்கில் கட்ட சலான் முதற்கொண்டு எழுதி வைத்துக்கொண்டிருந்தாள்...'' என்றான் அவன்.

பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள். விடுமுறை தினம். மாமனார் கூடத்தில் ஈஸிச்சேரில் அரைத் தூக்கத்தில் இருந்தார். மாமியார் தாழ்வாரத்தில் உட்கார்ந்து கங்காவுக்குப் பின்னிக் கொண்டிருந்தார். ராஜாவும் பேசினால் காது கேட்கும் தூரத்தில்தான் இருந்தான்.

இருந்தாற்போலிருந்து மாமியார் கேட்டாள்: ''போன மாசம் சம்பளம் எப்போது வாங்கினேன் என்று சொன்னே...?''

கங்காவுக்குத் திடீரென்று எல்லோர் முன்னிலையிலும் தாக்குதல் போல் அந்தக் கேள்வியைக் கேட்டதும் பொட்டில் அறைந்தது போல் இருந்தது. முதலில் பேச்சே வரவில்லை.

''உன்னைத்தான் கங்கா... இருபத்தைந்தாம் தேதியே வாங்கி அப்பா கிட்டே கொடுத்துட்டே இல்லே...? இந்த மாசமும் அப்படி இருபத்தைந்தாம் தேதியே வந்துவிடுமா?''

''போன மாசம் கல்யாணம்கிறதினாலேயும் லீவிலே போகிறேன் என்கிறதனாலேயும்...''

''ஓஹோ...ஒருத்தரும் உன்னைப் போனிலே நீ ஆபீசுக்குப் போன அன்னிக்குக் கூப்பிட்டு இன்றைக்குச் சம்பளம் வந்திருக்குமே, நேரே இங்கே வந்துட்டுப் போன்னு சொல்லலே?''

தனக்குப் போன் வந்ததும் அப்பாவின் வீட்டுக்குப் போனதும் இங்கே எப்படித் தெரிந்தது? அதைப் பற்றி நான் சொல்லவே இல்லையே...

''வீட்டுக்கு வரும்படி யாரும் கூப்பிடல்லே. தம்பி சேகர்தான் போன் பண்ணினான்.

சரித்திர 'சிப்ஸ்!'

○ சோமநாதபுரத்தைக் கொள்ளையடித்த கஜினி முகமது, தான் கொள்ளையடித்துச் சென்ற பொன்னையும், பொருளையும், தன் தலைநகரான கஜினியை அழகுபடுத்தவும், விரிவுபடுத்தவுமே செலவு செய்தான். அங்கு கட்டப்பட்ட ஒரு மசூதியின் வேலைப்பாடமைந்த வாசற்படிக்கு, சோமநாதபுரத்திலிருந்து எடுத்துவரப்பட்ட தங்க விக்ரகத்தை உருக்கி உபயோகப்படுத்தினான். ஆனால் துர் அதிர்ஷ்டவசமாக, இவ்வளவு அழகுபடுத்திய கஜனி நகர் தீப்பற்றி எரிந்துவிட்டது!

○ நாலந்தா பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெற்றுக் கல்வி கற்ற 10,000க்கும் அதிகமான மாணவர்களுக்கு உணவு, உறைவிடம் யாவும் இலவசமாக அளிக்கப்பட்டன.

சுமார் 200 கிராமங்களின் வருவாயை, ஹர்ஷர் அந்தப் பல்கலைக் கழகத்திற்கு மான்யமாக அளித்திருந்தார்.


சம்ஸ்கிருத மொழி, பல்கலைக் கழகத்தின் பயிற்சி மொழியாக இருந்தது. காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தர்மபாலர் என்பவர் அந்தச் சிறப்பு மிகுந்த பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார்.

- லலிதா நாராயணன்



வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் உடம்புக்குத் தேவை

கால்ஷியம்-ஸாண்டோஸ்®



ஸ்விட்சர்லாந்தில் ஸாண்டோஸ் உருவாக்கியுள்ள,
உலகிலேயே தலைசிறந்த கால்ஷியம்

கர்ப்பத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே குழந்தையின் பற்களிலும் எலும்புகளிலும் அமையத் தொடங்குகிறது கால்ஷியம். கருவிலுள்ள குழந்தைக்கு அதிகப்படி கால்ஷியம் அவசரமாகத் தேவை. எனவே, வழக்கத்தைவிட இருமடங்கு தேவைப்படும் உங்களுக்கு முன்னதாகவே சாப்பிடத் துவங்குவீர் கால்ஷியம்-ஸாண்டோஸ்.



பாப்பாவின் பற்களுக்கும் எலும்புகளுக்கும் கால்ஷியம் வழங்குவது பாலூட்டும் தாயன்றி வேறில்லை. அவளுக்கு வழக்கத்தைவிட மும்மடங்கு கால்ஷியம் தேவை.

வளரும் குழந்தைக்கு வலுவான எலும்புகளும் நலமுள்ள பற்களும் அமைய இன்றியமையாதது கால்ஷியம். எனவே, பெரியோரைவிட குழந்தைக்கு அதிகக் கால்ஷியம் தேவைப்படும்.





ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு வயதிலும், மனித உடம்புக்கு அத்யாவசியம் கால்ஷியம். மிகச் சிறந்த வடிவிலுள்ள கால்ஷியம்: கால்ஷியம்-ஸாண்டோஸ். ராஸ்ப்பெர்ரி சுவையூட்டிய இனிமையான கால்ஷியம்–ஸாண்டோஸ், நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 வில்லைகள் போதும், உங்கள் கால்ஷியம் தேவையை நிறைவுசெய்யும் வைட்டமின் C, D, B 12 சத்துக்களோடு.

நம்பிக்கைக்குரியோர் ஸாண்டோஸ்-கால்ஷியம் துறையிலே உலக முன்னோடிகள்.

SANDOZ

கால்ஷியம்-ஸாண்டோஸ்®
வில்லைகள் தினமும் தேவை எவருக்கும்

CA/CS/15 I TAM.



பொல்லாத்தனம்!

நடிகை: நாற்பது வயதை நினைத்தாலே பயமாயிருக்கிறது!
மற்றொரு நடிகை: ஏன்? நாற்பதாவது வயதில் என்ன நடந்தது அப்படி?

உமன்ஸ் —இரா - சம்பத் குமாரி

ஏழெட்டு நாட்களாகப் பார்க்காததனாலே என்னைப் பார்க்கணும்போலிருக்கு என்றான்.'' அவளுக்குக் கண்கள் குளமாயின.

''அதனாலே அன்றைக்கு அங்கே போயிட்டு வந்தே...?''

''ஆமாம்...''

''போயிட்டு வந்தேன்னு என்கிட்டே ஏன் சொல்லலே? நான் உன்னை அப்படி எல்லாம் போகக் கூடாது என்று சொல்றவளா?''

''இல்லே...''

''பின்னே போயிட்டு வந்தேன்னு ஏன் சொல்லலே?''

''உங்களிடம் சொல்லாமல் போனது தப்புன்னு பயமாக இருந்தது. அதனாலே சொல்லலே...ஐந்து நிமிஷம் இருந்துவிட்டு ஓடிவந்துட்டேன்.''

''சரி... சரி... இந்த மாதமும் தம்பியை விட்டுப் போன் பண்ணச் சொல்வார்களோ? மளிகைக் கடை பாக்கி மாதிரி ஜவுளிக் கடை பாக்கி, நகைக் கடை பாக்கி எல்லாவற்றையும் அடைக்க வேண்டாமா?''

மாமனாருக்கே பொறுக்க வில்லை போலிருந்தது. 'தினப்' பத்திரிகையைத் தள்ளிவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு ''பாவம், அவளை ஏன் இப்படி மிரட்டறே? என்னவோ, முதல் மாசம் தெரியாமல் பண்ணிவிட்டாள். அதோடு விட்டுடு. இனிமேல் மாசா மாசம் அவன் சம்பளத்தை உன்னிடம்தானே கொடுக்கப் போகிறான்...?''

பொங்கி வரும் கண்ணீரைக் கங்கா கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டிருந்தாள்.

''ஆமாம், நீங்க என்ன ரொம்பப் பெரிய மனசுக்காரர் மாதிரிக் காட்டிக் கொள்கிறேளாக்கும்?'' என்று அவர் மீது பாய்ந்தார் மாமியார்.

அடுத்த மாதம் முதல் தேதி.

மாமனார் அலுவலகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தபோது ''நீங்க சாயங்காலம் ஆபீசிலிருந்து வரும்போது மலையாளத் தைலம் வாங்கிக்கொண்டு வாங்கோ. இரண்டு மூணு நாட்களாகக் கால் எல்லாம் குடையறது'' என்றார் மாமியார்.

''இன்னிக்கு ஆபீசிலே ஒருவர் ரிடையர் ஆகிறார். பார்ட்டி இருக்கு. அப்புறம் இரண்டு மூணு பேர் பேசுவார்கள். முடிந்து வர நாழியாகுமே. நாளைக்கு வாங்கிக் கொண்டு வரேனே'' என்றார் மாமனார்.

''எது சொன்னாலும் அதற்குத் தடங்கல் தான்! மூணு நாட்களாகக் கஷ்டப்படறேனே, அது தெரியவில்லையே... ஆபீசிலேதான் டிபன் காப்பி எல்லாம் கிடைத்து விடுகிறதே. அப்புறம் அவசரம் என்ன? நிதானமாகப் போய் வாங்கிக் கொண்டு வரலாம். மருந்து இன்றைக்கு வந்தால்தான் எனக்குத் தூக்கம் வரும்.''

''சரி...'' என்று அவர் கிளம்பினார். கங்காவும் பின்னாலேயே கிளம்பினாள்.

மாலை நாலு மணிக்கே கங்கா வீட்டுக்கு வந்து விட்டாள். காப்பி, டிபன் ஆனவுடன் மாமியாருடன் கோயிலுக்குக் கிளம்பினாள். கையில் பாங்க் சலான், ரூபாயுடன்.

வீட்டுக்குத் திரும்பியபோது மாமனார் வந்திருந்தார். ஈஸிச் சேரில் சாய்ந்திருந்தவரிடம் போன மாமியார், ''ஏன் என்னமோபோல் இருக்கிறீர்கள்? உடம்பு ஏதாவது சரியில்லையா?'' என்று விசாரித்தார்.

''உடம்புக்கெல்லாம் ஒன்றுமில்லை'' என்று திரும்பிக் கொண்டார் அவர்.

''ஏன், என்ன? முகம் ஒரு மாதிரியாக இருக்கே...?''

''ஒன்றுமில்லை, போ...''

''மருந்து வாங்கிக்கொண்டு வரவில்லை. அதுதானே? எனக்குத் தெரியுமே... சரி சரி. நாளைக்கு வாங்கிக்கலாம். போய்க் கை கால் கழுவிக்கொண்டு வாருங்கோ.''

''மருந்து வாங்கிக் கொண்டு வந்து விட்டேன்'' என்று சொல்லிக் கீழே இருந்த பையிலிருந்து பாட்டிலை எடுத்துக் கொடுத்தார் அவர்.

''ஏன் குரலே என்னமோ மாதிரி இருக்கு? சொல்லுங்கோ.''

''அதெல்லாம் ஒன்றுமில்லே...''

அவர் எழுந்து போய் ஸ்டாண்டிலிருந்து பாண்டை எடுத்துப் பிரித்துக் காண்பித்தார். அதன் பை உள்ள இடம் பிளேடினால் வெட்டப்பட்டிருப்பது தெரிந்தது.

''என்ன...? என்ன ஆச்சு...? பர்ஸ்... போயிடுத்தா...?

''என்ன அக்கிரமம்! எனக்கு அப்போதே தெரியும். எதிர் வீட்டுக் கொள்ளிக் கண் கோமதி பத்துத் தடவை கேட்டுவிட்டாள். உனக்கு என்ன, நாட்டுப் பெண் வேறே சம்பளம் வாங்குகிறாள் என்று. சொல்லிச் சொல்லி வயிற்றெரிச்சல் பட்டாள். எனக்கு அப்பவே தோணித்து. இப்படி ஏதாவது நடக்கும்னு...''

''கோமதியின் கொள்ளிக் கண் இல்லை. நான் சொல்றேன். போன மாசம் நம் நாட்டுப் பெண் சம்பளத்தை அவள் அப்பாவிடம் கொடுத்துவிட்டு வந்ததற்கு அவளை என்ன பாடு படுத்தினே? அவள் என்றைக்குச் சம்பளம் வாங்கினாள், எப்படிக் கொண்டு போய்க் கொடுத்தாள், யார் போன் பண்ணினது என்று மூன்றாம் மனிதர்களை விட்டு வெட்கமில்லாமல் துப்பறிஞ்சு குழந்தையின் மனசைப் பதறடிச்சே... அந்தப் பாவம் தான்....''

ஒரு ஹிப்பியின் பிரார்த்தனை: ''ஆண்டவனே! நான் நினைக்கிற காரியம் மட்டும் கைகூடினால் சலூனுக்குப் போய்க் கிராப் செய்துக்கறேன்''

- முத்து



வந்த விருந்தினர் விரும்பி ரசித்திட நீங்கள் பெருமையோடு அளிக்கதகுந்த ஒரே ஒரு இன்ஸ்டன்ட் காப்பி

இதுதான்.



நெஸ்க:.பே— உங்கள்
உபசரிப்பைப்
பண்பாட்டின் சிகரமாக
கொடியில் உயர்த்திக்
காட்டும் தரம் மிகுந்த
ஒரே இன்ஸ்டன்ட்
காப்பி. 100%
சுத்தமான காப்பி.
மிகச்சிறந்த
தென்னிந்தியக் காப்பிக்
கொட்டையிலிருந்து
தயாராகிறது.
இந்தியாவிலேயே அகில
உலகப் பிரியமான காப்பி
இது ஒன்றே.


நெஸ்க:.பே

—100% சுத்தமான காப்பியிலிருந்து தயாராகும்
இன்ஸ்டன்ட் காப்பி இது ஒன்றே.

உலகெங்கும்
அதிகமாய்
விற்பனையாகும்
இன்ஸ்டன்ட் காப்பி

A NESTLÉ product

NNCM-24 TAM


சேரமான் காதலி
கண்ணதாசன்
நான்காம்
பாகம்

அத்தியாயம் 1

சாஸ்திரம் சம்மதிக்கவில்லை!

பறந்து போன பசுங் கொடியை மறக்க, சேரமானால் முடியவில்லைதான். ஆனால் இனி ஒரு புதிய வரலாற்றை அவளைக் கொண்டு எழுத முடியுமா? அப்படி எழுத முயன்றால் அது அவரது பலவீனத்துக்கு அடையாளமாகி விடாதா?

அரச தருமப்படி சிறிது காலம் வரையிலாவது யூஜியானாவை மறந்துவிடவே சேரமான் முயன்றார்.

மனம் என்பது, நோயுற்றால் வெட்டிவிடக் கூடிய அங்கமல்லவே? இருப்பினும், அதை வெட்டிவிட வேண்டிய நிலைமையிலேதான் சேரமான் இருந்தார்.

எங்கேயோ உள்ள ஒரு சோலையில் எங்கிருந்தோ வருகிற கிளிகள்தானே அமர்கின்றன. அமர்ந்த இடம் நல்ல இடமாக இருந்தால், அவை அங்கேயே குடி புகுந்துவிடுகின்றன.

ஆனால் பச்சை மரம் மொட்டை மரமான பிற்பாடு கிளிகள் பாதுகாப்பைக் கருதியாவது பறந்து செல்லத்தானே வேண்டும்?

அரச பீடத்தைக் கைப் பற்றுவதில் வெற்றிபெற்ற சேரமான், காதல் பீடத்தில் தோல்வியே கண்டவர்.

கட்டிய மனைவி உயிரோடிருக்க, இன்னொருத்தியோடு வரும் காதல் புனிதமான காதல்தானா?

எங்கே மனது ஆழமாகப் பதிந்து ஒரே சுதியில் ஐக்கியமாகிவிடுகிறதோ, அங்கே எத்தனை முறை வந்தாலும் காதல் புனிதமானதே!

காதல் இல்லாமல் ஒரு திருமணம், திருமணம் இல்லாமல் ஒரு காதல். இரண்டிலும் கிடைத்தது தோல்வி.

தோல்விகளைத் தாங்கிக் கொள்வதிலும், சோதனைகளைச் சகித்துக் கொள்வதிலும்தானே ஒரு மனிதனின் ஆண்மை அடங்கிக் கிடக்கிறது.

தாங்கிக் கொள்ளலாம்; சகித்துக் கொள்ளலாம்; ஆனால் ஒரு முறை பெற்ற அனுபவத்தையே மறு முறையும் பெறக் கூடாது.

அனுபவங்களைப் புதிது புதிதாகக் கொள்முதல் செய்யலாமே தவிர, ஒரே அனுபவத்துக்குப் புதிய புதிய ஏட்டுப் பிரதிகள் எடுக்கக் கூடாது.

பதவியையும், வசதியையும் ஒதுக்கி விட்டுப் பார்த்தால் மன்னனுக்கும், பிற மனிதர்களுக்கும் பேதமில்லை.

எல்லோரது ரத்த நாளங்களும் ஒரே மாதிரியாகவே துடிக்கின்றன.

ஆரோக்கியமான எல்லா வயிறுகளும் ஒரே மாதிரியாகவே பசிக்கின்றன.

சீதையைக் காதலித்த ராமனுக்கும், மருதியைக் காதலித்த ஆட்டனத்திக்கும் மனோபாவத்தில் என்ன வேறுபாடு?

திருவஞ்சைக் களத்தின் சேரர் குடிமக்களில், காதலில் தோல்வி கண்டோர் பலர் இருக்கக் கூடும். ஆனால் வரலாறு அவர்களைக் கவனிக்கவில்லை. காவியக் கதவுகள் அவர்களுக்காகத் திறக்கப்படவில்லை.

நன்மையாயினும் தீமையாயினும் அவற்றை உயர்ந்த இடத்தில் இருப்போர் செய்தால், அவை விளம்பரம் பெற்று விடுகின்றன.

சேரமான் — யூஜியானா காதல் சேர நாட்டில் நாடோடிப் பாடல்களாகிவிட்டது.

பாண்டிய நாட்டில் இருந்து திரும்பி வந்ததும் சேரமானுக்கு மன எரிச்சல் அதிகமாகத்தான் இருந்தது. அதைத் தீர்த்துக் கொள்ளவும் அவர் விரும்பினார்.

அரசியலில் முன்னேற விரும்புகிறவன் தன் உடன் பணி செய்வோர் மீது கோபம் வந்தால் உடனேயே காட்டிக் கொள்ளக் கூடாது; காத்திருந்து கழுத்தறுக்க வேண்டும் என்பது ராஜதந்திரம். அது சேரமானுக்கும் தெரியும். ஆனால் இது சொந்த விஷயம்; இதில் காத்திருந்து சாதிப்பதற்கு என்ன இருக்கிறது?



பூஜியாணுவை மறப்பதென முடிவு கட்டியாகி விட்டது; அது வேறு விஷயம்.

ஆனால் நாராயண நம்பூதிரியோடு இன்னும் நீண்ட காலம் கலந்து பழகியாக வேண்டும்.

மனத்திலே ஒரு கறுப்புப் புள்ளியை வைத்துக் கொண்டு அந்தப் பழக்கத்தைத் தொடர்ந்தால், மேலும் பல குழப்பங்களுக்கு அது காரணமாகிவிடலாம்.

ஆகவே நம்பூதிரிகளைச் சந்தித்து நேருக்கு நேராகக் கேட்டுவிடுவது என்று சேரமான் முடிவு கட்டினார்.

நேருக்கு நேராகப் பேசிக் கொண்டு விட்டால் எவ்வளவு பெரிய கேள்விக்கும் விடை கிடைத்துவிடும். பேசவில்லை என்றால், சிறிய கேள்வியும் விசுவரூபம் எடுக்கும்.

நம்பூதிரிகளைச் சந்திக்க அவர் தேர்ந்தெடுத்த நேரமும் இரவு நேரமே.

முன்னிரவு.

முன்பு பூஜியாணுவைப் பார்க்கப் போனது போல், முக்காடிட்ட சேரமானல்ல, இப்போது புறப்பட்டது. கேரள பூமியின் மாமன்னன் மூன்றாம் சேரமான் பெருமாள்.

முன்னும் பின்னும் புரவி வீரர்கள் செல்ல, ரதத்தின் இருபுறமும் தீவட்டி ஏந்தியவர்கள் ஓடி வர, பொன் கூரை வேய்ந்த ரதத்திலேயே அவர் பயணம் செய்தார்.

நாராயண நம்பூதிரி என்ன, இதனை எதிர்பார்க்காதவரா?

எதிரி வில்லை ஏந்துவான் என்று தெரிந்ததுமே, மார்பிலே கேடயத்தைக் கட்டிக் கொண்டுவிடும் மாபெரிய ராஜதந்திரியல்லவா? சேர வரலாற்றில் கணித மேதை என்று பெயர் பெற்றவர் அல்லவா அவர்?

அவர் அளந்து கொடுக்கவும் தெரிந்தவர்; அளந்து எடுக்கவும் தெரிந்தவர்.

புதிதாகக் கட்டப்பட்ட நம்பூதிரிகள் சபைக்குச் சேரமான் வந்ததும் கதவைத் திறந்தபடியே, ''எதிர்பார்த்தேன்!'' என்றார் நாராயண நம்பூதிரி.

''காத்துக் கொண்டிருப்பீர்களே என்றுதான் நானும் வந்தேன்!'' என்றார், சேரமான்.

''நான் போடும் கணக்கு எப்போதுமே தப்பாது!''


''என் கணக்கு சில நேரம் தப்பி விடுகிறது. காரணம், நம்பிக்கை!''

''தவறான காரியங்களில், நம்பிக்கை தோற்றுப் போவது இயற்கை!''

''நான் கணிதமேதையல்ல, சுவாமி!''

''ஒரு தலைவன் அப்படி ஒப்புக் கொள்வதில் பெருமையில்லை; அப்படி இருக்க முயற்சி செய்ய வேண்டும்.''





புதிர் விடை

''தத்துவார்த்தங்கள் இருக்கட்டும். உங்களைக் கேட்டுக் கொண்டுதான் பூஜியானுவை நான் தனி மாளிகைக்குக் கொண்டு வந்தேன். இதிலே ராஜ தந்திர விளையாட்டை நடத்த வேண்டிய அவசியம் உங்களுக்கு ஏன் வந்தது?''

''கேரள பூமியில் கேரளத் தென்னைகளையே பயிரிட வேண்டும் என்று நினைப்பதால் வந்தது.''

''பூஜியானுவின் குழந்தைக்குப் பட்டம் கிடைத்துவிடும் என்று பயந்தீர்களா?''

''குலசேகர ஆழ்வாரின் மகுடம் பாஸ்கர ரவிவர்மனை அலங்கரிக்கும் போது, அந்தக் குழந்தையையும் ஏன் அலங்கரிக்கக் கூடாது?''

''அதற்காக நீங்கள் நடத்திய நாடகத்துக்குச் சீர்மாறன் சீர்வல்லவனைத் தேர்ந்தெடுத்த காரணம்?''

''உனக்கு அவன் தந்தை வரகுண பாண்டியன் உதவியபோது எனக்கு அவன் உதவக் கூடாதா?''

''தம்பிரான் சுவாமிகள் பேச்சு... இன்னும் அவர் என்னிடம் வஞ்சத்தோடுதான் பழகிக் கொண்டிருக்கிறார் என்பதைக் குறிக்கிறது.''

''இல்லை; உண்மையான நெஞ்சத்தைத் திறந்து காட்டுகிறார். சேரமான்! கடந்த காலங்களை மறந்து உன்னை நான் நேசிக்க முடியும். இந்தச் சேர வம்சத்தில் உனக்குள்ள பாத்தியதையை ஒப்புக் கொள்ள முடியும்; ஒப்புக் கொண்டிருக்கிறேன்; ஆனால் வேறு நாட்டுப் பெண்ணொருத்திக்குச் சேர வேஷம் போட்டு அவள் பெற்ற பிள்ளையைச் சேர நாட்டு மன்னனாகவும் நான் அங்கீகரிக்க முடியாது. மகுடத்தைப் பற்றியும், பாண்டிய மன்னனின் உதவியைப் பற்றியும் நான் சொன்னது உன்னைக் குத்திக் காட்டுவதற்காக அல்ல; 'உன் போக்கை ஒப்புக்கொண்டிருக்கிறேன்' என்பதை நினைவு படுத்துவதற்காக. ஆனால் இதையும் நான் ஒப்புக்கொள்ள முடியாது. 'பத்மாவதியின் வயிற்றில் ஒரு பசுந்தளிர் பிறக்கவில்லையே, திருவஞ்சைக் களத்துக்கு ஒரு வாரிசு இல்லையே' என்ற கவலை எனக்குண்டு. துரதிர்ஷ்ட வசமாக மார்த்தாண்ட வர்மனுக்கும் வாரிசு இல்லை. வாரிசு இல்லாத மகுடங்களுக்கெல்லாம் வேறு நாடுகளிலிருந்து வாரிசுகள் வருவதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமா?''

''தம்பிரான் சுவாமி! ஏற்கெனவே நான் கூறியிருக்கிறேன், 'எந்த வித வம்ச பாத்தியதையும் பூஜியானு கொண்டாட மாட்டாள்' என்று. இதையே நீங்கள் முன்னால் என்னிடம் சொல்லியிருந்தால் அவளைத் திருப்பி அனுப்பாமலேயே ஒரு முடிவுக்கு வந்திருக்கலாமல்லவா?''

''சேரமான்! சரியாகவோ, தவறாகவோ பழகிய இடத்தில் பாசத்தை வளர்த்துக் கொள்வது எனது பழக்கம். குலசேகர ஆழ்வாரிடம் எனக்குள்ள பாசம் உனக்குத் தெரியும். அதே பாசம் உன்மீதும் எனக்கு ஏற்படத் தொடங்கிற்று. அந்தப் பாசம் பத்மாவதியின் மீதும் பாசமாக வளர்ந்தது. நான் ஒரு நைஷ்டிக பிரமச்சாரி. எனக்குத் திருமணமாகி ஒரு மகள் பிறந்திருந்தால் அந்த மகளை எப்படி நேசிப்பேனோ, அப்படியே அவளையும் நான் நேசிக்கிறேன். இப்படி நான் சொல்வதால் இந்த நாடகத்தில் அவளுக்கும் பங்கிருக்குமோ என்று தப்புக் கணக்குப் போடாதே. உங்களுக்கு இடையேயுள்ள விரிசலை மேலும் அதிகப்படுத்திக்கொள்ளாதே. நிவர்த்தியற்ற அந்தப் பெண்ணுக்கும் ஒரு நிம்மதி கிடைக்குமே என்பதும் என் நடவடிக்கைகளுக்கான காரணங்களில் ஒன்றாகும்.''

''சுவாமி! இவ்வளவு பழகியும் என்னால் உங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. உங்களது பாச உணர்வையும் நான் நாடகம் என்று நினைக்கவில்லை. ஆனால் என் ஆசை உணர்வையும் உங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாதா?''

''ஆசை அழியக் கூடியது; பாசம் நிரந்தரமானது. என் தாயின் மீது எனக்குள்ளது பாசம். என் தாய் நாட்டின் மீது எனக்குள்ளது பாசம்; பத்மாவதியின் மீது எனக்குள்ளது பாசம்; ஆனால், பூஜியானுவின் மீது உனக்குள்ளது வெறும் ஆசையே. ஆசை யார் மீதும் ஏற்படலாம். ஆனால் பாசம் சிலர்மீதுதான் ஏற்படும். ஆசை வைத்

The Society for the Care, Treatment and Training of Children in need of Special Care Bombay

மனநலம் சரியில்லாத குழந்தைகளுக்கு தனி அக்கறையும் ஆதரவும் காட்ட பம்பாயில் இந்த விசேஷ சங்கம் 1949ம் ஆண்டு தொடங்கப்பட்டு மனநோய் ஏற்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை, பயிற்சி அளித்து வருகிறது. *Charity Commissioner*ன் அத்தாட்சியுடன் பொது மக்களிடமிருந்து நிதி உதவி பெற்றும், கலாநிகழ்ச்சிகள் நடத்தியும் இந்தச் சங்கம் செயலாற்றி வருகிறது.

30-11-76 அன்று பம்பாய் ஷண்முகானந்தா சபா அரங்கில் பிரபல திரைப்பட நடிகை **ஹேமமாலினியின்** பரத நாட்டியக் கச்சேரிக்கு இந்தச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. பொதுமக்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மனநோய்க் குழந்தைகளின் சிகிச்சைப் பயிற்சிக்காகத் தங்கள் ஆதரவையும் பொருளுதவியையும் அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

Chairman (Fund's Committee)



G. குமார் – ராஜ்யஸ்ரீ

ஓய்வு பெற்ற மின்சாரவாரிய Personnel Officer ஸ்ரீ N. கோபாலன் அவர்கள் புத்திரரும் BHEL என்ஜினீயருமான சிரஞ்சீவி G. **குமாருக்கும்**, செள. **ராஜ்யஸ்ரீ**க்கும் சென்னையில் 3-11-76 அன்று திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. திருமணத்துக்கு நண்பர்களும், உறவினர்களும் நகரப் பிரமுகர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர்.

நாற்பதாண்டுகளாய் நாய்களுக்குச் சேவை!



நாற்பது ஆண்டுகளாக நாய்களுக்கு அநாதை இல்லம் நடத்தி வருகிறார் இதாலிய மாது வர்ஜீனியா. இன்று எண்பது வயதாகிறது இவருக்கு. வசதியான வாழ்க்கை நடத்தி வந்தவர், அதனைத் துறந்து, ஆதரவற்ற நாய்களுக்குப் பணிவிடை செய்வதையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்டார். இன்று மூவாயிரம் நாய்களையும் அறுபது பூனைகளையும் பராமரிக்கிறார்.

ஒரு நாளைக்கு அறுநூறு டாலர் செலவாகிறது. பணக் கஷ்டம் இல்லாமல் போகுமா? "எப்படியோ என் நாய்களைப் பட்டினி போடாமல் இதுவரை சமாளித்து வருகிறேன்" என்கிறார் வர்ஜீனியா.

- ஹிந்துஸ்தான் டைம்ஸ்

தவர்களை மறப்பது கடினமாக இருக்கலாம்; ஆனால் மறந்துவிட முடியும். பாசம் வைத்தவர்கள் இறந்து போனாலும், நமது மரண பரியந்தம் அவர்களை மறக்க முடியாது. எனக்கும் உனக்கும் இடையே உள்ள பேதம் இதுதான். நீ முடி சூட்டிக் கொண்டதிலிருந்து, "நீங்கள்" என்றே உன்னை அழைத்து வந்த நான் இப்போது உன்னை 'நீ' என்று அழைக்கிறேனே, அதுதான் பாசம். 'நீங்கள்' என்பது மரியாதை. மரியாதை குறையும்; அல்லது அழியும். ஆனால் பாசம் இரும்பாலே செய்யப்பட்ட தூண். கால காலங்களுக்கு அழியாது."

"சுவாமி! நீங்கள் சொல்லும் அனைத்தையும் நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நான் நிம்மதி இழந்து விட்டேனே!"

"எதையும் யாரும் இன்னொருவருக்குக் கொடுத்துவிட முடியும். ஆனால் இந்த நிம்மதியை மட்டும் மனிதன் தன்னிடமிருந்தேதான் பெற்றுக் கொள்ள வேண்டும்."

"அது முடியாமற் போகுமானால்..?"

"ஒரு பலவீனமான மனிதன் அர்த்தமில்லாது மரணமடைந்ததாகத்தான் கதை முடியும்."

"மரணம் இதை விடச் சுகமானது, சுவாமி!"

"ஆசை வயப்பட்ட எல்லோருக்கும் பொதுவான பல்லவிதான் இது. அவசரப்பட்டு இறந்து போகாமல், ஆறப்போட்டுப் பார்த்தால், எதிர் காலத்தில் நாம் நினைத்தது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை நீயே உணர்வாய்."

"நல்லது சுவாமி! அர்த்த சாஸ்திரம் எழுதிய சாணக்கியன்கூட உங்களிடம் பிச்சை வாங்க வேண்டும். வாதத்தில் உங்களை வெல்லும் சக்தி என்னிடம் இல்லை. ஆனால் ஒரே ஒரு விஷயத்துக்கு மட்டும் அருள் புரிவீர்களா...?"

"என்ன அது?"

"இடையில் ஒரு முறை நான் இஸ்ரவேலுக்குச் சென்று அவளைப் பார்த்து வர அனுமதிப்பீர்களா?"

"சேரமான்! வாழ்ந்தால் ஒரேயடியாக வாழ்ந்து விட வேண்டும். மறந்தால் ஒரேயடியாக மறந்து விட வேண்டும். வாழ்வதும் மறப்பதுமாக இருப்பது சித்திரவதை. இன்னும் ஒரு திங்கள் கழித்து நீ யோசித்துப் பார்த்தால், இந்தக் கேள்வியை என்னிடம் கேட்க மாட்டாய். காலத்தால் மட்டுமே தீரக் கூடிய நோயின் பெயரே ஆசை. கவனம் ஒரு பக்கத்திலேயே இருக்குமானால், கவலை அதிகமாகத்தான் இருக்கும். அதை மறு பக்கம் திருப்பு. கேரள தேசத்தைப் புனருத்தாரணம் செய்யத் திட்டமிடு. இந்தப் பக்கம் பல்லவ மண்டலத்தையும், வட பகுதியில் உஜ்ஜயினியையும் வெல்லலாமா என்று யோசனை செய். அரேபியரோடு வர்த்தகத்தை அதிகப் படுத்தலாமா என்று சிந்தி. ஈழ நாட்டை வென்று அந்தச் சிம்மாதனத்தில் ஒரு முறை வீற்றிருக்கலாமா என்று யோசித்துப் பார். கடல் வழிப் பயணம் செய்து கடாரம் போவதென்றும், முன்னீர்ப் பழந் தீவு பன்னீராயிரத்தை வெல்வதென்றும் முடிவு கட்டு. மலை தாண்டிப் போனால் காந்தாரம், கடல் தாண்டிப் போனால் காம்போஜம். ஒரு மன்னனின் ஆண்மை அதில்தான் அடங்கியிருக்கிறதே தவிர ஒருத்தியின் மடிமீது தலை வைத்து விடியும்வரை தூங்குவதிலல்ல. ஒரு மன்னனைக் கொண்டு ஒரு புதிய வம்சத்தையே உருவாக்கினான் சாணக்கியன். உன்னைக் கொண்டு ஒரு அகண்ட கேரளத்தை உருவாக்க நான் விரும்புகிறேன். அதனால்தான் இவ்வளவும் சொல்கிறேன்" என்று சொன்னபடியே திரும்பிப் பார்த்தார் நாராயண நம்பூதிரி. வழக்கமான கதைதான். அவர் பேச்சின் பின் பகுதியைக் கேட்கச் சேரமான் அங்கில்லை.

ராஜசேகர சுவாமி பேசிக் கொண்டிருக்கும்போதே எப்படி அவர் நழுவினாரோ, அப்படியே இப்போதும் நழுவி விட்டார். (தொடரும்)

லட்சம் கண்டவர்!

* டெலிபோன் இலாக்கா கம்ப்யூட்டர்
* லட்சமாவது டெலிபோன் இணைப்பில் முதல் 'கால்'
* ''ஜி. எம்.''

சென்னை ஆள்வார்ப்பேட்டை மகாராஷ்டிர கல்யாண மண்டபத்தில் ஒரு சிவப்பு டெலிபோன். அதற்கு ரிப்பன் கட்டி வைத்திருந்தது! சென்னை டெலிபோன் ஜெனரல் மானேஜர் திரு சுவாமிநாதன் அதிகாரிகள் புடை சூழ நின்று சென்னை நகரத்தில் 'லட்சமாவது டெலிபோனை' மகாராஷ்டிர கல்வி அற நிலையத் தலைவர் பி. ஆர். டோண்டுராவிடம் வழங்கினார்!

மாஜிக் செய்வது திரு சுவாமிநாதனுக்குப் பொழுது போக்கு! ஆனால் லட்சம் இணைப்புக்களை எட்டிப் பிடித்தது மாஜிக் வேலை அல்ல. கடமையில் கண்ட சாதனை. 'வெயிட்டிங் லிஸ்ட்' பெருமளவு குறைந்துவிட்டது என்று பெருமைப்படுகிறார்.

சுவாமிநாதன் இன்ஜினீயரிங் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபொழுது ஒரு பெரியவர் 'உனது பொறி இயல் படிப்புக்கு உதவ வேண்டும் என்பது எனது அவா. மாசம் நூறு ரூபாய் தருகிறேன்' என் று. சுவாமிநாதன் பட்டதாரியாகி அங்கு பணக்கதைத் திருப்பிக் கர அந்தப் பெரியாரை அணுகிய போது, ''அப்பா! என் உதவி சங்கிலித் தொடர் போல் தொடர்ந்து கொண்டேயிருக்க வேண்டும். நீயும் ஒரு புத்திசாலி மாணவனுக்கு உதவி செய்'' என்று கூறிவிட்டார்! அவரது வாக்கை இன்னும் நிறைவேற்றி வருகிறார் சுவாமிநாதன்.

'' லட்சம் கண்ட டெலிபோன் இலாகா அதைப் பிரமாதமாக விழா எடுத்துக் கொண்டாடியிருக்கலாமே ?''


'' எங்களுக்குக் கடமைதான் பெரிசு. அந்த ஆடம்பரமெல்லாம் எதற்கு? சமீபத்தில் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் ஒன்றினை தொழிலாளி ஒருவரைக் கொண்டே திறந்து வைக்கச் செய்தோம்!'' என்று ஒரு போடு போடுகிறார் ஜெனரல் மானேஜர் சுவாமிநாதன்.

''ஜெனரல் மானேஜரான தாங்கள் டெலிபோன் இணைப்புக்களில் கோளாறுகளை நீக்க எடுக்கும் முயற்சிகள் என்னென்ன?''

''டெலிபோன் எக்ஸ்சேஞ்சுகளில் கம்ப்யூட்டர் முறை அமுலாக்கப்பட்ட பிறகு டெலிபோன் இணைப்புக்களில் பத்து மணிநேரம் தவறு இருப்பதை இரண்டரை மணி நேரத்துக்குக் குறைத்திருக்கிறோம். ஒவ்வொரு எக்ஸ்சேஞ்சிலும் அகில இந்திய ரீதியில் நூற்றுக்கு முப்பத்தைந்து சரியாக இயங்காமல் இருக்கும். நம் சென்னை நகரைப் பொறுத்த வரையில் நூறுக்கு இருபது டெலிபோன்கள்தானே அப்படி இருக்கின்றன.''









''மீட்டர் ரீடிங் பற்றிக் கூடச் சர்ச்சை எழுந்ததல்லவா?''

''ஆம்! சென்னை டெலிபோன் இலாகா ஆறு லட்சம் பில்கள் தயாரித்து அனுப்புகிறது. சிற்சில பில்களில் தவறுகள் எழலாம். அப்படிச் சந்தேகம் எழும் பில்களில் பலவற்றுக்கு நாங்கள் 'ரிபேட்' வழங்கிவிடுகிறோம். 1975–76 ஆண்டுகளில் 3.3 லட்சமும் 1976–77ல் ஏழு மாதங்களுக்கு ரூ. 1.75 லட்சமும் 'ரிபேட்' பணம் கொடுத்திருக்கிறோம்!'' என்கிறார் திரு சுவாமிநாதன்.

இலட்சம் டெலிபோன் இணைப்புக்களைக் கொடுத்துள்ள சென்னை டெலிபோன் இலாகா ''லட்சத்தில் ஒன்று'' என்றும் புகழ் பெற வேண்டும் என வாழ்த்தி விடைபெற்றேன்.

— பி.எஸ்.எம்.

ஊருக்கு உழைப்பவன்



கடமைக்கும் குடும்பப் பாசத்துக்கும் இடையே சிக்கித் தவிக்கும் கதாநாயகனை வைத்துக் கொண்டு எத்தனையோ தமிழ்ப் படங்கள் வெளிவந்துவிட்டன — அதுவும் எம். ஜி. ஆரையே கதாநாயகனாக வைத்து! நல்லோரைக் காப்பாற்றுவது, தீயவர்களை உதைத்து ஒடுக்குவது - இதுவும் அவரது பழைய உத்திதான். எம். ஜி. ஆர். சினிமாத் துறையில் அடைந்து வரும் வெற்றியின் ரகசியமே அதுதானே! அதிலும், இரு வேடம் ஏற்று நடிப்பது அவருக்குக் கைவந்த கலை; இப்படத்திலும் அந்த நீண்ட நெடு நாள் சம்பிரதாயம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது!

வாணிஸ்ரீ, 'வெண்ணிற ஆடை' நிர்மலா இருவரும் இரு எம். ஜி. ஆர்.களுக்கும் கதாநாயகிகள். வாணிஸ்ரீ உருக்கமாகவும், கதாநாயகனுடன் நெருக்கமாகவும் நடித்து ரசிகர்களுக்கு 'கிளுகிளுப்'பூட்டுகிறார்; கண் கலங்கவும் வைக்கிறார். வெ. ஆ. நிர்மலா நவீனமாக வந்து, நயமாகப் பேசி, நாசூக்காக நடித்து நல்ல பெயரைத் தட்டிக் கொள்ளுகிறார். வாணிஸ்ரீயுடன் நெருக்கமாக நடித்த எம். ஜி. ஆர். நிர்மலாவை மட்டும் விட்டு வைக்கவில்லை. மாற்றான் மனைவியாக வரும் அவருடன் எப்படி நெருங்கி நடிக்க முடியும் என்றுதானே கேட்கிறீர்கள்? அதற்





குத்தான் கனவுக் காட்சி என்று ஒன்று இருக்கிறதே! அப்படிக் கூட எந்தப் பெண்ணாவது ஏமாந்து போவாளா, துளிக்கூடச் சந்தேகம் ஏற்படாதா, ஒரே மாதிரி அச்சாக உருவ ஒற்றுமை ஏற்பட முடியுமா என்று கேட்பதில் பலனில்லை...மூச்!

எம். ஜி. ஆர். தமக்கே உரிய லாகவத்துடன் சண்டைக் காட்சிகளில் பரபரப்பும், சுறுசுறுப்பும் காட்டிப் படத்துக்கு விறுவிறுப்பூட்டியிருக்கிறார்; வழக்க..துக்கு மாறாக இப்படத்தில் கண் கலங்..்பும் இருக்கிறார்! குமாரி பத்மினி புடவையை வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக் காட்சிகளில்... ஆண்பிள்ளை கெட்டான் போங்கள்! ஜொலியாக நடிக்க வழியில்லையே என்பதற்காக இந்த அசிங்கம் பிடித்த 'ஸ்டண்ட்' வேலைகளா?

வாணி ஜெயராம், ஜேசுதாஸ் இருவரின் இனிமையான பாடல்களும் மன நிறைவைத் தருகின்றன. என். பாலகிருஷ்ணனின் ஒளிப்பதிவு கண்ணையும், கருத்தையும் கவர்கிறது. 'ஈஸ்ட்மென் கலர்' படத்துக்கு மெருகு சேர்த்திருக்கிறது.

விஜய் பிக்சர்ஸாரின் 'ஊருக்கு உழைப்பவன்' மாதிரி எல்லாச் சௌகரியங்களும் கிடை..த்தால் எல்லாரும் ஊருக்கு உழைக்கத் தயார்! சரிதானே!

— காந்தன்

"தாரகைகளைக் கோத்தாற் போன்ற முத்து வடமும், மணங் கமழும் சந்தனக் குழம்பும் சீர்மையும் இளமையும் பொருந்திய அழகிய முலைகளிலே கண்ணகிக்குச் சேராது ஒழிந்தன. தாது பொருந்திய செங்கழு நீரின் குளிர்ந்த மாலையானது முல்லை மலருடன் சேர்ந்து அவளது கூந்தலிலே பொருந்தாது ஒழிந்தது. சந்தனத் துளிர்கள் அவளுடைய செந்தளிர் வண்ண மேனியிலே சேராது ஒழிந்தது. அணிகலன்களும் ஒப்பனைகளுமின்றிப் புகாரில் கோவலனைப் பிரிந்திருந்த நாட்களிலே எந்தக் கோலத்தில் இருந்தாளோ அதே அவலத்தில்தான் அவனைக் கைப் பிடித்து வழி நடக்கும் நேரத்திலும் கண்ணகி இருந்தாள் என்கிறார்' இளங்கோ. ஆம்; வறுமையின் வடிவமாகக் காட்சி அளித்தாள்.

பன்மீன் தானையோடு பாற்கதிர் பரப்பி
தென்னவன் குல முதல் செல்வன் தோன்றி,
புலவர் நாவிற் பொருந்திய தென்றலொடு
பால் நிலா வெண்கதிர் பாவை
மேற் சொரிய,
வேனில் திங்களும் வேண்டுதி என்றே
பார் மகள் அயா உயிர்த்து.
அடங்கிய பின்னர்.

"பல விண்மீன்களாகிய தன் படையோடு பால் போன்ற கதிர்களைப் பரப்பியவனாகத் தென்னவர்குல முதல்வனான சந்திரன் வானிலே தோன்றினான். அவனுடைய நிலவுக் கதிர்கள் கண்ணகியின் திருமேனியில் படிவது



கண்டு, 'இவ்வேனிற் காலத்துந் திங்கள் ஒளியினை நீயும் வேண்டுகின்றாயோ?' என்று நிலமகள் அவளைப் பார்த்துப் பெருமூச்சு எறிந்து அடங்கினாள்.

இந்த வரிகளுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், "மாதவியோடு புலந்து போதலானும், மதுரைக்குச் சேறற்கு ஒருப்பட்ட நெஞ்சினனாதலானும், மேற்கவுந்தியடிகளுடன் வழிச் சேரலானும் யாண்டும் மெய்யுறன் மாத்திர மல்லது புணர்ச்சி இல்லெனை உணர்க" என்று கூறுகிறார்.

இரவில் காட்டு வழியே நடப்பது கண்ணகிக்கு அச்சத்தைத் தருவதாக இருந்தது. அந்த அச்சத்தைப் போக்க விரும்பிய கோவலன் அவளிடம் பின்வருமாறு சொல்லுகின்றான் :

கொடு வரி மறுகும்; குடிஞை கூப்பிடும்;
இடிதரும் ஒளியமும்; இணையாது ஏகு!

"கொடிய புலிகள் உறுமும்; கோட்டான்கள் அலறும்; கரடிகள் முழங்கும். இருந்தாலும், இது செங்கோல் தென்னவர் காக்கும் நாடு ஆதலால், நீ நடுங்காமல் செல்வாயாக"

கண்ணகியினுடைய வளையணிந்த கையைத் தன் தோளின் மீது சாத்திக் கொண்டு நடந்தான். மறவுரைகளை நீக்கிய மாசற்ற கேள்விகளைக் கவுந்தியடிகள் வழி நெடுகச் சொல்லிக் கொண்டே சென்றார். அவ்வுரைகளைக் கேட்டுக் கொண்டே கடத்தற்கரிய காட்டுப் பிரதேசத்தைக் கண்ணகியும் கோவலனும் கடந்தனர்.

மாதவியாள், கண்ணகியைக் கைப் பிடித்துக் கோவலன் புகார் நகரிலிருந்து புறப்பட்டு மதுரை நோக்கிச் சென்றது கேட்டு, மன அதிர்ச்சி அடைந்தாள். அதனால், தனது ஆற்றாமையைத் தெரிவிக்கும் கடிதத்தை எழுதி, அதனை அறிவு நிறைந்த அந்தணனான கோசிகமாணி என்பானிடம் தந்து, எப்படியேனும் கோவலனைக் கண்டு பிடித்து, அவனிடம் கடிதத்தைக் கொடுக்குமாறு கூறி அனுப்பி வைத்தாள்.

கோசிகன் பல நாட்கள் நடந்து, வழி நெடுகக் கோவலனைத் தேடியலைந்து, இறுதியில் கண்டு பிடித்துவிட்டான். ஆனால், அவன் தான் கோவலன் என்று உறுதி செய்ய அவனால் முடியவில்லை. அதனால், ஒரு சூழ்ச்சி செய்தான். பரிய இலைகளை உடைய குருக்கத்தி பார்க்க [illegible] பக்கமாக நின்று கொண்டு [illegible] கூறினான் :

"கோவலன் பிரியக் கொடுந் துயர் எய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றுஇவ்
அருந்திறல் வேனிற்கு அலர்களைந்து உடனே,
வருந்தினை போலும் நீ, மாதவி!"

"கோவலனுடைய பிரிவு காரணமாகக் கொடுந் துயரம் எய்திய கரிய மலர் போன்ற நெடுங் கண்களை உடைய மாதவியைப் போன்று வேனில் கொடுமைக்கு ஆற்றாது நீயும் வருந்திப் பொலிவிழந்தாய் போலும் மாதவி?" என்றான் கோசிகன் மாதவிக்கொடியைப் பார்த்து. (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து.)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!





பியர்ஸ்— அசல் கிளிசரின் சோப்

கனிவான பியர்ஸ் சோப்பினால் காத்திடுவீர்
உங்கள் மேனி மெருகை, மாணிக்கப் படிகம்போல்
மிளிரும் ஒவ்வொரு வில்லையிலும் ஒரு நூறாண்டு
கால சோப்-உற்பத்தி அநுபவம் உள்ளிறங்கியுள்ளது.
பிஞ்சு மென்மை கொஞ்சும் பியர்ஸ்—தூய்மைக்
கொழுந்து—கண்கூடாக நீங்கள் ஊடுருவிப்
பார்க்கக்கூடிய உன்னதத் தூய்மை.

பியர்ஸ் சருமக் களை...
கன்னிப் பருவக் களை

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-PS. 56-140 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு